உ

முருகா

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

அருளிச்செய்த

திருப்புகழ்த் திரட்டு

தொகுப்பாசிரியர் :

கிருபானந்தவாரி

("திருப்புகழமிர்தம்" ஆசிரியர்)

திருப்புகழமிர்தம் காரியாலயம்

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

1957

9-ம் பதிப்பு மார்ச்சு—1957.

பொருளடக்கம்

திருப்புகழமிர்தம் அச்சகம்,
144, சாமிநாயகன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

உ

முருகா.

முன்னுரை

மூவர்தேவாதிகள் தம்பிரானும், முழுமுதற்கடவுளும், ஓலமறைகளறைகின்ற ஒரு பரம்பொருளுமாகிய முருகப் பெருமானுடைய திருவருள் முழுதும் பெற்று, அவ்வருளை எம்மனோரும் பெறும்பொருட்டு பரமகருணையால் ஸ்ரீஅருண கிரிநாத சுவாமிகள் பதினாறாயிரம் தமிழ்வேதத் திருப்புகழை யும், பிற நூல்களையும் பாடியருளினர். சகல வேதாகம புராணேதிகாச சாரமாகிய திருப்புகழை அன்புடன் ஓது பவர் இகபர நலன்களை எளிதிற் பெறுவர் என்பது ஒருதலை.

நமது தமிழ்நாடு செய்த தவக்குறைவால் அத் திருப் புகழ் முழுதும் கிடைத்திலது. உயர்திரு. வ. த. சுப்பிர மணிய பிள்ளையவர்கள் அருமுயற்சியாலும் அவர்களது புதல்வர்களாலும் 1308 திருப்புகழ்ப் பாடல்களைத் தமிழ்நாடு பெற்று மகிழ்ந்தது.

மதுரை எமது சற்குரு மூர்த்திகளும், திருப்புகழைப் பரவச் செய்வதே தமது பிறவியின் பயனாகக் கொண்ட பெருந்தகையினரும், தவசீலருமாகிய பிரம்மஸ்ரீ திருப்புகழ் சாமி ஐயர் அவர்கள், பாராயணத்திற்கென சில பாடல் களைத் திரட்டி மூன்று முறை அச்சிட்டு உலகிற்கு உதவி செய்தனர். காங்கேயநல்லூரில் எமது தந்தையார் ஸ்ரீமான் மல்லையதாஸ் பாகவதர் அவர்களால் நிறுவப்பட்ட திருப்புகழ்ச் சபையார் சில பாடல்களைச் சேர்த்து நான்கா வது பதிப்பை வெளியிட்டார்கள்.

"ஸ்கந்தஸ்யகீர்த்திம் அதுலாம் கலிகல்மஷ நாசினீம்" என்றபடி உலகமெல்லாம் எம்பெருமானுடைய திருப் புகழையே ஓதி வினைகளினின்றும் விடுபட்டு வீடு பேற்றைப் பெறும்பொருட்டு அநேக யோக ஞான பர மான பாசுரங்களையும் சேர்த்து யாம் மேற்கொண்டு வெளியிட்ட நான்கு பதிப்புக்களும் செலவாகி, ஒன்பதாவது பதிப்பாக இந்நூல் வெளிவருகின்றது. இதனை அன்பர் கள் அனைவரும் ஓதி என்றுமழியா இன்பத்தைப் பெற்று இனிது உய்வார்களாக.

இங்ஙனம்:

திருப்புகழ்த்தொண்டன், கிருபானந்தவாரி.

உ
முருகா


ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்

வரலாற்றுச் சுருக்கம்

நினைக்க முத்தியளிக்கும் திருவருணையிலே, பதினைந்தாம் நூற்றாண்டில் பிரபுடதேவ மகாராஜன் காலத்தில் உருத்திர கணிகையர் மரபிலே முத்தம்மையாருடைய திருவுதரத்திலே ஆதியம்மையாருக்கு இளவலாக, அறுமுகப்பெருமான் திருவருளால் தெய்வக் கருவாகத் தோன்றி, உத்தராயணங் கழிந்த ஆருவது பௌர்ணமியில் அஞ்ஞான இருளை மாய்க்கும் மெய்ஞ்ஞான பானுவாகத் திருவவதரித்து, அருணகிரியார் என்ற திருநாமத்துடன் வளர்வாராயினர். இளமைப்பருவத்திலேயே தாய் கந்தவேள் கழலிணையில் கலந்தனள். திருமுருகன் திருவருள் கைகூடாமையால் தமது இளமைப் பருவத்தில் மாயாநெறிப்பட்டு அதனுல் பிணியுற்று வருந்தி, வல்லாளன் கோபுரத்தினின்றும் கீழேவிழ, 'ஆபத்திலஞ்சேலென்ற' அறுமுகக் கடவுள் அடியார் திருவடிவுடன் வெளிப்பட்டு ''சும்மாயிரு சொல்லற'' என்ற மௌன மந்த்ரோபதேசம் புரிந்து மறைய, அருணகிரியார் பிணிநீங்கி வச்சிரதேகம் பெற்று நிருவிகற்பசமாதியில் நிலைத்திருந்தனர். வள்ளி மணவாளன் புள்ளி மயில்மேற் ருேன்றி திருப்புகழைப்பாட ''முத்தைத் தரு ''என்ற அடியெடுத்துக்கொடுக்க, அருணகிரியார் கடல்மடை திறந்த வெள்ளம் போல் தடைபடாத தனிவாக்கு பெற்றுப் பெருமான் பணித்த வண்ணம் வயலூர் சென்று பொய்யாக் கணபதியைத் தொழுது ''கைத்தல'', ''பக்கரை'' முதலிய திருப்புகழ்ப் பாக்களைப்பாடி, ஆருதாரங்களையும் அமைத்து ஆறுபடைவீட்டு முறையாக திருப்புகழைப் பாடுவாராயினர்.

முருகப்பெருமான் எழுந்தருளிய திருத்தலங்கள் தோறும் சென்று திருப்புகழாகிய திருவலங்கலைப் பன்னிரு புயத்திலும் சூட்டுவாராயினுர். சிதம்பரம், கொடுங்குன்றம், செந்தில், தணிகை முதலிய தலங்களில் திருநடன கோலமுங் கண்டு களித்தனர். பழநியில் ஜெபமாலை பெற்றனர். புலவர்களது வேண்டுகோளுக் கிணங்கி வில்லிபுத்தூரரைச் சந்தித்து கந்தரந்தாதி பாடி வென்று கர்னதானம் புரிந்தனர், திருவேரகத்தில் உடன்பிறந்தாளாகிய ஆதியம்மையாருக்கு கந்த உலகத்தை நல்கினர். திருவருணையில் செருக்குற்றிருந்த

2192



அறுமுகச்சிவனர் அருணகிரிநாதருக்கு அருள்புரிந்தது

சம்பந்தாண்டானை வாதில் வென்று கம்பத்திளையனாராகக் கந்த வேளை வரவழைத்து பிரபுடதேவனாதி யாவருக்குங் காட்டி இன்னருள் புரிந்தனர்.

திருப்புகழாகிய தெய்வஇளங் கதிரொளியை எங்கணும் பரவச் செய்து முடிவில் சுக சொரூபமுற்று முருகவேள் திருக் கரத் தமர்ந்தனர்.

இவர் பாடிய பிறநூல்கள், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்த ரலங்காரம், கந்தரநுபூதி முதலியனவாம். இவர் பாடிய திருப் புகழின் எண் பதினாருயிரம்.

''எம்மருண கிரிநாத ரோது
பதினாருயிரந் திருப்புகழமுதுமே''

—வரகவி மார்க்கசகாயதேவர்.

வாக்கிற்சிறந்தவர் அருணகிரிநாதரே என்பதை,

வாக்கிற் கருணகிரி வாதவூரார் கனிவில்
தாக்கிற் றிருஞான சம்பந்தர்—நோக்கிற்கு
நக்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக் கப்பரெனச் சொல்.

என்ற திருவிருத்தத்தாலும், கருணையின் மிக்கவர் என்பதை ''கருணைக்கருணகிரி'' என்பதனாலுமுணர்க.

அருணகிரிநாதருடைய பெருமை எம்மனோரால் எடுத்தியம்பற் பாலதன்று. அநுபூதிச்செல்வராகிய தாயுமான அடிகள் துதிப் பனவற்றால் ஒருவாறுணர்க.

''ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர்யார்?—வையகத்தோர்
சாற்றரிதென் றேசற்றார் தன்னையாய் முக்கணெந்தை
நாற்றிசைக்குங் கைகாட்டினான்.

''கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன
எந்தையருள் நாடி யிருக்குநாள் எந்நாளோ?

''யான்றான் எனலறலே இன்பநிட்டை யென்றருணைக்
கோன்றா னுரைத்த மொழி கொள்ளாயோ?''

—:0:—

திருப்புகழ்ச் சிறப்புப்பாயிரம்

1. எல்லாரு ஞானத் தெளிஞரே கேளீர்சொல்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ?—பொல்லாக்
கருப்புகழைக் கேட்குமோ கானமயில் வீரன்
திருப்புகழைக் கேட்குஞ் செவி.

—:—

2. வேதம்வேண் டாம்சகல வித்தைவேண் டாம்கீத
நாதம்வேண் டாம்ஞான நூல்வேண்டாம்—ஆதி
குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் தாள்போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்.

நூற் பயன்

3. ஞானம் பெறலாம் நலம்பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம்பெறலாம்—மோனவீ
டேறலாம் யானைக் கிளையான் திருப்புகழைக்
கூறினர்க் காமேயிக் கூற்று.

4. ஆறுமுகந் தோன்றும் அழகியவேல் தோன்றுமவன்
ஏறுமயில் தோன்றும் எழில்தோன்றும்—சீறிவரு
சூரன் முடியைத் துணித்தோன் திருப்புகழைப்
பாரில் வழுத்தினோர் பால்.

5. பொருப்பது பொடிப்பட விடுத்திடுகை வேலா
இருப்பிட முனக்கெது எனக்கரு ளியம்பாய்
உருக்கநல் விழுக்குல மொழுக்கமில ரேனும்
திருப்புகழ் படிப்பவர் மனத்தினி லிருப்பாம்.

6. திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலு வாலே
ஒருத்தரை மதிப்பதிலை யுன்றனரு ளாலே
பொருப்புகழ் மிகப்பொருது வென்றுமயில் மீதே
தரித்தொரு திருத்தணியில் நின்ற பெருமாளே.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணசல மமர்ந்தபெரு மாளே.

திருப்புகழ் பாட்டு முதற்குறிப்பகராதி

—::—

உ
குகமயம்

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த

திருப்புகழ்

விநாயகர் துதி

1

கைத்தல நிறைகனி யப்பமோ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவ
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

2

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே

தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமாளே.

3

பக்கரைவி சித்ரமணி பொற்கலணை யிட்டநடை
பட்சியெனு முக்ரதுர கமுநீபப்
பக்குவம லர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள்கை வடிவேலும்
திக்கதும திக்கவரு குக்குடமும் ரட்சைதரு
சிற்றடியு முற்றியப னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர்தி ருப்புகழ்வி ருப்பமொடு
செப்பெனஎ னக்கருள்கை மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடனெய்
எட்பொரிய வற்றுவரை யிளநீர்வண்
டெச்சில்பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள
ரிப்பழமி டிப்பல்வகை தனிமூலம்
மிக்கஅடி சிற்கடலை பட்சணமெ னக்கொளொரு
விக்கினச மர்த்தனெனு மருளாழி
வெற்பகுடி லச்சடில விற்பரம ரப்பரருள்
வித்தகம ருப்புடைய பெருமாளே.

4

விடமடைசு வேலை யமரர்படை சூலம்
விசையன்விடு பாண மெனவேதான்
விழியுமதி பார விதமுமுடை மாதர்
வினையின்விளை வேது மறியாதே
கடியுலவு பாயல் பகலிரவெ னாது
கலவிதனில் மூழ்கி வறிதாய

கயவனறி வின னிவனுமுயர் நீடு
கழலிணைகள் சேர அருள்வாயே
இடையர் சிறு பாலை திருடிகொடு போக
இறைவன்மகள் வாய்மை யறியாதே
இதயமிக வாடி யுடையபிளை நாத
கணபதியெ னும முறைகூற
அடையலவ ராவி வெருவஅடி கூர
அசலுமறி யாம லவரோட
அகல்வதென டாசொ லெனவுமுடி சாட
அறிவருளும் ஆனை முகவோனே.

நூல்

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோதும்
முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்
பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்
பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வது மொருநாளே
தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்கந டிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவு ரிக்குத் த்ரிகடக எனவோதக்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே.

முதற் படைவீடாகிய

திருப்பரங்குன்றம்

1

உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்தில னொருதவ மிலனுன தருள்மாறு
உளத்து ளன்பின ருறைவிட மறிகிலன்
விருப்பொ டுன்சிக ரமும்வலம் வருகிலன்
உவப்பொ டுன்புகழ் துதிசெய விழைகிலன்
மலைபோலே
கனைத்தெ ழும்பக டதுபிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலித னுழையினர்
கதித்த டர்ந்தெறி கயிறடு கதைகொடு பொருபோதே
கலக்கு றுஞ்செய லொழிவற அழிவுறு
கருத்து நைந்தல முறுபொழு தளவைகொள்
கணத்தி லென்பய மறமயில் முதுகினில் வருவாயே
வினைத்த லந்தனி லலகைகள் குதிகொள
விழுக்கு டைந்துமெ யுகுதசை கழுகுண
விரித்த குஞ்சிய ரெனுமவு ணரையமர் புரிவேலா
மிகுத்த பண்பயில் குயில்மொழி யழகிய
கொடிச்சி குங்கும முலைமுக டுழுநறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை யுடையோனே

தினத்தி னஞ்சதுர் மறைமுனி முறைகொடு
புனற்சொ ரிந்தலர் பொதியவி ணவரொடு
சினத்தை நிந்தனை செயுமுனி வரர்தொழ
மகிழ்வோனே
தெனத்தெ னந்தன எனவரி யளிநறை
தெவிட்ட அன்பொடு பருகுயர் பொழில்திகழ்
திருப்ப ரங்கிரி தனிலுறை சரவண பெருமாளே.

2

மன்றலங் கொந்துமிசை தெந்தனந் தெந்தனென
வண்டினங் கண்டுதொடர் குழல்மாதர்
மண்டிடுந் தொண்டையமு துண்டுகொண் டன்புமிக
வம்பிடுங் கும்பகன தனமார்பில்
ஒன்றஅம் பொன்றுவிழி கன்றஅங் கங்குழைய
உந்தியென் கின்றமடு விழுவேனை
உன்சிலம் புங்கனக தண்டையுங் கிண்கிணியும்
ஒண்கடம் பும்புனையும் அடிசேராய்
பன்றியங் கொம்புகம டம்புயங் கஞ்சுரர்கள்
பண்டையென் பங்கமணி பவர்சேயே
பஞ்சரங் கொஞ்சுகிளி வந்துவந் தைந்துகர
பண்டிதன் தம்பியெனும் வயலூரா
சென்றுமுன் குன்றவர்கள் தந்தபெண் கொண்டுவளர்
செண்பகம் பைம்பொன்மலர் செறிசோலை
திங்களுஞ் செங்கதிரு மங்குலுந் தங்குமுயர்
தென்பரங் குன்றி லுறை பெருமாளே.

3

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப் பயின்று
கடையில்வந்து தித்துக் குழந்தை வடிவாகி

கழுவியங்கெ டுத்துச் சுரந்த
முலையருந்து விக்கக் கிடந்து
கதறியங்கை கொட்டித் தவழ்ந்து நடமாடி

அரைவடங்கள் கட்டிச் சதங்கை
யிடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
யவையணிந்து முற்றிக் கிளர்ந்து வயதேறி

அரிய பெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணியுழன்று சுற்றித் திரிந்த
தமையுமுன்க்ரு பைச்சித்த மென்று பெறுவேனோ

இரவி யிந்த்ரன் வெற்றிக் குரங்கி
னரச ரென்று மொப்பற்ற வுந்தி
யிறைவனெண் கினக்கர்த்த னென்றும் நெடுநீலன்

எரிய தென்றும் ருத்ரற் சிறந்த
அநும னென்றும் ஒப்பற்ற அண்டர்
எவரு மிந்த வர்க்கத்தில் வந்து புனமேவ

அரிய தன்ப டைக்கர்த்த ரென்று
அசுரர் தங்கி லேக்கட்டை வென்ற
அரிமு குந்தன் மெச்சுற்ற பண்பின் மருகோனே

அயனை யும்பு டைத்துச் சினந்து
உலக மும்ப டைத்துப் பரிந்து
அருள் பரங்கி ரிக்குட் சிறந்த பெருமாளே

4

கனகந்திரள் கின்றபெ ருங்கிரி
தனில்வந்துத கன்தக னென்றிடு
கதிர்மிஞ்சிய செண்டை யெறிந்திடு கதியோனே

கடமிஞ்சி யநந்த விதம்புணர்
கவளந்தனை யுண்டு வளர்ந்திடு
கரியின்றுணை யென்று பிறந்திடு முருகோனே

பணகந் துயில் கின்ற திறம்புனை
கடல்முன்பு கடைந்த பரம்பரர்
படரும்புய லென்றவ ரன்புகொள் மருகோனே
பலதுன்ப முழன்று கலங்கிய
சிறியன் புலை யன்கொலை யன்புரி
பவமின்று கழிந்திட வந்தருள் புரிவாயே
அனகன்பெயர் நின்றுரு ளுந்திரி
புரமுந்திரி வென்றிட வின்புடன்
அழலுந்தந குந்திறல் கொண்டவர் புதல்வோனே
அடல்வந்து முழங்கி யிடும்பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டென
அதிர்கின்றிட அண்ட நெரிந்திட வருசூரர்
மனமுந்தழல் சென்றிட வன்றவ
ருடலுங்குட லுங்கிழி கொண்டிட
மயில்வென்றனில் வந்தரு ளுங்கன பெரியோனே
மதியுங்கதி ருந்தட வும்படி
யுயர்கின்ற வனங்கள் பொருந்திய
வளமொன்று **பரங்கிரி** வந்தருள் பெருமாளே.

5

சருவும்படி வந்தன னிங்கித
மதனின்றிட அம்புலி யுஞ்சுடு
தழல்கொண்டிட மங்கையர் கண்களின் வசமாகி
சயிலங்கொளு மன்றல் பொருந்திய
பொழிலின்பயில் தென்றலு மொன்றிய
தடவஞ்சுனை துன்றி யெழுந்திட இதமாவே
இரவும்பக லந்தியு நின்றிடு
குயில்வந்திசை தெந்தன வென்றிட
இருகண்கள் துயின்றிட லின்றியும் அயர்வாகி

இவணெஞ்சு பதன்பத னென்றிட
மயல்கொண்டுவ ருந்திய வஞ்சகன்
இனியுன்றன்ம லர்ந்தில கும்பதம் அடைவேனே
திருவொன்றிவி ளங்கிய அண்டர்கள்
மனையின் தயி ருண்டவ னெண்டிசை
திகழும் புகழ் கொண்டவன் வண்டமிழ்
பயில்வோர்பின்
திரிகின்றவன் மஞ்சு நிறம்புனை
பவன்மிஞ்சு திறங்கொள வென்றடல்
ஜெயதுங்க முகுந்தன் மகிழ்ந்தருள் மருகோனே
மருவுங்கடல் துந்துமி யுங்குட
முழவங்கள் குமின்குமி னென்றிட
வளமொன்றிய செந்திலில் வந்தருள் முருகோனே
மதியுங்கதி ரும்புய லுந்தின
மறுகும்படி அண்ட மிலங்கிட
வளர்கின்ற பரங்கிரி வந்தருள் பெருமாளே.

6

காதட ருங்கயல் கொண்டிசைந் தைம்பொறி
வாளிம யங்கம னம்பயந் தந்திருள்
கால்தர விந்துவி சும்பிலங் கும்பொழு தொருகோடி
காய்கதி ரென்ருெளிர் செஞ்சிலம் புங்கனை
யாழியு டன்கட கந்துலங் கும்படி
காமனெடுஞ்சிலை கொண்டடர்ந்தும்பொருமயலாலே
வாது புரிந்தவர் செங்கைதந் திங்கித
மாக நடந்தவர் பின்திரிந் துந்தன
மார்பில முந்தவ ணைந்திடுந் துன்பம துழலாதே
வாச மிகுந்தக டம்பமென் கிண்கிணி
மாலை கரங்கொளு மன்பர்வந் தன்போடு
வாழ நிதம்புனை யும்பதந் தந்துன தருள்தாராய்

போதி லுறைந்தருள் கின்றவன் செஞ்சிர
மீது தடிந்துவி லங்கிடும் புங்கவ
போத வளஞ்சிவ சங்கரன் கொண்டிட
மொழிவோனே
பூக முடன்திகழ் சங்கினங் கொண்டகி
ரீவ மடந்தைபு ரந்தரன் தந்தருள்
பூவைக ருங்குற மின்கலந் தங்குப னிருதோளா
தீதக மொன்றினர் வஞ்சகந் துஞ்சியி
டாதவர் சங்கரர் தந்ததென் பும்பல
சேர்நிரு தன்குல மஞ்சமுன் சென்றடு திறலோனே
சீதள முந்தும ணந்தயங் கும்பொழில்
சூழ்தர விஞ்சைகள் வந்திறைஞ் சும்பதி
தேவர்ப ணிந்தெழு தென்பரங் குன்றுறை
பெருமாளே.

7

வரைத்தடங் கொங்கை யாலும்
வளைப்படுஞ் செங்கை யாலும்
மதர்த்திடுங் கெண்டை யாலு மனைவோரும்
வடுப்படுந் தொண்டை யாலும்
விரைத்திடுங் கொண்டை யாலும்
மருட்டிடுஞ் சிந்தை மாதர் வசமாகி
எரிப்படும் பஞ்சு போல
மிகக்கெடுந் தொண்ட னேனும்
இனற்படுந் தொந்த வாரி கரையேற
இசைந்திடுஞ் சந்த பேத
மொலித்திடுந் தண்டை சூழும்
இணைப்பதம் புண்ட ரீக மருள்வாயே
சுரர்க்குவஞ் சஞ்செய் சூர
னிளக்ரவுஞ் சந்த னோடு
துளக்கெழுந் தண்ட கோள மளவாகத்

துரத்தியன் றிந்த்ர லோக
மழித்தவன் சம்ப்ர தாயம்
சுடப்பருஞ் சண்ட வேலை விடுவோனே
செருக்கெழுந் தும்பர் சேனை
துளக்கவென் றண்ட மூடு
தெழித்திடுஞ் சங்க பாணி மருகோனே
தினைப்புனஞ் சென்று லாவு
குறத்தியின் பம்ப ராவு
திருப்பரங் குன்ற மேவு பெருமாளே.

8

தடக்கைப் பங்கயங் கொடைக்குக் கொண்டல்தண்
டமிழ்க்குத் தஞ்சமென் றுலகோரைத்
தவித்துச் சென்றிரந் துளத்திற் புண்படுந்
தளர்ச்சிப் பம்பரந் தனையூசற்
கடத்தைத் துன்பமண் சடத்தைத் துஞ்சிடுங்
கலத்தைப் பஞ்சஇந் த்ரியவாழ்வைக்
கணத்திற் சென்றிடந் திருத்தித் தண்டையங்
கழற்குத் தொண்டுகொண் டருள்வாயே
படைக்கப் பங்கயன் துடைக்கச் சங்கரன்
புரக்கக் கஞ்சைமன் பணியாகப்
பணித்துத் தம்பயந் தணித்துச் சந்ததம்
பரத்தைக் கொண்டிடுந் தனிவேலா
குடக்குத் தென்பரம் பொருப்பிற் றங்குமங்
குலத்திற் கங்கைதன் சிறியோனே
குறப்பொற் கொம்பைமுன் புனத்திற் செங்கரங்
குவித்துக் கும்பிடும் பெருமாளே.

இரண்டாவது படைவீடாகிய

திருச்செந்தூர்

9

பஞ்ச பாதக முறுபிறை யெயிறெரி
குஞ்சி கூர்விட மதர்விழி பிலவக
பங்க வாண்முக முடுகிய நெடுகிய திரிசூலம்
பந்த பாசமு மருவிய கரதல
மிஞ்சி நீடிய கருமுகி லுருவொடு
பண்பி லாதொரு பகடது முதுகினில் யமராஜன்
அஞ்ச வேவரு மவதர மதிலொரு
தஞ்ச மாகியே வழிவழி யருள்பெறும்
அன்பி னாலுன தடிபுக ழடிமையெ னெதிரேநீ
அண்ட கோளகை வெடிபட இடிபட
எண்டி சாமுக மடமட நடமிடும்
அந்த மோகர மயிலினி லியலுடன் வரவேணும்
மஞ்சு போல்வள ரளகமு மிளகிய
ரஞ்சி தாம்ருத வசனமு நிலவென
வந்த தூயவெண் முறுவலு மிருகுழை யளவோடும்
மன்றல் வாரிச நயனமு மழகிய
குன்ற வாணர்த மடமகள் தடமுலை
மந்த ராசல மிசைதுயி லழகிய மணவாளா
செஞ்சொல் மாதிசை வடதிசை குடதிசை
விஞ்சு கீழ்திசை சகலமு மிகல்செய்து
திங்கள் வேணியர் பலதளி தொழுதுயர் மகமேரு
செண்டுமோதின ரரசரு ளதிபதி
தொண்ட ராதியும் வழிவழி நெறிபெறு
சேந்தில் மாநக ரினிதுறை யமரர்கள் பெருமாளே.

10

காலனார் வெங்கொடுந் தூதர்பா சங்கொடேன்
காலினார் தந்துடன் கொடுபோகக்

காதலார் மைந்தருந் தாயரா ருஞ்சுடுங்
கானமே பின்தொடர்ந் தலருமுன்
சூலம்வாள் தண்டுசெஞ் சேவல்கோ தண்டமுஞ்
சூடுதோ ளுந்தடந் திருமார்புந்
தூயதாள் தண்டையுங் காணஆர் வஞ்செயுந்
தோகைமேல் கொண்டுமுன் வரவேணும்
ஆலகா லம்பரன் பாலதா கஞ்சிடுந்
தேவர்வா ழன்றுகந் தமுதீயும்
ஆரவா ரஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
தாதிமா யன்றனன் மருகோனே
சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயஞ்
சாரலார் **சேந்திலம்** பதிவாழ்வே
தாவுசூ ரஞ்சிமுன் சாயவே கம்பெறுந்
தாரைவே லுந்திடும் பெருமாளே.

11

தந்த பசிதனை யறிந்து முலையமுது
தந்து முதுகுதட வியதாயார்
தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள
தங்கை மருகருயி ரெனவேசார்
மைந்தர் மனைவியர்க டும்பு கடனுதவு
மந்த வரிசைமொழி பகர்கேடா
வந்து தலைநவிர விழ்ந்து தரைபுகம
யங்க வொருமகிட மிசையேறி
அந்த கனுமெனைய டர்ந்து வருகையினி
லஞ்ச லெனவலிய மயில்மேல்நீ
அந்த மறலியொடு கந்த மனிதனம
தன்ப னெனமொழிய வருவாயே
சிந்தை மகிழமலை மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலு மயில்வீரா

திங்க ளரவுநதி துன்று சடிலரருள்
சேந்தி னகரிலுறை பெருமாளே.

12

தோந்திசரிய மயிரே வெளிறநிரை
தந்தமசைய முதுகே வளையஇதழ்
தொங்கவொருகை தடிமேல்வர மகளிர் நகையாடி
தொண்டுகிழவ னிவனு ரெனஇருமல்
கிண்கிணெனமு னுரையே குழறவிழி
துஞ்சுகுருடு படவே செவிடுபடு செவியாகி

வந்தபிணியு மதிலே மிடையுமொரு
பண்டிதனுமெ யுறுவே தனையுமிள
மைந்தருடைமை கடனே தெனமுடுகு துயர்மேவி
மங்கை யழுது விழவே யமபடர்கள்
நின்றுசருவ மலமே யொழுக வுயிர்
மங்குபொழுது கடிதே மயிலின்மிசை வரவேணும்

எந்தைவருக ரகுநா யகவருக
மைந்தவருக மகனே யினிவருக
என்கண்வருக எனதா ருயிர்வருக அபிராம
இங்குவருக அரசே வருகமுலை
யுண்கவருக மலர்சூ டிடவருக
என்றுபரிவி னொடுகோ சலைபுகல வருமாயன்

சிந்தைமகிழு மருகா குறவரிள
வஞ்சிமருவு மழகா அமரர்சிறை
சிந்தஅசுரர் கிளைவே ரொடுமடிய அடுதீரா
திங்களரவு நதிசூ டியபரமர்
தந்தகுமர அலையே கரைபொருத
சேந்தி னகரி லினிதே மருவிவளர் பெருமாளே.

13

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி யுழலாதே
முந்தைவினை யேவ ராமற் போக
மங்கையர்கள் காதல் தூரத் தேக
முந்தடிமை யேனை யாளத் தானு முனைமீதே
திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத் தோடு நடமாடுஞ்
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில் மீதி லேயெப் போது வருவாயே
அந்தண்மறை வேள்வி காவற் கார
செந்தமிழ்சொல் பாவின் மாலைக் கார
அண்டருப கார சேவற் கார முடிமேலே
அஞ்சலிசெய் வோர்கள் நேயக் கார
குன்றுருவ ஏவும் வேலைக் கார
அந்தம்வெகு வான ரூபக் கார எழிலான
சிந்துரமின் மேவு போகக் கார
விந்தைகுற மாது வேளைக் கார
செஞ்சொலடி யார்கள் வாரக் கார எதிரான
செஞ்சமரை மாயு மாயக் கார
துங்கரணசூர சூறைக் கார
செந்தில்நகர் வாழு மாண்மைக் கார பெருமாளே.

14

விறல்மார னைந்து மலர்வாளி சிந்த
மிகவானி லிந்து வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல வொன்ற
வினைமாதர் தந்தம் வசைகூற

குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கோடிதான துன்ப மயல்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ
மறிமா னுகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த மதியாளா
மலைமாவு சிந்த அலைவேலை யஞ்ச
வடிவே லெறிந்த அதிதீரா
அறிவா லறிந்து னிருதா ளிறைஞ்சு
மடியா ரிடைஞ்சல் களைவோனே
அழகான செம்பொன் மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த பெருமாளே.

15

அந்தகன் வருந்தினம் பிறகிடச்
சந்ததமும் வந்துகண் டரிவையர்க்
கன்புருகு சங்கதந் தவிரமுக் குணமாள
அந்திபக லென்றிரண் டையுமொழித்
திந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக் கவிபாடிச்
செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத் தணியாத
சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப் படுவேனோ
கொந்தவிழ் சரண்சரண் சரணெனக்
கும்பிடு புரந்தரன் பதிபெறக்
குஞ்சரிகுயம்புயம் பெறஅரக் கருமாளக்

குன்றிடிய அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணினெனக்
குண்டல மசைந்திளங் குழைகளிற் ப்ரபைவீசத்
தந்தன தனந்தனந் தனவெனச்
செஞ்சிறு சதங்கைகொஞ் சிடமணித்
தண்டைகள் கலின்கலின் கலினெனத் திருவான
சங்கரி மனங்குழைந் துருகமுத்
தந்தர வருஞ்செழுந் தளர்நடைச்
சந்ததி சகந்தொழுஞ் சரவணப் பெருமாளே.

16

தோலொடு மூடிய கூரையை நம்பிப்
பாவையர் தோதக லீலைநி ரம்பிச்
சூழ்பொருள் தேடிட வோடிவ ருந்திப் புதிதான
தூதொடு நான்மணி மாலைப்ர பந்தக்
கோவையு லாமடல் கூறியழுந்தித்
தோமுறு காளையர் வாசல்தொ றும்புக் கலமாருங்
காலனை வீணனை நீதிகெ டும்போய்க்
கோளனை மானமி லாவழி நெஞ்சக்
காதக லோபவ்ரு தாவனை நிந்தைப் புலையேனைக்
காரண காரிய லோகப்ர பஞ்சச்
சோகமெ லாமற வாழ்வுற நம்பிற்
காசறு வாரிமெய்ஞ் ஞானத வஞ்சற் றருளாதோ
பாலன மீதும னுமுக செம்பொற்
பாலனை மோதப ராதன பண்டப்
பாரிய மாருதி தோள்மிசை கொண்டுற் றமராடிப்
பாவியி ராவண னார்தலை சிந்திச்
சீரிய வீடணர் வாழ்வுற மன்றற்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக்
கினியோனே

சீலமு லாவிய நாரதர் வந்துற்
றீதவள் வாழ்புன மாமென முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் கிரிதோய்வாய்
சேலொடு வாளைவ ரால்கள் கிளம்பித்
தாறுகோள் பூகம ளாவிய இன்பச்
சீரலை வாய்நகர் மேவிய கந்தப் பெருமாளே.

17

சங்கைதா னென்றுதா னின்றியே நெஞ்சிலே
சஞ்சலா ரம்பமாயன்
சந்தோடே குங்குமா லங்க்ருதா டம்பரா
சம்ப்ரமா நந்தமாயன்
மங்கைமார் கொங்கைசேர் அங்கமோ கங்களால்
வம்பிலே துன்புருமே
வண்குகா நின்சொரூ பம்ப்ரகா சங்கொடே
வந்துநீ யன்பிலாள்வாய்
கங்கைசூ டும்பிரான் மைந்தனே அந்தனே
கந்தனே விஞ்சையூரா
கம்பியா திந்த்ரலோ கங்கள்கா வென்றவா
கண்டலே சன்சொல்வீரா
செங்கைவேல் வென்றிவேல் கொண்டுசூர் பொன்றவே
சென்றுமோ தும்ப்ரதாபா
செங்கண்மால் பங்கஜா னன்தொழா னந்தவேள்
சேந்தில்வாழ் தம்பிரானே.

18

அங்கை மென்குழ லாய்வார் போலே
சந்தி நின்றய லோடே போவா
ரன்பு கொண்டிட நீரோ போறீ ரறியீரோ

அன்று வந்தொரு நாள்நீர் போனீர்
பின்பு கண்டறி யோநா மீதே
அன்று மின்றுமோர் போதோ போகா துயில்வாரா

எங்க ளந்தரம் வேறு ரோர்வார்
பண்டு தந்தது போதா தோமே
லின்று தந்துற வோதா னீதே னிதுபோதா

திங்கு நின்றதென் வீடே வாரீ
ரென்றி ணங்கிகள் மாயா லீலா
இன்ப சிங்கியில் வீணே வீழா தருள்வாயே

மங்கு லின்புறு வானும் வானூ
டன்ற ரும்பிய காலாய் நீள்கால்
மண்டு றும்புகை நீரு வீறு எரிதீயாய்

வந்தி ரைந்தெழு நீராய் நீர்சூழ்
அம்ப ரம்புனை பாராய் பாரேழ்
மண்ட லம்புகழ் நீயாய் நானும் மலரோனும்

உங்கள் சங்கரர் தாமாய் நாமார்
அண்ட பந்திகள் தாமாய் வானும்
ஒன்றி னுங்கடை தோயா மாயோன் மருகோனே

ஒண்த டம்பொழில் நீடூர் கோடூர்
செந்தி லம்பதி வாழ்வே வாழ்வோர்
உண்ட நெஞ்சறி தேனே வானோர் பெருமாளே.

19

அமுதுததி விடமுமிழு செங்கட் டிங்கட்
பகவினொளிர் வெளிறெயிறு துஞ்சற் குஞ்சித்
தலையுமுடை யவனரவ தண்டச் சண்டச் சமனோலை

அதுவருகு மளவிலுயி ரங்கிட் டிங்குப்
பறைதிமிலை திமிர்தமிகு தம்பட் டம்பற்
கரையவுற வினரலற வுந்திச் சந்தித் தெருவூடே

எமதுபொரு ளெனுமருளை யின்றிக் குன்றிப்
பிளவளவு தினையளவு பங்கிட் டுண்கைக்
கிளையமுதுவசைதவிர இன்றைக்கன்றைக்கெனநாடா
திடுககடி தெனுமுணர்வு பொன்றிக் கொண்டிட்
டுடுடுடு டுடுடுடு டுண்டுட் டுண்டுட்
டெனவகலு நெறிகருதி நெஞ்சத் தஞ்சிப் பகிராதோ

குமுதபதி வகிரமுது சிந்தச் சிந்தச்
சரணபரி புரசுருதி கொஞ்சக் கொஞ்சக்
குடிலசடை பவுரிகொடு தொங்கப் பங்கிற்
கொடியாடக்
குலதடினி அசையஇசை பொங்கப் பொங்கக்
கழலதிர டெகுடெகுட டெங்கட் டெங்கத்
தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத்
தொகுதீதோ

திமிதமென முழவொலிமு ழங்கச் செங்கைத்
தமருகம ததிர்சதியொ டன்பர்க் கின்பத்
திறமுதவு பரதகுரு வந்திக் குஞ்சற் குருநாதா
திரளுமணி தரளமுயர் தெங்கிற் றங்கிப்
புரளஎறி திரைமகர சங்கத் துங்கத்
திமிரசல நிதிதழுவு **செந்திற்** கந்தப் பெருமாளே.

20

கொடியனைய இடை துவள அங்கமும் பொங்கஅங்
குமுதஅமு திதழ்பருகி யின்புறுஞ் சங்கையன்
குலவியணை முகிலளக முஞ்சரிந் தன்பினின்
பண்புலாவக்
கொடியவிரல் நகநுதியில் புண்படுஞ் சஞ்சலன்
குனகியவ ருடனினிது சம்ப்ரமங் கொண்டுளங்
குரலழிய அவசமுறு குங்குணன் கொங்கவிழ்ந்
தொன்றுபாய்மேல்

விடமணைய விழிமகளிர் கொங்கையின் பன்புறும்
விணையனியல் பரவுமுயிர் வெந்தழிந் தங்கமும்
மிதமொழிய அறவில்நெறி பண்பிலண் டுஞ்சகன்
செஞ்செநீடும்

வெகுகனக வொளிகுலவும் அந்தமன் சேந்திலேன்
றவிழவுள முருகிவரு மன்பிலன் தந்திலன்
விரவுமிரு சிறுகமல பங்கயந் தந்துகந் தன்புருதோ

படமிலகு அரவினுட லங்கமும் பங்கிடந்
துதறுமொரு கலபிமிசை வந்தெழுந் தண்டர்தம்
பகையசுர ரணைவருடல் சந்துசந் துங்கதஞ்
சிந்தும்வேலா

படியவரு மிமையவரும் நின்றிறைஞ் சேண்குணன்
பழையஇறை யுருவமிலி யன்பர்பங் கன்பெரும்
பருவரல்செய் புரமெரிய விண்டிடுஞ் செங்கணன்
கங்கைமான்வாழ்

சடிலமிசை யழகுபுனை கொன்றையும் பண்புறுங் [யோண்
தருணமதி யினகுறைசெய் துண்டமுஞ் செங்கை
சகலபுவ னமுமொழிக தங்குறங் கங்கியும்
பொங்கிநீடும்

சட்மருவு விடையரவர் துங்கஅம் பங்கினின்
றுலகுதரு கவுரியுமை கொங்கைதந் தன்புறுந்
தமிழ்விரக வுயர்பரம சங்கரன் கும்பிடுந் தம்பிரானே.

21

அனிச்சங் கார்முகம் வீசிட மாசறு
துவட்பஞ் சானத டாகம்வி டாமட
அனத்தின் தூவிகு லாவிய சீறடி மடமானர்

அருக்கன் போலொளி வீசிய மாமர
கதப்பைம் பூணணி வார்முலை மேல்முகம்
அழுத்தும் பாவியை யாவி யிடேறிட நெறிபாரா

வினைச்சண் டாளனை வீணனை நீணிதி
தனைக்கண் டாணவ மானநிர் மூடனை
விடக்கன் பாய்நுகர் பாழனை யோர்மொழி பகராதே
விகற்பங் கூறிடு மோகவி காரனை
அறத்தின் பாலொழு காதமு தேவியை
விளித்துன் பாதுகை நீதர நானருள் பெறுவேனோ
முனைச்சங் கோலிடு நீலம கோததி
அடைத்தஞ் சாதஇ ராவண னீள்பல
முடிக்கன் றோர்கணை யேவுமி ராகவன் மருகோனே
முளைக்குஞ் சீதநி லாவோ டராவிரி
திரைக் கங்காநதி தாதகி கூவிள
முடிக்குஞ் சேகரர் பேரரு ளால்வரு முருகோனே
தினைச்செங் கானக வேடுவ ரானவர்
திகைத்தந் தோவென வேகணி யாகிய
திறற்கந் தாவளி நாயகி காமுறும் எழில்வேலா
சிறக்குந் தாமரை யோடையில் மேடையில்
நிறக்குஞ் சூல்வளை பால்மணி வீசிய
திருச்செந் தூர்வரு சேவக னேசுரர் பெருமாளே.

22

கோம்பனை யார்காது மோதிரு கண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூஷண நகமேவு
கொங்கையி னீராவி மேல்வளர் செங்கழு நீர்மாலை சூடிய
கொண்டையி லாதார சோபையில் மருளாதே
உம்பர்கள் ஸ்வாமீ நமோநம எம்பெருமானே நமோநம
ஒண்டொடி மோகா நமோநம எனநாளும்
உன்புக ழேபாடி நானினி அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே
பம்பர மேபோல ஆடிய சங்கரி வேதாள நாயகி
பங்கயசீ பாத நூபுரி கரசூலி

பங்கமி லாநீலி மோடிப யங்கரி மாகாளி யோகினி
பண்டுசு ராபான சூரனே டேதிர்போர்கண்

டேம்புதல் வாவாழி வாழியே னும்படி வீருன வேல்தர
என்றுமு ளானேம னோகர வயலூரா

இன்சோல் விசாகாக்ருபாகர **சேந்திலி**ல்வாழ்வாகியேயடி
யென்றனை யீடேற வாழ்வருள் பெருமாளே.

23

உருக்கம் பேசிய நீலியர் காசுகள்
பறிக்குந் தோஷிகள் மோகவி காரிகள்
உருட்டும் பார்வையர் மாபழி காரிகள் மதியாதே

உரைக்கும் பீரிகள் கோளர வாமென
வுடற்றுந் தாதியர் காசள வேமனம்
உறைக்குந் தூரிகள் மீதினி லாசைகள் புரிவேனோ

அருக்கன் போலொளி வீசிய மாமுடி
யனைத்துந் தானழ காய்நல மேதர
அருட்கண் பார்வையி னாலடி யார்தமை மகிழ்வோடே

அழைத்துஞ் சேதிகள் பேசிய காரண
வடிப்பந் தானென வேயெனை நாடோறும்
அதிக்கஞ் சேர்தர வேயரு ளாலுட னினிதாள்வாய்

இருக்குங் காரண மீறிய வேதமும்
இசைக்குஞ் சாரமு மேதொழு தேவர்கள்
இடுக்கண் தீர்கன ளேயடி யார்தவ முடன்மேவி

இலக்கந் தானென வேதொழ வேமகிழ்
விருப்பங் கூர்தரு மாதியு மாயுல
கிறுக்குந் தாதகி சூடிய வேணிய னருள்பாலா

திருக்குந் தாபதர் வேதிய ராதியர்
துதிக்குந் தாளுடை நாயக னாகிய
சேகச்சேஞ் சோதியு மாகிய மாதவன் மருகோனே

செழிக்குஞ் சாலியு மேகம ளாவிய
கருப்பஞ் சோலையும் வாழையு மேதிகழ்
திருச்சேந் தூர்தனில் மேவிய தேவர்கள் பெருமாளே.

24

அறிவழிய மயல்பெருக உரையுமற விழிசுழல
அனலவிய மலமொழுக அகலாதே
அணையுமனை யருகிலுற வெருவியழ வுறவுமழ
அழலினிகர் மறலியெனை யழையாதே
செறியுமிரு வினைகரண மருவுபுல னொழியவுயர்
திருவடியி லணுகவர மருள்வாயே
சிவனைநிகர் பொதியவரை முநிவனக மகிழஇரு
செவிகுளிர இனியதமிழ் பகர்வோனே
நெறிதவறி யலரிமதி நடுவன்மக பதிமுளரி
நிருதிநிதி பதிகரிய வனமாலி
நிலவுமறை யவனிவர்க ளலையஅர சுரிமைபுரி
நிருதனுர மறஅயிலை விடுவோனே
மறிபரசு கரமிலகு பரமனுமை யிருவிழியு
மகிழமடி மிசைவளரு மிளையோனே
மதலைதவ ழுததியிடை வருதரள மணிபுளின
மறையவுயர் **கரையிலுறை** பெருமாளே.

25

கமல மாதுட னிந்திரை யுஞ்சரி
சொலவொ ணுதம டநதையர் சந்தன
களப சீதள கொங்கையி லங்கையி லிருபோதேய்
களவு நூல்தெரி வஞ்சனை யஞ்சன
விழியின் மோகித கந்தசு கந்தரு
கரிய வோதியி லிந்துமு கந்தனின் மருளாதே

அமல மாகிய சிந்தைய டைந்தகல்
தொலைவி லாதஅ றம்பொரு ளின்பமு
மடைய வோதியு ணர்ந்துத ணந்தபின் அருள்தானே
அறியு மாறுபெ றும்படி யன்பினி
னினிய நாதசி லம்புபு லம்பிடு
மருண ஆடக கிண்கிணி தங்கிய அடிதாராய்
குமரி காளிப யங்கரி சங்கரி
கவுரி நீலிப ரம்பரை யம்பிகை
குடிலை யோகினி சண்டினி குண்டலி யெமதாயி
குறைவி லாளுமை மந்தரி யந்தரி
வெகுவி தாகம சுந்தரி தந்தருள்
குமர மூஷிக முந்திய ஐங்கர கணராயன்
மமவி நாயக னஞ்சுமிழ் கஞ்சுகி
அணிக ஜானன விம்பனே ரம்புலி
மவுலி யானுறு சிந்தையு கந்தரு ளிளையோனே
வளரும் வாழையு மஞ்சளு மிஞ்சியும்
இடை விடாதுநெ ருங்கிய மங்கல
மகிமை மாநகர் **செந்தில்**வில் வந்துறை பெருமாளே.

26

கோலமத கரியன ம்ருகமத தனகிரி
கும்பத் தனமானார்
குமுதஅ முதஇதழ் பருகி யுருகிமயல்
கொண்டுற் றிடுநாயேன்
நிலையழி கவலைகள் கெடவுன தருள்விழி
நின்றுற் றிடவேதான்
நினதிரு வடிமல ரிணைமன தினிலுற
நின்பற் றடைவேனோ
சிலையென வடமலை யுடையவ ரருளிய
செஞ்சொற் சிறுபாலா

திரைகட லிடைவரு மசுரனை வதைசெய்த
செந்திற் பதிவேலா
விலைநிகர் நுதலிப மயில்குற மகளும்வி
ரும்பிப் புணர்வோனே
விருதணி மரகத மயில்வரு குமரவி
டங்கப் பெருமாளே.

27

பூரண வார கும்ப சீத படீர கோங்கை
மாதர் விகார வஞ்ச லீலையி லேயு ழன்று
போதவ மேயி ழந்து போனது மான மென்ப தறியாத
பூரிய னாகி நெஞ்சு காவல் படாத பஞ்ச
பாதக னாய றஞ்செ யாதடி யோடி றந்து
போனவர் வாழ்வு கண்டு மாசையி லேயமுந்து மயல்தீரக்
காரண காரி யங்க ளானதெ லாமொ ழிந்து
யானெனு மேதை விண்டு பாவக மாயி ருந்து
காலுட லூடி யங்கி நாசியின் மீதி ரண்டு விழிபாயக்
காயமு நாவு நெஞ்சு மோர்வழி யாக அன்பு
காயம்வி டாம லுன்ற னீடிய தாள்நி னைந்து
காணுதல் கூர்த வஞ்செய் யோகிக ளாய்வி ளங்க
அருள்வாயே
ஆரண சார மந்த்ர வேதமெ லாம்வி ளங்க
ஆதிரை யானை நின்று தாழ்வனெ னாவ ணங்கு
மாதர வால்வி ளங்கு பூரண ஞான மிஞ்சு முரவோனே
ஆர்கலி யூடெ ழுந்து மாவடி வாகி நின்ற
சூரனை மாள வென்று வானுல காளு மண்ட
ரானவர் கூர ரந்தை தீரமு னாள்ம கிழ்ந்த முருகேசா
வாரண மூல மென்ற போதினி லாழி கொண்டு
வாவியின் மாடி டங்கர் பாழ்பட வேயெ றிந்த
மாமுகில்போலிருண்டமேனியனுமுகுந்தன்மருகோனே

வாலுக மீது வண்ட லோடிய காலில் வந்து
சூல்நிறை வான சங்கு மாமணி யீன வுந்து
வாரிதி நீர்ப ரந்த **சீரலை** வாயு கந்த பெருமாளே.

28

மூளும்வினை சேர மேல்கொண்டி டாஐந்து
பூதவெகு வாய மாயங்கள் தானெஞ்சில்
மூடிநெறி நீதி யேதுஞ்செ யாவஞ்சி யதிபார

மோகவினை வான போகஞ்செய் வேனண்டர்
தேடஅரி தாய ஞேயங்க ளாய்நின்ற
மூலபர யோக மேல்கொண் டிடாநின்ற துளதாகி

நாளுமதி வேக கால்கொண்டு தீமண்ட
வாசியன லூடு போயொன்றி வானின்க
ணுமமதி மீதி லூறுங்க லாஇன்ப அமுதூறல்

நாடியதன் மீது போய்நின்ற ஆநந்த
மேலைவெளி யேறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளே

காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி பாதங்க ளால்வந்த
காலன் விழமோது சாமுண்டி பாரம்போ டனல்வாயு

காதிமுதிர்வான மேதங்கி வாழ்வஞ்சி
ஆடல்விடை யேறி பாகங்கு லாமங்கை
காளிநட மாடி நாளன்பர் தாம்வந்து தொழுமாது

வாளமுழு தாளு மோர்தண்டு ழாய்தங்கு
சோதிமணி மார்ப மாலின்பி னளின்சொல்
வாழுமுமைமாதராள்மைந்தனேயெந்தை யிளையோனே

மாசிலடி யார்கள் வாழ்கின்ற வூர்சென்று
தேடிவிளை யாடி யேயங்ங னேநின்று
வாழுமயில் வீரனே **சேந்தில்** வாழ்கின்ற பெருமாளே.

29

உததியறல் மோண்டு சூல்கொள்கரு
முகிலெனஇ ருண்ட நீலமிக
ஒளிதிகழு மன்ற லோதிநரை பஞ்சுபோலாய்
உதிரமெழு துங்க வேலவிழி
மிடைகடையோ துங்கு பீளைகளு
முடைதயிர்பி திர்ந்த தோஇதென வெம்புலாலாய்
மதகரட தந்தி வாயினிடை
சோருகுபிறை தந்த சூதுகளின்
வடிவுதரு கும்ப மோதிவளர் கொங்கைதோலாய்
வனமழியு மங்கை மாதர்களி
னிலைதனையு ணர்ந்து தாளிலுறு
வழியடிமை அன்பு கூருமது சிந்தியேனோ
இதழ்பொதிய விழ்ந்த தாமரையின்
மணவறைபு குந்த நான்முகனு
மெரிதிரைய லம்பு பாலுததி நஞ்சராமேல்
இருவிழிது யின்ற நாரணனு
முமைமருவு சந்த்ர சேகரனு
மிமையவர்வ ணங்கு வாசவனு நின்றுதாழும்
முதல்வசுக மைந்த பீடிகையி
னகிலசக அண்ட நாயகிதன்
முகிழ்முலைசு ரந்த பாலமுத முண்டவேளே
முளைமுருகு சங்கு வீசியலை
முடுகிமைத வழ்ந்த வாய்பெருகி
முதலிவரு **சேந்தில்** வாழ்வுதரு தம்பிரானே.

30

நாலு மைந்து வாசல் கீறு தூறு டம்பு கால்கை யாகி
நாரி யென்பி லாகுமாக மதனூடே

நாத மொன்ற ஆதி வாயில் நாட கங்க ளான ஆடி
நாட றிந்தி டாம லேக வளராமுன்
நூல நந்த கோடி தேடி மால்மி குந்து பாரு ளோரை
நூறு செஞ்சொல் கூறி மாறி விளைதீமை
நோய்க லந்த வாழ்வு றுமல் நீக லந்து ளாகு ஞான
நூல டங்க வோத வாழ்வு தருவாயே
காலன் வந்து பால ஞவி காய வென்று பாசம் வீசு
காலம் வந்து வோல மோல மேனுமாதி
காம னைந்து பாண மோடு வேமி னென்று காணுமோனர்
காள கண்ட ரோடு வேத மொழிவோனே
ஆல மொன்று வேலை யாகி யானை யஞ்சல் தீரு மூல
ஆழி யங்கை ஆயன் மாயன் மருகோனே
ஆரணங்கள் தாளை நாட வார ணங்கை மேவு மாதி
யான **செந்தில்** வாழ்வ தான பெருமாளே.

31

கண்டுமொழி கொம்பு கொங்கை வஞ்சியிடை அம்பு நஞ்சு
கண்கள் குழல் கொண்ட லென்று பலகாலும்
கண்டுளம்வ ருந்தி நொந்து மங்கையர்வ சம்பு ரிந்து
கங்குல்பக லென்று நின்று விதியாலே
பண்டைவினை கொண்டு ழன்று வெந்துவிழு கின்றல் கண்டு
பங்கயப தங்கள் தந்து புகழோதும்
பண்புடைய சிந்தை யன்பர் தங்களினு டன்க லந்து
பண்புபெற அஞ்ச லஞ்ச லெனவாராய்
வண்டுபடு கின்ற தொங்கல் கொண்டறநெ ருங்கி யிண்டு
வம்பினைய யடைந்து சந்தின் மிகமூழ்கி
வஞ்சியை முனிந்தகொங்கை மென்குறமடந்தை செங்கை
வந்தழகு டன்க லந்த மணிமார்பா

திண்டிறல்பு னைந்த அண்டர் தங்களபயங்கள் கண்டு
செஞ்சமர்பு னைந்து துங்க மயில்மீதே
சென்றசுர ரஞ்ச வென்று குன்றிடைம ணம்புணர்ந்து
செந்தில்நகர் வந்த மர்ந்த பெருமாளே.

32

பரிமள களபசு கந்தச் சந்தத் தனமானூர்
படையமபடையென அந்திக் குங்கட் கடையாலே
வரியளி நிரைமுரல் கோங்குக் கங்குற் குழலாலே
மறுகிடு மருளனை இன்புற் றன்புற் றருள்வாயே
அரிதிரு மருகக டம்பத் தொங்கற் றிருமார்பா
அலைகுமு குமுவென வெம்பக் கண்டித் தெறிவேலா
திரிபுர தகனரும் வந்திக் குஞ்சற் குருநாதா
ஜெயஜெய ஹரஹர **செந்திற்** கந்தப் பெருமாளே.

33

வரியார் கருங்கண் மடமாதர்
மகவாசை தொந்த மதுவாகி
இருபோது நைந்து மெலியாதே
இருதாளி னன்பு தருவாயே
பரிபால னஞ்செய் தருள்வோனே
பரமேசு ரன்ற னருள்பாலா
அரிகேச வன்றன் மருகோனே
அலைவாயமர்ந்த பெருமாளே.

— ○ —

மூன்றாவது படைவீடாகிய

திருவாவினன்குடி (பழநி)

34

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம வெகுகோடி
நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம பரசூரர்
சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ
தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம அருள்தாராய்
ஈத லும்பல கோலால பூஜையும்
ஓத லுங்குண ஆசார நீதியும்
ஈர முங்குரு சீர்பாத சேவையு மறவாத
ஏழ்த லம்புகழ் காவேரி யால்விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா
ஆத ரம்பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி லையிலேகி
ஆதி யந்தவு லாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

35

சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரமிரு
சேவிமீதி லும்பகர்சேய் குருநாதா
சிவகாம சுந்தரிதன் வரபால கந்தநின
செயலேவி ரும்பியுளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதாவ லைந்துழலு
மடியேனை அஞ்சலென வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே
நவநீத முந்திருடி உரலோடெ யோன்றுமரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிசதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே
தேவயானை யங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வருவேள்ச வுந்தரிக
சேகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே.

36

தகர நறுமலர் பொதுளிய குழலியர்
கலக கெருவித விழிவலை படவிதி
தலையி லெழுதியு மனைவயி னுறவிடு வதனாலே
தனயர் அனைதமர் மனைவியர் சினேகிதர்
சுரபி விரவிய வகையென நினைவுறு
தவன சலதியின் முழுகியே யிடர்படு துயர்தீர
அகர முதலுள பொருளினை யருளிட
இருகை குவிசெய்து ஞருகிட வுருகியே
அரக ரெனவல னிடமுற எழிலுன திருபாதம்

அருள அருளுடன் மருளற இருளற
கிரண அயில்கொடு குருகணி கொடியோடு
அழகு பெறமர கதமயில் மிசைவர இசைவாயே

சிகர குடையினி னிரைவர இசைதெரி
சதுரன் விதுரனில் வருபவ னளையது
திருடி யடிபடு சிறியவ னெடியவன் மதுசூதன்

திகிரி வளைகதை வசிதநு வுடையவ
னெழிலி வடிவின னரவுபொன் முடிமிசை
திமித திமிதிமி யெனநட மிடுமரி மருகோனே

பகர புகர்முக மதகரி யுழைதரு
வனிதை வெருவமுன் வரஅருள் புரிகுக
பரம குருபர இமகிரி தருமயில் புதல்வோனே

பலவின் முதுபழம் விழைவுசெய் தொழுகிய
நறவு நிறைவயல் கமுகடர் பொழில்திகழ்
பழநி மலைவரு புரவல அமரர்கள் பெருமாளே.

37

தலைவலி மருத்தீடு காமாலை சோகைசுரம்
விழிவலி வறட்சூலை காயாசு வாசம்வெகு
சலமிகு விஷப்பாக மாயாவி காரபிணி யணுகாதே

தலமிசை யதற்கான பேரோடு கூறியிது
பரிகரி யெனக்காது கேளாது போலுமவர்
சரியும்வயதுக் கேதுதாரீர்சொலீரெனவும் விதியாதே

உலைவற விருப்பாக நீள்காவின் வாசமலர்
வகைவகை யெடுத்தேதொ டாமாலி காபரண
முனதடி யினிற்சூட வேநாடு மாதவர்க ளிருபாதம்

உளமது தரித்தேவி னாவோடு பாடியருள்
வழிபட எனக்கேத யாவோடு தாளுதவ
உரகம தெடுத்தாடு மேகார மீதின்மிசை வரவேணும்

அலைகட லடைத்தேம காகோர ராவணனை
மணிமுடி துணித்தாவி யேயான சாநகியை
அடலுட னழைத்தேகொள் மாயோனை மாமனெனு
மருகோனே

அறுகினை முடித்தோனை யாதார மானவனை
மழுவுழை பிடித்தோனை மாகாளி நாணமுனம்
அவைதனில் நடித்தோனை மாதாதை யேஎனவும்
வருவோனே

பலகலை படித்தோது பாவாணர் நாவிலுறை
யிருசரண வித்தார வேலாயு தாவுயர்செய்
பரண்மிசை குறப்பாவை தோள்மேவ மோகமுறு
மணவாளா

பதுமவய லிற்பூக மீதேவ ரால்கள்துயில்
வருபுனல் பெருக்காறு காவேரி சூழவளர்
பழநிவரு கற்பூர கோலாக லாவமரர் பெருமாளே.

38

அவனிதனி லேபிறந்து மதலையென வேதவழ்ந்து
அழகுபெற வேநடந்து இளைஞனாய்
அருமழலை யேமிகுந்து குதலைமொழி யேபுகன்று
அதிவிதம தாய்வளர்ந்து பதினாறாய்

சிவகலைக ளாகமங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநினைந்து துதியாமல்
தெரிவையர்க ளாசைமிஞ்சி வெகுகவலை யாயுழன்று
திரியுமடி யேனையுன்ற னடிசேராய்

மவுனவுப தேசசம்பு மதியறுகு வேணிதும்பை
மணிமுடியின் மீதணிந்த மகதேவர்
மனமகிழ வேயணைந்து வொருபுறம தாகவந்த
மலைமகள்கு மாரதுங்க வடிவேலா

பவனிவர வேயுகந்து மயிலின்மிசை யேதிகழ்ந்து
படியதிர வேநடந்த கழல்வீரா
பரமபத மாயசெந்தில் முருகனென வேயுகந்து
பழநிமலை மேலமர்ந்த பெருமாளே.

39

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள் பாதமலர் சூடுமடி
யார்கள்பத மேதுணைய தென்றுநாளும்
ஏறுமயில் வாகனகு காசரவ ணாஎனது
ஈசஎன மானமுன தென்றுமோதும்
ஏழைகள் வியாகுலமி தேதெனவி னாவிலுனை
யேவர்புகழ் வார்மறையு மென்சொலாதோ
நீறுபடு மாழைபொரு மேனியவ வேலஅணி
நீலமயில் வாகவுமை தந்தவேளே
நீசர்கட மோடெனது தீவினையெ லாமடிய
நீடுதனி வேல்விடும டங்கல்வேலா
சீறிவரு மாறவுண னாவியுணு மானைமுக
தேவர்துணை வாசிகரி அண்டகூடஞ்
சேருமழ கார்பழநி வாழ்குமர னேபிரம
தேவர்வர தாமுருக தம்பிரானே.

40

கருவினுரு வாகிவந்து வயதளவி லேவளர்ந்து
கலைகள்பல வேதெரிந்து மதனாலே
கரியகுழல் மாதர் தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி

அரகரசி வாயவென்று தினமுநினை யாமல்நின்று
அறுசமய நீதியொன்று மறியாமல்
அசனமிடு வார்கள் தங்கள் மனைகள்தலை வாசல் நின்று
அநுதினமு நாணமின்றி யழிவேனோ
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்க
ருலகளவு மால்மகிழ்ந்த மருகோனே
உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரிலன்று வருவோனே
பரவைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனரு ளால்வளர்ந்த குமரேசா
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழநிமலை மீதில்நின்ற பெருமாளே.

41

குரம்பை மலசலம் வழுவளு நிணமோடு
எலும்பு அணிசரி தசையிரல் குடல்நேதி
குலைந்த செயிர்மயிர் குருதியோ டிவைபல கசுமால
குடின்பு குதுமவ ரவர்கடு கொடுமைய
ரிடும்ப ரொருவழி யிணையிலர் கசடர்கள்
குரங்க ரறிவிலர் நெறியிலர் மிருகனை விறலான
சரம்ப ருறவனை நரகனை துரகனை
யிரங்கு கலியனை பரிவுறு சடலனை
சவுந்த ரிகமுக சரவண பதமோடு மயிலேறித்
தழைந்த சிவசுடர் தனையென மனதினி
லழுந்த வுரைசெய வருமுக நகையொளி
தழைந்த நயனமு மிருமலர் சரணமு மறவேனே
இரும்பை வகுளமொ டியையபல முகில்பொழி
லுறைந்த குயிலளி யொலிபர விடமயி
லிசைந்து நடமிடு மிணையிலி புலிநகர் வளநாடா

இருண்ட குவடிடி பொடிபட வெகுமுக
டெரிந்து மகரமோ டிசைகரி குமுறுக
இரைந்த வசுரரோ டிபபரி யமபுரம் விடும்வேளே
சிரம்போ னயனொடு முநிவர்க ளமரர்க
ளரம்பை மகளிரோ டரகர சிவசிவ
செயம்பு வெனநட மிடுபத மழகியர் குருநாதா
செழும்ப வளவொளி நகைமுக மதிநகு
சிறந்த குறமக ளிணைமுலை புதைபட
செயங்கொ டணைகுக சிவமலை மருவிய பெருமாளே.

42

சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவித மானபர
சுடரொளிய தாய்நின்ற நிட்களசொ ரூபமுத
லொருவாழ்வே
துரியநிலை யேகண்ட முத்தரித யாகமல
மதனில்விளை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாவின்ப பத்மபத மேஅடைய உணராதே
கருவிலுரு வேதங்கு சுக்கிலநி தானவளி
பொருமஅதி லேகொண்ட முக்குணவி பாகநிலை
கருதவரி யாவஞ்ச கக்கபட மூடியுடல் வினைதானே
கலகமிட வேபொங்கு குப்பைமல வாழ்வுநிஜ
மெனவுழலு மாயஞ்செ னித்தகுகை யேஉறுதி
கருதசுழ மாமிந்த மட்டைதனை யாளவுன தருள்தாராய்
ஒருநியம மேவிண்ட சட்சமய வேதஅடி
முடிநடுவு மாயண்ட முட்டைவெளி யாகியுயி
ருடலுணர்வ தாயெங்கு முற்பனம தாகஅம
ருளவோனே
உததரிச மாமின்ப புத்தமிர்த போகசுக
முதவுமம லாநந்த சத்திகர மேவுணர
வுருபிரண வாமந்த்ர கர்த்தவிய மாகவரு குருநாதா

பருதிகதி ரேகொஞ்சு நற்சரண நூபுரம
தசையநிறை பேரண்ட மொக்கநட மாடுகன
பதகெருவி தாதுங்க வெற்றிமயி லேறுமொரு
திறலோனே
பணியுமடி யார்சிந்தை மெய்ப்பொருள தாகநவில்
சரவணப வாவொன்று வற்கரமு மாகிவளர்
பழநிமலை மேனின்றசுப்ரமணியாவமரர் பெருமாளே.

43

ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரி லாத
நாடண்டி நமசி வாய வரையேறி
நாவின்ப ரசம தான ஆநந்த அருவி பாய
நாதங்க ளோடுகு லாவி விளையாடி
ஊனங்க ளுயிர்கள் மோக நானென்ப தறிவி லாம
லோமங்கி யுருவ மாகி யிருவோரும்
ஓரந்த மருவி ஞான மாவிஞ்சை முதுகி னேறி
லோகங்கள் வலம தாட அருள்தாராய்
தேனங்கொ ளிதழி தாகி தாரிந்து சலில வேணி
சீரங்க னெனது தாதை ஒருமாது
சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மவுன ஜோதி
சேர்பங்கி னமல நாத னருள்பாலா
கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீல
காடந்த மயிலி லேறு முருகோனே
காமன்கை மலர்கள் நாண வேடம்பெ ணமளி சேர்வை
காணெங்கள் **பழநி** மேவு பெருமாளே.

44

திமிர வுததி யனைய நரக
செனன மதனில் விடுவாயேல்

சேவிடு குருடு வடிவு குறைவு
சிறிது மிடியு மணுகாதே
அமரர் வடிவு மதிக குலமு
மறிவு நிறையும் வரவேநின்
அருள தருளி யெனையு மனதோ
டடிமை கொளவும் வரவேணும்
சமர முகவே லசுரர் தமது
தலைக ளுருள மிகவேநீள்
சலதி யலற நெடிய பதலை
தகர அயிலை விடுவோனே
வெமர வணையி லினிது துயிலும்
விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரியர் குமர பழநி
விரவு மமரர் பெருமாளே.

45

பகர்தற்கரி தான செந்தமி ழிசையிற்சில பாட லன்போடு
பயிலப்பல காவி யங்களை யுணராதே
பவளத்தினை வீழி யின்கனி யதனைப்பொருவாய் மடந்தையர்
பசலைத்தன மேபெ றும்படி விரகாலே
சகரக்கடல் சூழு யம்புவி மிசையிப்படி யேதி ரிந்துழல்
சருகோத்துள மேய யர்ந்துடல் மெலியாமுன்
தகதித்திமி தாகிணங்கிண எனவுற்றெழு தோகையம்பரி
தனிலற்புத மாக வந்தருள் புரிவாயே
நுகர்வித்தக மாகு மென்றுமை மொழியிற்பொழி பாலை
யுண்டிடு
நுவல்மெய்ப்புள பால னென்றிடு மிளையோனே
நுதிவைத்தக ராம லைந்திடு களிறுக்கரு ளேபு ரிந்திட
நொடியிற்பரி வாக வந்தவன் மருகோனே
அகரப்பொரு ளாதி யொன்றிடு முதலக்கர மான தின்பொருள்
அரனுக்கினி தாமோ ழிந்திடு குருநாதா

அமரர்க்கிறை யேவ ணங்கிய பழநித்திரு வாவி னன்குடி
அதனிற்குடி யாயி ருந்தருள் பெருமாளே.

46

சுருளளக பார கொங்கை மகளிர்வச மாயி சைந்து
சுரதக்ரியை யால்வி ளங்கு மதனாலே
சுருதியென வேநி னைந்து அறிவிலிக ளோடி ணங்கு
தொழிலுடைய யானு மிங்கு னடியார்போல்
அருமறைக ளேநி னைந்து மனுநெறியி லேந டந்து
அறிவையறி வால றிந்து நிறைவாகி
அகிலபுவ னாதி யெங்கும் வெளியுறமெய்ஞ் ஞான இன்ப
அமுதையொழி யாத ருந்த அருள்வாயே
பருதிமகன் வாசல் மந்த்ரி அநுமனொடு நேர்ப ணிந்து
பரிதகழை யாமுன் வந்து பரிவாலே
பரவியவி பீஷ ணன்பொன் மகுடமுடி சூட நின்ற
படைஞரொடி ராவ ணன்ற னுறவோடே
எரிபுகுத மாறி லண்டர் குடிபுகுத மாறுகொண்ட
ரகுபதியி ராம சந்த்ரன் மருகோனே
இளையகுற மாது பங்க பழநிமலை நாத கந்த
இமயவள்த னுல்ம கிழ்ந்த பெருமாளே.

47

இத்தா ரணிக்குள்மனு வித்தாய் முளைத்தழுது
கேவிக் கிடந்துமடி மீதிற் றவழ்ந்தடிகள்
தத்தா தனத்ததன இட்டே தெருத்தலையில்
ஓடித் திரிந்துநவ கோடிப் ப்ரபந்தகலை
யிச்சீர் பயிற்றவய தெட்டோடு மெட்டுவர
வாலக் குணங்கள்பயில் கோலப் பெதும்பையர்க
ளுடனுறவாகி

இக்கார் சரத்துமத னுக்கே யிளைத்துவெகு
வாகக் கலம்பவகை பாடிப் புகழ்ந்துபல
திக்கோடு திக்குவரை மட்டோடி மிக்கபொருள்
தேடிச் சுகந்தஅணை மீதிற் றுயின்று சுக
மிட்டா தரத்துருகி வட்டார் முலைக்குளிடை
மூழ்கிக் கிடந்துமய லாகித் துளைந்துசில
பிணியதுமுடி

சத்தான புத்தியது கெட்டே கிடக்கநம
னோடித் தொடர்ந்துகயி றாடிக் கொளும்பொழுது
பெற்றோர்கள் சுற்றியழ வுற்றோர்கள் மெத்தஅழ
ஊருக் கடங்கலிலர் காலற் கடங்கவுயிர்
தக்கா திவர்க்குமய னிட்டான் விதிப்படியி
னாலைப் பழம்படியி னாலிற் றிறந்ததென
எடுமெனவோடிச்

சட்டா நவப்பறைகள் கொட்டா வரிச்சுடலை
யேகிச் சடம்பெரிது வேகப் புடஞ்சமைய
இட்டே யனற்குளெரி பட்டா ரெனத்தமுவி
நீரிற் படிந்துவிடு பாசத் தகன்றுனது
சற்போ தகப்பதும முற்றே தமிழ்க்கவிதை
பேசிப் பணிந்துருகு நேசத்தை யின்றுதர
இனிவரவேணும்

தித்தா திரித்திகுட தத்தா தனத்தகுத
தாதத் தனந்ததன தானத் தனந்ததன
செச்சே செகுச்செதகு தித்தா திமித்ததிகு
தாதத்த செந்திகுத தீதத்த செந்தரிக
தித்தா கிடக்கணக டக்கா குகுக்குகுகு
தோதக் கணங்கணக கூகுக் கிணங்கிணென
ஒருமயிலேறித்

திட்டே ரதத்தசுரர் பட்டே விழப்பொருது
வேலைத் துளைந்துவரை யேழைப் பிளந்துவரு

சித்தா பரத்தமரர் கத்தா குறத்திமுலை
மீதிற் புணர்ந்துசுக லீலைக் கதம்பமணி
சுத்தா வுமைக்கு மொரு முத்தாய் முளைத்தகுரு
நாதக் குழந்தையென வோடிக் கடம்பமலர்
அணிதிருமார்பா

மத்தா மதக்களிறு பிற்றா னுதித்தருக
னேதத் திலங்கையினி லாதிக்க முண்டதொரு
முட்டா ளரக்கர்தலை யிற்றே விழக்கணைக
ளேதொட்ட கொண்டலுரு வாகிச் சுமந்ததிக
மட்டார் மலர்க்கமல முற்றா சனத்திருவை
மார்பிற் புணர்ந்தரகு ராமற்கு மன்புடைய
மருமகனாகி

வற்றா மதுக்கருணை யுற்றே மறைக்கலைக
ளோதித் தெரிந்துதமிழ் சோதித் தலங்கலணி
யத்தா பரத்தையறி வித்தாவி சுற்றுமொளி
யாகிப் ப்ரபந்தமணி வேல்தொட்ட மைந்தபுய
வர்க்கா மருப்புழுகு முட்டா திருப்பழநி
வாழ்வுக் குகந்தடிய ராவிக்குள் நின்றுலவி
வருபெருமாளே.

48

இரவியென வடவையென ஆலால விடமதென
வுருவுகொடு ககனமிசை மீதேகி மதியும்வர
இரதிபதி கணைகளொரு நாலேவ விருதுகுயி லதுகூவ
எழுகடலின் முரசினிசை வேயோசை விடையின்மணி
யிசைகுறுகி யிருசெவியி னூராசை முறுவதென
இகல்புரிய மதனகுரு வோராத அனையர்கொடு
வசைபேச

அரஹரென வனிதைபடு பாடோத அரிதரிது
அமுதமயி லதுகருதி யாரோடு மிகல்புரிவள்
அவசமுற அவசமுற ஆரோமல் தரவுமிக மெலிவாளுள்

அகுதியிவள் தலையில்விதி யானாலும் விலகரிது
அடிமைகொள வுனதுபரம் ஆருத வொருதனிமை
அவளையணை தரஇனிதி னேகார பரியின்மிசை
வருவாயே

நிரைபரவி வரவரையு ளோர்சீத மருதினொடு
பொருசகடு வுதையதுசெய் தாமாய மழைசொரிதல்
நிலைகுலைய மலைகுடைய தாவேகொள் கரகமலன்
மருகோனே

நிருமலிய திரிநயனி வாள்வீச வருகுமரி
கவுரிபயி ரவியரவ பூணாரி திரிபுவனி
நிபுடமலை யரசனருள் வாழ்வான புரணவுமை
யருள்பாலா

பரவைகிரி யசுரர்திரள் மாசேனை தவிடுபொடி
படஅமரர் துயரகல வேலேவி யமர்பொருத
பதுமகர தலமுருக நால்வேத கரரணிக மயில்வீரா

பளிதம்ருக மதகளப சேறூர வளருமுலை
வனிதைகுற மகள்மகிழும் லீலாவி தரமதுர
பனுவல்தரு **பழநி**வரு கோலாக லாவமரர் பெருமாளே.

49

ஒருபொழுது மிருசரண நேசத் தேவைத் துணரேனே
உனதுபழ **நி**மலையெனு மூரைச்சேவித் தறியேனே
பெருபுவியி லுயர்வரிய வாழ்வைத் தீரக் குறியேனே
பிறவியற நினைகுவனே னாசைப் பாடைத் தவிரேனே
துரிதமிடு நிருதர்புர சூறைக் காரப் பெருமாளே
தொழுதுவழி படுமடியர் காவற் காரப் பெருமாளே
விருதுகவி விதரணவி நோதக் காரப் பெருமாளே
விறன்மறவர் சிறுமிதிரு வேளைக்காரப் பெருமாளே.

50

வசனமிக வேற்றி மறவாதே
மனதுதுய ராற்றி லுழலாதே
இசைபயில்ச டாக்ஷ ரமதாலே
இகபரசௌ பாக்ய மருள்வாயே
பசுபதிசி வாக்ய முணர்வோனே
பழநிமலை வீற்ற ருளும்வேலா
அசுரர்கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறை மீட்ட பெருமாளே.

51

மூல மந்திர மோத லிங்கிலை
யீவ திங்கிலை நேய மிங்கிலை
மோன மிங்கிலை ஞான மிங்கிலை மடவார்கள்
மோக முண்டதி தாக முண்டப
சார முண்டப ராத முண்டிடு
மூக னென்றொரு பேரு முண்டருள் பயிலாத
கோல முங்குண வீன துன்பர்கள்
வார்மை யும்பல வாகி வெந்தெழு
கோர கும்பியி லேவி முந்திட நினைவாகிக்
கூடு கொண்டுழல் வேனை யன்போடு
ஞான நெஞ்சினர் பாலி ணங்கிடு
கூர்மை தந்தினி யாள வந்தருள் புரிவாயே
பீலி வெந்துய ராவி வெந்தவ
சோகு வெந்தமண் மூகர் நெஞ்சிடை
பீதி கொண்டிட வாது கொண்டரு ளெழுதேடு
பேணி யங்கெதி ராறு சென்றிட
மாற னும்பிணி தீர வஞ்சகர்
பீறு வெங்கழு வேற வென்றிடு முருகோனே

ஆல முண்டவர் சோதி யங்கணர்
பாக மொன்றிய வாலை யந்தரி
ஆதி யந்தமு மான சங்கரி குமரேசா
ஆர ணம்பயில் ஞான புங்கவ
சேவ லங்கொடி யான பைங்கர
ஆவி னன்குடி வாழ்வு கொண்டருள் பெருமாளே.

52

மூலங்கிள ரோருரு வாய்நடு
நாலங்குல மேனடு வேரிடை
மூள்பிங்கலை நாடியொ டாடிய முதல்வேர்கள்
மூணும்பிர காசம தாயொரு
சூலம்பெற வோடிய வாயுவை
மூலந்திகழ் தூண்வழி யேயள விடவோடிப்
பாலங்கிள ராறுசி காரமொ
டாருஞ்சுட ராடுப ராபர
பாதம்பெற ஞானச தாசிவ மதின்மேவிப்
பாடுந்தொனி நாதமு நூபுர
மாடுங்கழ லோசையி லேபரி
வாகும்படி யேயடி யேனையும் அருள்வாயே
சூலங்கலை மான்மழு வோர்துடி
வேதன்தலை போடும ராவிரி
தோடுங்குழை சேர்பர ஞர்தரு முருகோனே
சூரன்கர மார்சிலை வாளணி
தோளுந்தலை தூள்பட வேஅவர்
சூளுங்கெட வேல்விடு சேவக மயில்வீரா
காலின்கழ லோசையு நூபுர
வார்வெண்டைய வோசையு மேயுக
காலங்களி னோசைய தாநட மிடுவோனே

கானங்கலெ மான்மக ளார் தமை
நாணங்கெட வேயணை வேள்பிர
காசம்பழ னுபுரி மேவிய பெருமாளே.

53

உலகபசு பாச தொந்த மதுவான
உறவுகிளை தாயர் தந்தை மனைபாலர்
மலசலசு வாச சஞ்ச லமதாலென்
மதிநிலைகெ டாம லுன்ற னருள்தாராய்
சலமறுகு பூளை தும்பை யணிசேயே
சரவணப வாமு குந்தன் மருகோனே
பலகலைசி வாக மங்கள் பயில்வோனே
பழநிமலை வாழ வந்த பெருமாளே.

54

திடமிலிசற் குணமிலிநற் றிறமிலியற் புதமான
செயலிலிமெய்த் தவமிலிநற் செபமிலிசோர்க் கமுமீதே
இடமிலிகைக் கொடையிலிசொற் கியல்பிலிநற் றமிழ்பாட
இருபதமுற் றிருவினையற் றியல்கதியைப் பெறவேணும்
கெடுமதியுற் றிடுமசுரக் கிளைமடியப் பொரும்வேலா
கிரணகுறைப்பிறையறுகக்கிதழ்மலர்கொக் கிறகோடே
படர்சடையிற் புனைநடனப் பரமர்தமக் கொருபாலா
பலவயலிற் றரளநிரைப் பழநிமலைப் பெருமாளே.

55

வரதா மணிநீ யெனவோரில்
வருகா தெதுதா னதில்வாரா
திரதா திகளால் நவலோக
மிடவே கரியா மிதிலேது
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூ லறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனு புரிவாழ் பெருமாளே.

56

அருத்தி வாழ்வோடு தனகிய மனைவியு முறவோரும்
அடுத்த பேர்களு மிதமுறு மகவோடு வளநாடும்
தரித்த வூருமே யெனமன நினைவது நினையாதுன்
தனைப்ப ராவியும் வழிபடு தொழிலது தருவாயே
எருத்தி லேறிய இறையவர் செவிபுக உபதேசம்
இசைத்த நாவின இதனுறு குறமக ளிருபாதம்
தரித்த சேகர மகபதி தரவரு தெய்வயானை
பதிக்கோ ளாறிரு புயபழ நியிலுறை பெருமாளே.

நான்காவது படைவீடாகிய

திருவேரகம் (சுவாமிமலை)

57

இருவினை புனைந்துஞான விழிமுனை திறந்துநோயி
னிருவினை யிடைந்துபோக மலமூட
இருளற விளங்கியாறு முகமோடு கலந்துபேத
மிலையென இரண்டுபேரு மழகான
பரிமள சுகந்தவீத மயமென மகிழ்ந்துதேவர்
பணியவிண் மடந்தைபாத மலர்தூவப்
பரிவுகோ டநந்தகோடி முனிவர்கள் புகழ்ந்துபாட
பருமயி லுடன் குலாவி வரவேணும்
அரியய னறிந்திடாத அடியிணை சிவந்தபாதம
அடியென விளங்கியாடு நடராஜன்
அழலுறு மிரும்பின்மேனி மகிழ்மர கதம்பெணுகம்
அயலணி சிவன்புராரி யருள்சேயே
மருவலர்கள் திண்பணார முடியுடல் நடுங்க ஆவி
மறலியுண வென்றவேலை யுடையோனே
வளைகுல மலங்குகாவி ரியின்வட புறஞ்சுவாமி
மலைமிசை விளங்குதேவர் பெருமாளே.

58

எந்தத் திகையினு மலையினு முவரியி
னெந்தப படியினு முகடினு முளபல
எந்தச் சடலமு முயிரியை பிறவியி னுழலாதே
இந்தச் சடமுட னுயிர்நிலை பெறநளி
னம்பொற் கழலிணை களில்மரு மலர்கொடு
என்சித் தமுமன முருகிநல் சுருதியின் முறையோடே

சந்தித் தரஹர சிவசிவ சரணென
கும்பிட் டிணையடி யவையென தலைமிசை
தங்கப் புளகித மெழஇரு விழிபுனல் குதிபாயச்
சம்பைக் கொடியிடை விபுதையி னழகுமு
னந்தத் திருநட மிடுசர ணழகுற
சந்தச் சபைதனி லெனதுள முருகவும் வருவாயே

தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி
தந்தத் தனதன டுடுடுடு டமடம
துங்கத் திசைமலை யுவரியு மறுகச லரிபேரி
துன்றச் சிலைமணி கலகல கலினென
சிந்தச் சுரர்மல ரயன்மறை புகழ்தர
துன்புற் றவுணர்கள் நமனுல குறவிடு மயில்வேலா

கந்தச் சடைமுடி கனல்வடி வடலணி
யெந்தைக் குயிரெனு மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி யுமையரு ளிளையோனே
கஞ்சப் பதமிவர் திருமகள் குலமகள்
அம்பொற் கொடியிடை புணரரி மருகநல்
கந்தப் பொழில்திகழ் **குருமலை** மருவிய பெருமாளே.

59

ஒருவரையு மொருவரறி யாம லுந்திரிந்
திருவினையி னிடர்கலியொ டாடி நொந்துநொந்
துலையிலிடுமெழுகதெனவாடிமுன்செய்வஞ் சனையாலே

ஒளிபெறவெ யெழுபுமர பாவை துன்றிடுங்
கயிறுவித மெனமருவி யாடி விண்பரிங்
தொளிருமின லுருவதென வோடி யங்கம்வெங்
திடுவேனைக்

கருதியொரு பரமபொரு ளீது என்றுஎன்
செவியிணையி னருளியுரு வாகி வந்தஎன்
கருவினையொ டருமலமு நீறு கண்டுதண் டருமாமென்
கருணைபொழி கமலமுக மாறு மிந்துளங்
தொடைமகுட முடியுமொளிர் நூபு ரஞ்சரண்
கலகலென மயிலின்மிசை யேறி வந்துகந்
தெனையாள்வாய்

திரிபுரமு மதனுடலும் நீறு கண்டவன்
தருணமழ விடையனட ராஜ னெங்கணுங்
திகழருண் கிரிசொருப ஞதி யந்தமங் கறியாத
சிவயநம நமசிவய கார ணன்சுரந்
தமுதமதை யருளியெமை யாளு மெந்தைதன்
திருவுருவின் மகிழெனது தாய்பயந்திடும் புதல்வோனே

குருகுகொடி யுடன்மயிலி லேறி மந்தரம்
புவனகிரி சுழலமறை யாயி ரங்களுங்
குமரகுரு வெனவலிய சேட னஞ்சவங் திடுவோனே
குறமகளி னிடைதுவள பாத செஞ்சிலம்
பொலியவொரு சசிமகளொ டேக லந்துதிண்
குருமலையின் மருவுகுரு நாத வும்பர்தம் பெருமாளே.

60

கடிமா மலர்க்கு ளின்ப முளவேரி கக்கு நண்பு
தருமா கடப்ப மைந்த தொடைமாலை
கனமேரு வொத்தி டும்ப னிருமாபு யத்த ணிந்த
கருணாக ரப்ர சண்ட கதிர்வேலா
வடிவார் குறத்தி தன்பொ னடிமீது நித்த முந்தண்
முடியான துற்று கந்து பணிவோனே

வளவாய்மை சொற்ப்ர பந்த முளகீர னுக்கு கந்து
மலர்வாயி லக்க ணங்க ளியல்போதி
அடிமோனை சொற்கி ணங்க வுலகாமு வப்ப என்று
னருளால ளிக்கு கந்த பெரியோனே
அடியேனு ரைத்த புன்சொ லதுமீது நித்த முந்த
ணருளேத ழைத்து கந்து வரவேணும்
செடிநேரு டற்கு டம்பை தனின்மேவி யுற்றி டிந்த
படிதான லக்க ணிங்க ணுறலாமோ
திறமாத வர்க்க ணிந்து ணிருபாத பத்ம முய்ந்த
திருவேர கத்த மர்ந்த பெருமாளே.

61

வாதமொடு சூலைகண்ட மாலைகுலை நோவுசந்து
மாவலிவி யாதிகுன்ம மொடுகாசம்
வாயுவுட னேபரந்த தாமரைகள் பீனசம்பின்
மாதர்தரு பூஷணங்கள் எனவாகும்
பாதகவி யாதிபுண்கள் ஆனதுட னேதொடர்ந்து
பாயலைவி டாதுமங்க இவையால்நின்
பாதமல ரானதின்க ணேயமற வேமறந்து
பாவமது பானமுண்டு வெறிமூடி
ஏதமுறு பாசபந்த மானவலை யோடுழன்று
ஈனமிகு சாதியின்க ணதிலேயான்
ஈடழித லானதின்பின் மூடனென வோதுமுன்புன்
ஈரஅருள் கூரவந்து எனையாள்வாய்
சூதமகிழ் பாலைவன்னி தாதுவளர் சோலைதுன்றி
சூழுமதில் தாவிமஞ்சி னளவாகத்
தோரணநன் மாடமெங்கு நீடுகோடி யேதழைந்த
ஸ்வாமிமலை வாழவந்த பெருமாளே.

62

நாவேறு பாமணத்த பாதார மேநினைத்து
நாலாறு நாலுபற்று வகையான
நாலாரு மாகமத்தின் நூலாய ஞானமுத்தி
நாடோறு நானுரைத்த நெறியாக
நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
நேராக வாழ்வதற்கு னருள்கூர
நீடார்ச டாதரத்தின் மீதேப ராபரத்தை
நீகாணெ னாவனைச்சொ லருள்வாயே
சேவேறு மீசர்சுற்ற மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா
தேரார்கள் நாடுசுட்ட சூரார்கள் மாளவேட்டு
தீராகு காகுறத்தி மணவாளா
காவேரி நேர்வடக்கி லேவாவி பூமணத்த
காவார்சு வாமிவெற்பின் முருகோனே
கார்போலு மேனிபெற்ற மாகாளி வாலைசத்தி
காமாரி வாமிபெற்ற பெருமாளே.

63

பாதி மதிநதி போது மணிசடை
நாத ரருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காக முறஅருள்
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே
ஆதி அயனொடு தேவர் சுரருல
காளும் வகையுறு சிறைமீளா

ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவுசு
வாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே.

64

சரணகம லாலயத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம்வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
தமியன்மிடி யால்மயக்க முறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர்பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ந மணியணிபொன் மாலைசெச்சை
கமழுமண மார்கடப்ப மணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோகமிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணுநெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே.

65

குமரகுரு பரமுருக குகனே குறச்சிறுமி
கணவசர வணநிருதர் கலகா பிறைச்சடையர்
குருவெனநு லுரையுதவு மயிலா எனத்தினமு
முருகாதே

குயில்மொழிநன் மடவியர்கள் விழியா லுருக்குபவர்
தெருவிலந வரதமன மெனவே நடப்பர்நகை
கொளுமவர்க ளுடைமைமன முடனே பறிப்பவர்க
ளனைவோரும்

தமதுவச முறவசிய முகமே மினுக்கியர்கள்
முலையிலுறு துகில்சரிய நடுவீதி நிற்பவர்கள்
தனமிலியர் மனமுறிய நழுவா வுழப்பியர்கண்
வலையாலே

சதிசெய்தவ ரவர்மகிழ அணைமீ துருக்கியர்கள்
வசமொழுகி யவரடிமை யெனமாத ரிட்டதொழில்
தனிலுழலு மசடனையு னடியே வழுத்தஅருள்
தருவாயே

சமரமொடு மசுரர்படை களமீ தெதிர்த்தபொழு
தொருநொடியி லவர்கள்படை கெடவே லெடுத்தவனி
தனில்நிருதர் சிரமுருள ரணதூள் படுத்திவிடு செருமீதே

தவனமொடு மலகைநட மிடவீர பத்திரர்க
ளதிரநிண மொடுகுருதி குடிகாளி கொக்கரிசெய்
தசையுணவு தனின்மகிழ விடுபேய் நிரைத்திரள்கள்
பலகோடி

திமிதமிட நரிகொடிகள் கழுகா டரத்தவெறி
வயிரவர்கள் சுழலவொரு தனியா யுதத்தைவிடு
திமிரதின கர அமரர் பதிவாழ்வு பெற்றுலவு
முருகோனே

திருமருவு புயனயனு டயிரா வதக்குரிசி
லடிபரவு பழநிமலை கதிர்காம முற்றுவளர்
சிவசமய அறுமுகவதிருவேரகத்திலுறை பெருமாளே.

66

தெருவினில் நடவா மடவார்
திரண்டோ றுக்கும் வசையாலே
தினகர னெனவே லையிலே
சிவந்து திக்கும் மதியாலே
பொருசிலை வளையா இளையா
மதன்தோ டுக்குங் கணையாலே
புளகித முலையா ளலையா
மனஞ்சலித்தும் விடலாமோ
ஒருமலை யிருகூ றெழவே
யுரம்பு குத்தும் வடிவேலா
ஒளிவளர் திருவேரகமே
யுகந்து நிற்கும் முருகோனே
அருமறை தமிழ்நூ லடைவே
தெரிந்து ரைக்கும் புலவோனே
அரியரி பிரமா தியர்கால்
விலங்க விழ்க்கும் பெருமாளே.

67

குமர குருபர முருக சரவண
குகசண் முககரி பிறகான
குழக சிவசுத சிவய நமவென
குரவ னருள்குரு மணியேயென்
றமுத இமையவர் திமிர்த மிடுகட
லதென அநுதின முனையோதும்
அமலை அடியவர் கொடிய வினைகொடு
மபய மிடுகுர லறியாயோ
திமிர எழுகட லுலக முறிபட
திசைகள் பொடிபட வருசூரர்

சிகர முடியுடல் புவியில் விழவுயிர்
திறைகோ டமர்பொரு மயில்வீரா
நமனை யுயிர்கொளு மழலி னிணைகழல்
நதிகோள் சடையினர் குருநாதா
நளின குருமலை மருவி யமர்தரு
நவிலு மறைபுகழ் பெருமாளே.

68

அவாமரு வினவசு தைகாணும டவாரெனு
மவார்கனலில் வாழ்வென் றுணராதே
அராநுக ரவாதையு றுதேரைக திநாடும
றிவாகியுள மால்கொண் டதனாலே
சிவாயமெ னுநாமமொ ருகாலுநி னையாததி
மிராகரனை வாவென் றருள்வாயே
திரோதம லமாறும டியார்கள ருமாதவர்
தியானமு றுபாதந் தருவாயே
உவாவினி யகானுவி னிலாவும யில்வாகன
முலாசமுட னேறுங் கழலோனே
உலாவுத யபானுச தகோடியு ருவானவொ
ளிவாகும யில்வேலங் கையிலோனே
துவாதச புயாசல சடானன வராசிவ
சுதாஎயினர் மானன் புடையோனே
சுராதிப திமாலய னுமாலொடு சலாமிடு
சுவாமிமலை வாழும் பெருமாளே.

69

கறைபடுமு டம்பி ராதெனக்
கருதுதலொ ழிந்து வாயுவைக்
கருமவச னங்க ளால்மறித் தனலூதிக்

கவலைபடு கின்ற யோககற்
பனைமருவு சிந்தை போய்விடக்
கலகமிடு மஞ்சும் வேரறச் செயல்மாளக்
குறைவறநி றைந்த மோனநிர்க்
குணமதுபொ ருந்தி வீடுறக்
குருமலைவி ளங்கு ஞானசற் குருநாதா
குமரசர ணென்று கூதளப்
புதுமலர்சொ ரிந்து கோமளப்
பதயுகள புண்ட ரீகமுற் றுணர்வேனோ
சிறைதளைவி ளங்கு பேர்முடிப்
புயலுடன டங்க வேபிழைத்
திமையவர்கள் தங்க ளூர்புகச் சமராடித்
திமிரமிகு சிந்து வாய்விடச்
சிகரிகளும் வெந்து நீறெழத்
திகிரிகொள நந்த சூடிகைத் திருமாலும்
பிறைமவுலி மைந்த கோவெனப்
பிரமனைமு னிந்துகாவலிட்
டொருநொடியில் மண்டு சூரனைப் பொருதேறிப்
பெருகுமத கும்ப லாளிதக்
கரியெனப்ர சண்ட வாரணப்
பிடிதனைம ணந்த சேவகப் பெருமாளே.

70

காமியத் தழுந்தி யிளையாதே
காலர்கைப் படிந்து மடியாதே
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஒளியத்தி லந்த மருள்வாயே
தூமமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே.

ஐந்தாவது படைவீடாகிய

குன்றுதோருடல்

71

வஞ்சக லோப மூடர் தம்பொரு ளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது பலபாவின்
வண்புகழ் பாரி காரி யென்றிசை வாது கூறி
வந்தியர் போல வீணி லழியாதே
செஞ்சர ணுதகீத கிண்கிணி நீப மாலை
திண்டிறல் வேல்ம யூர முகமாறும்
செந்தமிழ் நாளு மோதி உய்ந்திட ஞான மூறு
செங்கனி வாயி லோர்சொ லருள்வாயே
பஞ்சவ னீடு கூனு மொன்றிடு தாப மோடு
பஞ்சற வாது கூறு சமண்மூகர்
பண்பறு பீலி யோடு வெங்கழு வேற வோது
பண்டித ஞான நீறு தருவோனே
குஞ்சரம் யாளி மேவு பைம்புன மீது லாவு
குன்றவர் சாதி கூடி வெறியாடிக்
கும்பிட நாடி வாழ்வு தந்தவ ரோடு வீறு
குன்றுதோ ருடல் மேவு பெருமாளே.

72

அதிருங் கழல்ப ணிந்து னடியேனுன்
அபயம் புகுவ தென்று நிலைகாண
இதயந் தனிலி ருந்து க்ருபையாகி
இடர்சங் கைகள் கலங்க அருள்வாயே
எதிரங் கொருவ ரின்றி நடமாடும்
இறைவன் றனது பங்கி லுமைபாலா
பதியெங்கிலுமி ருந்து விளையாடிப்
பலகுன் றிலும மர்ந்த பெருமாளே.

73

தறையின் மானுட ராசையி னுல்மட
லெழுது மாலருள் மாதர்கள் தோதக
சரசர் மாமல ரோதியி னுலிரு கோங்கையாலுந்
தளர்மி னேரிடை யாலுடை யால்நடை
யழகி னுல்மொழி யால்விழி யால்மருள்
சவலை நாயடி யேன்மிக வாடிம யங்கலாமோ
பறவை யானமெய்ஞ் ஞானிகள் மோனிகள்
அணுகொ ணுவகை நீடுமி ராசிய
பவன பூரக வேகிக மாகிய விந்துநாதம்
பகரொ ணுதது சேரவொ ணுதது
நினையொ ணுதது வானத யாபர
பதிய தானச மாதிம னேலயம் வந்துதாராய்
சிறைவி டாதநி சாசரர் சேனைகள்
மடிய நீலக லாபம தேறிய
திறல்வி நோதச மேளத யாபர அம்புராசித்
திரைகள் போலலை மோதிய சீதள
குடக காவிரி நீளலை சூடிய
திரிசி ராமலை மேலுறை வீரகு றிஞ்சிவாழும்
மறவர் நாயக ஆதிவி நாயக
ரிளைய நாயக காவிரி நாயக
வடிவி னுயக ஆனைத னுயக எங்கள்மானின்
மகிழு நாயக தேவர்கள் நாயக
கவுரி நாயக னுர்குரு நாயக
வடிவ தாமலை யாவையு மேவிய தம்பிரானே.

ரத்நகிரி (வாட்போக்கி)

74

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி

முத்தனு மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

குன்றக்குடி

75

நேசா சாரா டம்பர மட்டைகள்
பேசா தேயே சுங்கள மட்டைகள்
நீசா ளோடே யும்பழ கீக்கவர் பொருளாலே
நீயே நானே யென்றொரு சத்தியம்
வாய்கூ சாதோ துங்க படத்திகள்
நேரா லேதா னின்று பிலுக்கிகள் எவர்மேலும்
ஆசா பாசா தோந்தரை யிட்டவர்
மேல்வீழ் வார்பால் சண்டிகள் கட்டழ
காயே மீதோ லெங்கு மினுக்கிகள் வெகுமோகம்
ஆகா தாவே சந்தரு திப்பொழு
தோகோ வாவா வென்று பகட்டிக
ளாகா மோகா வம்பிகள் கிட்டிலு முறவாமோ
பேசா தேபோய் நின்றுறி யிற்றயிர்
வாயா வாவா வென்று குடித்தருள்
பேரா லேநீள் கஞ்சன் விடுத்தெதிர் வருதூது
பேழ்வாய் வேதா ளம்பக டைப்பகு
வாய்நீள் மானு ளுஞ்சர ளத்தொடு
பேயானுள் போர்வென் றெதிரிட்டவன் மருகோனே
மாதூ டாடா டும்பகை யைப்பகை
சூரா ளோடே வன்செரு வைச்செறு
மாதூ ராபா ரெங்கு மருட்போலி முருகோனே

வாஞு டேழ்நா டும்புகழ் பெற்றிடு
தேஞு றேசூழ் துங்க மலைப்பதி
மாயூ ராவாழ் குன்றை தழைத்தருள் பெருமாளே.

தென்சேரிகிரி

76

எங்கேனு மொருவர்வர அங்கேக ணினிதுகொடு
இங்கேவ ருனதுமயல் தரியாரென்
றிந்தாவெ னினியஇதழ் தந்தேனை யுறமருவ
என்ருசை குழையவிழி யிணையாடித்
தங்காம லவருடைய வுண்டான பொருளுயிர்கள்
சந்தேக மறவெபறி கொளுமாஞர்
சங்கீத கலவிநல மென்ருேது முதவிட
தண்பாரு முனதருளை யருள்வாயே
சங்கோடு திகிரியது கொண்டேயு நிரைபிறகு
சந்தாரும் வெதிருகுழ லதுவூதித்
தன்காதல் தனையுகள என்றேமு மடவியர்கள்
தங்கூறை கொடுமரமி லதுவேறுஞ்
சிங்கார அரிமருக பங்கேரு கனுமருள
சென்றேயும் அமரருடை சிறைமீளச்
செண்டாடி அசுரர்களை ஒன்ருக அடியர்தொழு
தென்சேரி கிரியில்வரு பெருமாளே.

திருக்கழுக்குன்றம்

77

வேதவெற்பி லேபுனத்தில் மேவிநிற்கு மபிராம
வேடுவச்சி பாதபத்ம மீதுசெச்சை முடிதோய
ஆதரித்து வேளைபுக்க ஆறிரட்டி புயநேய
ஆதரத்தோ டாதரிக்க ஆனபுத்தி புகல்வாயே

காதுமுக்ர வீரபத்ர காளிவெட்க மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட காலர்பத்தி யிமையோரை
ஓதுவித்த நாதர்கற்க ஓதுவித்த முனிநாண
ஓரெழுத்தி லாறெழுத்தை ஓதுவித்த பெருமாளே.

78

ஓல மிட்ட சுரும்பு தனு தனுவென
வேசி ரத்தில் விழுங்கை பளீர் பளீரென
வோசை பெற்ற சிலம்பு கலீர் கலீரென விரகலீலை
ஓர்மி டற்றி லெழும்புள் குகூ குகூவென
வேர்வை மெத்த வெழுந்து சலா சலாவென
ரோம குச்சு நிறைந்து சிலீர் சிலீரென அமுதமாரன்

ஆல யத்து ளிருந்து குபீர் குபீரென
வேகு திக்க வுடம்பு விரீர் விரீரென
ஆர முத்த மணிந்து அளா வளாவென மருவுமாதர்
ஆசை யிற்கை கலந்து சுமா சுமாபவ
சாக ரத்தி லழுந்தி எழா எழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குகா குகாவென
வகைவராதோ

மாலையிட்ட சிரங்கள் செவேல் செவேலென
வேலெ முச்சி தரும்பல் வெளேல் வெளேலென
வாகை பெற்ற புயங்கள் கறேல் கறேலென
எதிர்கொள்சூரன்
மார்பு மொக்க நெரிந்து கரீல் கரீலென
பேய்கு திக்க நிணங்கள் குழூ குழூவென
வாய்புதைத்து விழுந்து ஐயோ ஐயோவென உதிரமாருய்
வேலை வற்றி வறண்டு சுறீல் சுறீலென
மாலை வெற்பு மிடிந்து திடீல் திடீலென
மேன்மை பெற்ற ஜனங்கள் ஐயா ஐயாவென
விசைகள்கூற

வேலெ டுத்து நடந்த திவா கராசல
வேடு வப்பெண் மணந்த புயா சலாதமிழ்
வேதவெற்பி லமர்ந்த க்ருபா கராசிவ குமரவேளே.

கயிலைமலை

79

தேனுந்து முக்கனிகள் பாலசெங் கருப்பிளநீர்
சீரும்ப ழித்தசிவ மருளூறத்
தீதும்பி டித்தவினை யேதும்பொ டித்துவிழ
சீவன்சி வச்சொருப மெனதேறி
நானென்ப தற்றுயிரொ டுனென்ப தற்றுவெளி
நாதம்ப ரப்பிரம வொளிமீதே
ஞானஞ்சு ரப்பமகி ழாநந்த சித்தியொடெ
நாளுங்க ளிக்கபத மருள்வாயே
வானந்த ழைக்கஅடி யேனுஞ்செ ழிக்க அயன்
மாலும்பி ழைக்கஅலை விடமாள
வாருங்க ரத்தனெமை யாளுந்த கப்பன்மழு
மானின்க ரத்தனருள் முருகோனே
தானந்த னத்ததன னவண்டு சுற்றிமது
தானுண்க டப்பமல ரணிமார்பா
தானங்கு றித்துஎமை யாளுந் திருக்கயிலை
சாலுங்கு றத்திமகிழ் பெருமாளே.

80

புமியதனிற் ப்ரபுவான
புகலியில்வித் தகர்போல
அமர்தகவித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே
சமரிலெதிர்த் தசுர்மாளத்
தனியயில்விட் டருள்வோனே

நமசிவயப் பொருளானே
ரசதகிரிப் பெருமாளே.

திருவேங்கடம்

81

சாந்தமில் மோகவெரி காந்திய வாவனில
மூண்டவி யாதசம யவிரோத
சாங்கலை வாரிதியை நீந்தவொ ணாதுலகர்
தாந்துணை யாவரென மடவார்மேல்
ஏந்திள வார்முளரி சாந்தணி மார்பினொடு
தோய்ந்துரு காஅறிவு தடுமாறி
ஏங்கிட ஆருயிரை வாங்கிய காலன்வசம்
யான்தனி போய்விடுவ தியல்போதான்
காந்தளி னனகர மான்தரு கானமயில்
காந்தவி சாகசர வணவேளே
காண்டகு தேவர்பதி யாண்டவ னேசுருதி
யாண்டகை யேயிபமின் மணவாளா
வேந்தகு மாரகுக சேந்தம யூரவட
வேங்கட மாமலையி லுறைவோனே
வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்டவெ றுதுதவு பெருமாளே.

திருத்தணிகை

82

வரிக்கலையி னிகரான விழிக்கடையி லினளஞோரை
மயக்கியிடு மடவார்கள் மயலாலே
மதிக்குளறி யுளகாசு மவர்க்குதவி மிடியாகி
வயிற்றிலெரி மிகமூள அதனாலே
ஒருத்தருட னுறவாகி ஒருத்தரொடு பகையாகி
ஒருத்தர்தமை மிகநாடி யவரோடே

உணக்கையிடு படுபாவி எனக்குனது கழல்பாட
உயர்ச்சிபெறு குணசீல மருள்வாயே
விரித்தருண கிரிநாத னுரைத்ததமி ழெனுமாலை
மிகுத்தபல முடனோத மகிழ்வோனே
வெடித்தமணர் கழுவேற ஒருத்திகண வனுமீள
விளைத்ததொரு தமிழ்பாடு புலவோனே
செருக்கியிடு பொருசூரர் குலத்தையடி யறமோது
திருக்கையினில் வடிவேலை யுடையோனே
திருக்குலவு மொருநீல மலர்ச்சுனையி லழகான
திருத்தணிகை மலைமேவு பெருமாளே.

83

ஏது புத்திஐ யாஎ னக்கினி
யாரை நத்திடு வேன வத்தினி
லேயி றத்தல்கொ லோஎ னக்குநி தந்தைதாயென்
றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவ
ரேச லிற்பட வோந கைத்தவர் கண்கள்காணப்
பாதம் வைத்திடை யாத ரித்தெனை
தாளில் வைக்கநி யேம றுத்திடில்
பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனோடிப்
பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னாவெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ
ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீச முட்டரை
யோட வெட்டிய பாநு சத்திகை எங்கள்கோவே
ஓத மொய்ச்சடை யாட வுற்றமர்
மான்ம முக்கர மாட பொற்கழ
லோசை பெற்றிட வேந டித்தவர் தந்தவாழ்வே

மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே
மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே

84

சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்குஞ்
செகுத்தவ ருயிர்க்குஞ் சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் றறிவோம்யாம்
நினைத்தது மளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கரு வறுக்கும் பிறவாமல்
நெருப்பையு மெரிக்கும் பொருப்பையு மிடிக்கும்
நிறைப்புக ழுரைக்குஞ் செயல்தாராய்
தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் தனபேரி
தடுட்டுடு டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தளத்துட னடக்குங் கொடுசூரர்
சினத்தையு முடற்சங் கரித்தம லைமுற்றுஞ்
சிரித்தெரி கொளுத்துங் கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினிற் சுகித்தெண்
திருத்தணி யிருக்கும் பெருமாளே.

85

தூக்கம ருக்கொரு சாரையை வேருரு
சாட்சிய றப்பசி யாறியை நீறிடு
சாஸ்த்ர வழிக்கதி தூரனை வேர்விழு தவமுழ்குந்

தாற்பர்ய மற்றுழல் பாவியை நாவலர்
போற்பரி வுற்றுனை யேகரு தாதிகல்
சாற்றுத மிழ்க்குரை ஞாளியை நாள்வரை தடுமாறிப்
போக்கிட மற்றவ்ரு தாவனை ஞானிகள்
போற்றுத லற்றது ரோகியை மாமருள்
பூத்தம லத்ரய பூரியை நேரிய புலையேனைப்
போக்கிவி டக்கட னேநர கோகதி
போய்ப்பெறு கைக்கிலை யோகதி யானது
போர்ச்சுடர் வஜ்ரவைவேல்மயிலா அருள் புரிவாயே
மூக்கறை மட்டைம காபல காரணி
சூர்ப்பந கைப்படு மூளியு தாசனி
மூர்க்க குலத்திவி பீஷணர் சோதரி முழுமோடி
மூத்தவ ரக்கனி ராவண னேடியல்
பேற்றிவி டக்கம லாலய சீதையை
மோட்டன் வளைத்தொரு தேர்மிசை யேகோடு
முகிலேபோய்
மாக்கன சித்திர கோபுர நீள்படை
வீட்டிலி ருத்திய நாளவன் வேரற
மார்க்கமு டித்தவி லாளிகள் நாயகன் மருகோனே
வாச்சிய மத்தள பேரிகை போல்மறை
வாழ்த்தம லர்க்கழு நீர்தரு நீள்சுனை
வாய்த்ததி ருத்தணி மாமலை மேவிய பெருமாளே.

86

நிலையாத சமுத்திர மான
சமுசார துறைக்கணின் மூழ்கி
நிசமான தெனப்பல பேசி யதனூடே
நெடுநாளு முழைப்புள தாகி
பெரியோர்க ளிடைக்கர வாகி
நினைவால்நி னடித்தொழில் பேணி துதியாமல்

தலையான வுடற்பிணி யூறி
பவநோயி னலைப்பல வேகி
சலமான பயித்திய மாகி தடுமாறித்

தவியாமல் பிறப்பையு நாடி
யதுவேரை யறுத்துனை யோதி
தலமீதில் பிழைத்திட வேநி னருள்தாராய்

கலியாண சுபுத்திர னாக
குறமாது தனக்கு விநோத
கவினாரு புயத்திலு லாவி விளையாடிக்

களிகூரு முனைத்துணை தேடு
மடியேனை சுகப்பட வேவை
கடனாகு மிதுக்கன மாகு முருகோனே

பலகாலு முனைத்தொழு வோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி
படிமீது துதித்துடன் வாழ அருள்வேளே

பதியான திருத்தணி மேவு
சிவலோக மெனப்பரி வேறு
பவரோக வயித்திய நாத பெருமாளே.

87

சினத்தி லத்தினை சிறுமண லளவுடல்
செறித்த தெத்தனை சிலைகட லினிலுயிர்
செனித்த தெத்தனை திரள்கய லெனபல வதுபோதா

செமித்த தெத்தனை மலைசுனை யுலகிடை
செழித்த தெத்தனை சிறுதன மயல்கொடு
செடத்தி லெத்தனை நமனுயிர் பறிகொள்வ
தளவேதோ

மனத்தி லெத்தனை நினைகவ டுகள்குடி
கெடுத்த தெத்தனை மிருகம தெனவுயிர்
வதைத்த தெத்தனை யளவில விதிகர மொழியாமல்

வகுத்த தெத்தனை மசகனை முருடனை
மடைக்கு லத்தனை மதியழி விரகனை
மலர்ப்ப தத்தினி லுருகவு மினியருள் புரிவாயே

தனத்த னத்தன தனதன தனதன
திமித்தி மித்திமி திமிதிமி திமிதிமி
தகுத்த குத்தகு தகுதகு தகுதகு தகுதீதோ
தரித்த ரித்தரி தரிரிரி ரிரிரிரி
தடுட்டு டுட்டுடு டுடுடுடு டுடுடுடு
தமித்த மத்தள தமருக விருதொலி கடல்போலச்

சிளத்த மர்க்கள செருதிகழ் குருதிய
திமிழ்த்தி டக்கரி யசுரர்கள் பரிசிலை
தெறித்தி டக்கழு நரிதின நிணமிசை பொரும்வேலா
செழிக்கு முத்தம சிவசர ணர்கள் தவ
முநிக்க ணத்தவர் மதுமலர் கொடுபணி
திருத்த ணிப்பதி மருவிய குறமகள் பெருமாளே.

88

குருவி யெனப்பல கழுகு நரித்திர
ளரிய வனத்திடை மிருக மெனப்புழு
குறவை யெனக்கரி மரமு மெனத்திரி யுறவாகா
குமரி கலித்துறை முழுகி மனத்துயர்
கொடுமை யெனப்பிணி கலக மிடத்திரி
குலைய னெனப்புலை கலிய னெனப்பலர் நகையாமல்

மருவு புயத்திடை பணிக ளணப்பல
கரிபரி சுற்றிட கலைகள் தரித்தொரு
மதன சரக்கென கனக பலக்குட னதுதேடேன்
வரிய பதத்தினி னருவி யிருப்பிட
மமையு மெனக்கிட முனது பதச்சரண்
மருவு திருப்புக ழருள எனக்கினி யருள்வாயே

விருது தனத்தன தனன தனத்தன
விதமி திமித்திமி திமித திமித்திமி
விகிர்த டடுட்டுடு ரிரிரி யெனக்குகு வெகுதாளம்

வெருவ முகிழ்த்திசை யுரகன் முடித்தலை
நெறுநெ றெனத்திசை யதிர அடைத்திட
மிகுதி கெடப்பொரு அசுரர் தெறித்திட விடும்வேலா

அரிய திரிப்புர மெரிய விழித்தவ
னயனை முடித்தலை யரியு மழுக்கைய
னகில மனைத்தையு முயிரு மளித்தவ னருள்சேயே

அமண ருடற்கெட வசியி லழுத்திவி
ணமரர் கொடுத்திடு மரிவை குறத்தியொ
டழகு **திருத்தணி** மலையில் நடித்தருள் பெருமாளே.

89

தோடத்து ளக்கிகள் அபகட நினைவிகள்
குருட்டு மட்டைகள் குமரிகள் கமரிகள்
சுதைச்சி றுக்கிகள் குசலிக ளிசலிகள் முழுமோசந்

துறுத்த மட்டைகள் அசடிகள் கசடிகள்
முழுப்பு ரட்டிகள் நழுவிகள் மழுவிகள்
துமித்த மித்திரர் விலைமுலை யினவலை புகுதாமல்

அடைத்த வர்க்கியல் சரசிகள் விரசிகள்
தரித்த வித்ரும நிறமென வரவுட
னழைத்து சக்கிர கிரிவளை படிகொடு விளையாடி

அவத்தை தத்துவ மழிபட இருளறை
விலக்கு வித்தொரு சுடரொளி பரவந
லருட்பு கட்டியு னடியிணை யருளுவ தொருநாளே

படைத்த னைத்தையும் வினையுற நடனொடு
துடைத்த பத்தினி மரகத சொருபியொர்
பரத்தி னுச்சியி னடநவி லுமையரு ளினையோனே

பகைத்த ரக்கர்கள் யமனுல குறஅமர்
தொடுத்த சக்கிர வளைகர மழகியர்
படிக்க டத்தையும் வயிறடை நெடியவர் மருகோனே

திடுக்கி டக்கட லசுரர்கள் முறிபட
கொளுத்தி சைக்கிரி பொடிபட சுடரயில்
திருத்தி விட்டொரு நொடியினில் வலம்வரு மயில்வீரா

தினைப்பு னத்திரு தனகிரி குமரிநல்
குறத்தி முத்தொடு சசிமக ளொடுபுகழ்
திருத்த ணிப்பதி மலைமிசை நிலைபெறு பெருமாளே.

90

உடலி னூடு போய்மீளு முயிரி னூடு மாயாத
உணர்வி னூடு வானூடு முதுதீயூ
டலவை யூடு நீரூடு புவியி னூடு வாதாடு
மொருவ ரோடு மேவாத தனிஞானச்

சுடரி னூடு நால்வேத முடியி னூடு மூடாடு
துரிய வாகு லாதீத சிவரூபம்
தொலைவி லாத பேராசை துரிச றுத வோர்பேதை
தொடுமு பாய மேதோசொ லருள்வாயே

மடல றுத வாரீச அடவி சாடி மாறுன
வரிவ ரால்கு வால்சாய அமராடி
மதகு தாவி மீதோடி யுழவரால டாதோடி
மடையை மோதி யாறூடு தடமாகக்

கடல்பு காம காமீன முடுகி வாளை தான்மேவு
கமல வாவி மேல்வீழு மலர்வாவி
கடவுள் நீல மாறுத **தணிகை** காவ லாவீர
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

திருச்செங்கோடு

91

கோடிய மறலியு மவனது கடகமு
மடிய வொருதின மிருபதம் வழிபடு
குதலை யடியவ னினதருள் கொடுபொரு மமர்காண
குறவர் மகள்புணர் புயகிரி சமுகமு
மறுமு கமும்வெகு நயனமும் ரவியுமிழ்
கொடியு மகிலமும் வெளிபட இருதிசை யிருநாலும்
படியு நெடியன எழுபுண ரியுமுது
திகிரி திகிரியும் வருகென வருதகு
பவுரி வருமொரு மரகத துரகத மிசையேறிப்
பழைய அடியவ ருடனிமை யவர்கண
மிருபு டையுமிகு தமிழ்கொடு மறைகொடு
பரவ வருமதி லருணையி லொருவிசை வரவேணும்
சடில தரவிட தரபணி தரதர
பரசு தரசசி தரசுசி தரவித
தமரு கமிருக தரவனி தரசிர தரபாரத்
தரணி தரதனு தரவெகு முககுல
தடினி தரசிவ சுதகுண தரபணி
சயில விதரண தருபுர சசிதரு மயில்வாழ்வே
நெடிய வுடலுரு இருளெழ நிலவெழ
எயிறு சுழல்விழி தழலெழ எழுகிரி
நெரிய அதிர்குரல் புகையெழ இடியெழ நெடுவானும்
நிலனும் வெருவர வருநிசி சரர்தள
நிகில சகலமு மடியவொர் படைதொடு
நிருப குருபர சுரபதி பரவிய பெருமாளே.

92

காலனிடத் தணுகாதே
காசினியிற் பிறவாதே

சீலஅகத் தியஞான
தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே
மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளானே
நாககிரிப் பெருமாளே.

திரிசிராப்பள்ளி

93

அந்தோமன மேநம தாக்கையை
நம்பாதெயி தாகித சூத்திர
மம்போருக னுடிய பூட்டிது இனிமேல்நாம்
அஞ்சாதமை யாகிரி யாக்கையை
பஞ்சாடிய வேலவ னுர்க்கிய
லங்காகுவம் வாஇனி தாக்கையை ஒழியாமல்

வந்தோமிது வேகதி யாட்சியு
மிந்தாமயில் வாகனர் சீட்டிது
வந்தாளுவம் நாமென வீக்கிய சிவநீறும்
வந்தேவெகு வாநமை யாட்கொளு
வந்தார்மத மேதினி மேற்கொள
மைந்தாகும ராவெனு மார்ப்புய மறவாதே

திந்தோதிமி தீதத மாத்துடி
தந்தாதன னுதன தாத்தன
செம்பூரிகை பேரிகை யார்த்தெழ மறையோதச்
செங்காடென வேவரு மூர்க்கரை
சங்காரசி காமணி வேற்கொடு
திண்டாடிம காமயில் மேற்கொளு முருகோனே

இந்தோடிதழ் நாகம காக்கடல்
கங்காளமி னுர்சடை சூட்டிய
என்தாதைச தாசிவ கோத்திர னருள்பாலா

எண்கூடரு ளால்நேளவி நோக்கியை
நன்பூமண மேவிசி ராப்பளி
யென்பார்மன மேதினி நோக்கிய பெருமாளே.

94

வாசித்துக் காணொ ணாதது
பூசித்துக் கூடொ ணாதது
வாய்விட்டுப் பேசொ ணாதது நெஞ்சினாலே

மாசர்க்குத் தோணொ ணாதது
நேசர்க்குப் பேரொ ணாதது
மாயைக்குச் சூழொ ணாதது விந்துநாத

ஓசைக்குத் தூர மானது
மாகத்துக் கீற தானது
லோகத்துக் காதி யானது கண்டுநாயேன்

யோகத்தைச் சேரு மாறுமெய்ஞ்
ஞானத்தைப் போதி யாயினி
யூனத்தைப் போடி டாதும யங்கலாமோ

ஆசைப்பட் டேனல் காவல்செய்
வேடிச்சிக் காக மாமய
லாகிப்போற் பாத மேபணி கந்தவேளே

ஆலித்துச் சேல்கள் பாய்வய
லூரத்திற் காள மோடட
ராரத்தைப் பூண்ம யூரது ரங்கவீரா

நாசிக்குட் ப்ராண வாயுவை
ரேசித்தெட் டாத யோகிகள்
நாடிற்றுக் காணொ ணாதென நின்றநாதா

நாகத்துச் சாகை போயுயர்
மேகத்தைச் சேர் சிராமலை
நாதர்க்குச் சாமி யேசுரர் தம்பிரானே.

95

சத்தி பாணீ நமோநம முத்தி ஞானி நமோநம
தத்வ வாதீ நமோநம விந்துநாத
சத்து ரூபா நமோநம ரத்ந தீபா நமோநம
தற்பர தாபா நமோநம என்றுபாடும்

பத்தி பூண மலையுல கத்தின் மானுர் சவாதகில்
பச்சை பாடீர பூஷித கொங்கைமேல்வீழ்
பட்டி மாடான நானுனை விட்டிராமே யுலோகித
பத்ம சீர்பாத நீயினி வந்துதாராய்

அத்ர தேவா யுதாசுர ருக்ர சேனா பதீசுசி
யர்க்ய சோமாசி யாகுரு சம்ப்ரதாயா
அர்ச்ச னவாக னவய லிக்குள் வாழ்நாய காபுய
அக்ஷ மாலா தராகுற மங்கைகோவே

சித்ர கோலா கலாவிர லக்ஷ்மி சாதார தாபல
திக்கு பாலா சிவாகம தந்த்ரபோதா
சிட்ட நாதா **சிராமலை** யப்பர் ஸ்வாமீ மகாவ்ருத
தேர்ப்பை யாசார வேதியர் தம்பிரானே.

கொங்கணகிரி

96

ஐங்கரனை யொத்தமன மைம்புல மகற்றிவள
ரந்திபக லற்றநினை வருள்வாயே
அம்புவி தனக்குள்வளர் செந்தமிழ் வழுத்தியுனை
அன்போடு துதிக்கமன மருள்வாயே

தங்கிய தவத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திர வெளிக்குவழி யருள்வாயே
தண்டிகை கனப்பவுசு எண்டிசை மதிக்கவளர்
சம்ப்ரம விதத்துடனே யருள்வாயே

மங்கையர் சுகத்தைவெகு இங்கித மெனுற்றமன
முன்றனை நினைத்தமைய அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரக்ஷைபுரி
வந்தணைய புத்தியினை யருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுஉட லுற்றபொரு ளருள்வாயே
குஞ்சர முகற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கண கிரிக்குள்வளர் பெருமாளே.

வள்ளிமலை

97

ககனமு மனிலமு மனல்புனல் நிலமமை
கள்ளப் புலாற்கி ருமிவீடு
கனலெழ மொழிதரு சினமென மதமிகு
கள்வைத்த தோற்பை சுமவாதே
யுகஇறு திகளிலு மிறுதியி லொருபொருள்
உள்ளக்க ணோக்கு மறிவூறி
ஒளிதிக ழுருவுரு வெனுமறை யிறுதியி
லுள்ளத்தை நோக்க அருள்வாயே
ம்ருகமத பரிமள விகசித நளினநள்
வெள்ளைப் பிராட்டி இறைகாண
விடதர குடிலச டிலமிசை வெகுமுக
வெள்ளத்தை யேற்ற பதிவாழ்வே
வகுளமு முகுளித வழைகளு மலிபுன
வள்ளிக் குலாத்தி கிரிவாழும்
வனசரர் மரபினில் வருமொரு மரகத
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே.

விராலிமலை

98

சீரான கோல கால நவமணி
மாலாபி ஷேக பார வெகுவித
தேவாதி தேவர் சேவை செயுமுக மலராறும்
சீராடு வீர மாது மருவிய
ஈராறு தோளு நீளும் வரியளி
சீராக மோது நீப பரிமள இருதாளும்
ஆராத காதல் வேடர் மடமகள்
ஜீமூத மூர்வ லாரி மடமகள்
ஆதார பூத மாக வலமிட முறைவாழ்வும்
ஆராயு நீதி வேலு மயிலுமெய்ஞ்
ஞானாபி ராம தாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது பெறவேணும்
ஏராரு மாட கூட மதுரையில்
மீதேறி மாறி யாடு மிறையவர்
ஏழேழு பேர்கள் கூற வருபொரு ளதிகாரம்
ஈடாய வூமர் போல வணிகரி
லூடாடி யால வாயில் விதிசெய்த
லீலாவி சாரதீர வரதர குருநாதா
கூராழி யால்முன் வீய நினைபவ
னீடேறு மாறு பானு மறைவுசெய்
கோபால ராய னேய முளதிரு மருகோனே
கோடாம லார வார அலைபெறி
காவேரி யாறு பாயும் வயலியில்
கோனாடு சூழ்வி ராலி மலையுறை பெருமாளே.

99

ஐந்து பூதமு மாறு சமயமு
மந்த்ர வேதபு ராண கலைகளும்
ஐம்ப தோர்வித மான லிபிகளும் வெகுரூப

அண்ட ராதிச ராச ரமுமுயர்
புண்ட ரீகனு மேக நிறவனும்
அந்தி போலுரு வானு நிலவொடு வெயில்காலும்

சந்த்ர சூரியர் தாமு மசபையும்
விந்து நாதமு மேக வடிவம
தன்சொ ரூபம தாக வுறைவது சிவயோகம்

தங்க ளாணவ மாயை கருமம
லங்கள் போயுப தேச குருபர
சம்ப்ர தாயமொ டேயு நெறியது பெறுவேனோ

வந்த தானவர் சேனை கெடிபுக
இந்த்ர லோகம்வி பூதர் குடிபுக
மண்டு பூதப சாசு பசிகெட மயிடாரி

வன்கண் வீரிபி டாரி ஹரஹர
சங்க ராஎன மேரு கிரிதலை
மண்டு தூளெழ வேலை யுருவிய வயலூரா

வேந்த நீறணி வேணி யிருடிகள்
பந்த பாசவி கார பரவச
வேன்றி யானச மாதி முறுகுகல் முழைகூடும்

விண்டு மேல்மயி லாட இனியக
ளுண்டு காரளி பாட இதழிபொன்
விஞ்ச வீசுவி ராலி மலையுறை பெருமாளே.

100

கரதல முங்குறி கொண்ட கண்டமும்
விரவியெ ழுந்துசு ருண்டு வண்டடர்
கனவிய கொண்டைகு லைந்த லைந்திட அதிபாரக்

களபசு கந்தமி குந்த கொங்கைக
ளிளகமு யங்கிம யங்கி யன்புசெய்
கனியித ழுண்டுது வண்டு பஞ்சணை மிசைவீழா

இரதம ருந்தியு றுங்க ருங்கயல்
பொருதுசி வந்துகு விந்தி டும்படி
யிதவிய வுந்தியெ னுந்த டந்தனி லுறமூழ்கி
இனியதோ ரின்பம்வி ளைந்த ளைந்துபோய்
வனிதையர் தங்கள்ம ருங்கிணங்கிய
இளமை கிழம்படு முன்ப தம்பெற வுணர்வேனோ

பரதசி லம்புபு லம்பு மம்பத
வரிமுக எண்கினு டன்கு ரங்கணி
பணிவிடை சென்றுமு யன்ற குன்றணி
யிடையேபோய்ப்
பகடியி லங்கைக லங்க அம்பொனின்
மகுடசி ரந்தச முந்து ணிந்தெழு
படியுந டுங்கவி ழும்ப னம்பழ மெனவாகும்

மருதமு தைந்தமு குந்த னன்புறு
மருககு விந்தும லர்ந்த பங்கய
வயலியில் வம்பவிழ் சண்ப கம்பெரி யவிராலி
மலையில் விளங்கிய கந்த என்றுனை
மகிழ்வொடு வந்திசெய் மைந்த னென்றனை
வழிவழி யன்புசெய் தொண்டு கொண்டருள்
பெருமாளே.

101

உருவேற வேஜெபித்து வொருகோடி யோமசித்தி
யுடனுக ஆகமத்து கந்துபேணி
உணர்வாசை யாரிடத்து மருவாது வோரெழுத்தை
யொழியாது வூதைவிட்டி ருந்துநாளும்

தரியாத போதகத்தர் குருவாவ ரோரொருத்தர்
தருவார்கள் ஞானவித்தை தஞ்சமாமோ
தழலாடி வீதிவட்ட மொளிபோத ஞானசித்தி
தருமாகி லாகுமத்தை கண்டிலேனே

குருநாடி ராசரிக்கர் துரியோத ஞதிவர்க்க
குடிமாள மாயமிட்டு குந்திபாலர்
குலையாமல் நீதிகட்டி யெழுபாரை யாளவிட்ட
குறளாக னூறில்நேட்டை கோண்ட ஆதி
மருகா புராரிசித்தன் மகனே விராலிசித்ர
மலைமே லுலாவுசித்த அங்கைவேலா
மதுரா புரேசர்மெய்க்க அரசாளு மாறன்வெப்பு
வளைகூனை யேநிமிர்த்த தம்பிரானே.

கதிர்காமம்

102

திருமக ளுலாவு மிருபுய முராரி
திருமருக நாமப் பெருமாள்காண்
ஜெகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில் விளையாடு
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினை விடாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

103

சரியையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற்
சகலயோ கர்க்குமெட் டரிதாய

சமயபே தத்தினுக் கணுகொணு மெய்ப்பொருட்
டருபரா சத்தியிற் பரமான

துரியமே லற்புதப் பரமஞா னத்தனிச்
சுடர்வியா பித்தநற் பதிநீடு

துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற்
சுகசொரூ பத்தையுற் றடைவேனோ

புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்யசற்
புருஷவீ ரத்துவிக் ரமசூரன்

புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப்
புகழையோ தற்கெனக் கருள்வோனே

கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்

கதலிசூ தத்தினிற் பயிலுமீ ழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே.

104

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணி னைப்பை யிருபோதும்

இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க அருள்வாயே

கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு வொத்த புயவீரா

மதுர வாணி யுற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

திருக்கோணமலை

105

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த வாடையு மணிப்பூணு மாகவே
மினுக்கு மாதர்க ளிடக்காம மூழ்கியே மயலூறி
மிகுத்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியே யுழைத்தேவி டாய்படு
கோடியேனைக்
கலக்க மாகவே மலக்கூடி லேமிகு
பிணிக்கு ளாகியே தவிக்காம லேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயு மொருவாழ்வே
கதிக்கு நாதனி யுனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயேனை யருட்பார்வை யாகவே
கழற்கு ளாகவே சிறப்பான தாயருள் தரவேணும்
மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனே முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொருகுறப்பாவையாள் மகிழ் தருவேளே
வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்ய மாமுனி யிடைக்காடர் கீரனும்
வகுத்த பாவினில் பொருட்கோல மாய்வரு
முருகோனே
நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கோ ணமலை தலத்தாரு கோபுர
நிலைக்குள் வாயினில்கிளிப்பாடுபூதியில் வருவோனே
நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவே
யெடுத்த வேல்கொடு பொடித்தூள தாஎறி
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி பெருமாளே.

ஊதிமலை

106

ஆதிமக மாயியம்பை தேவிசிவ னார்மகிழ்ந்த
ஆவுடைய மாதுதந்த குமரேசா
ஆதரவ தாய்வருந்தி யாதியரு ணேசரென்று
ஆளுமுனை யேவணங்க அருள்வாயே
பூதமது வானவைந்து பேதமிட வேயலைந்து
பூரணசி வாகமங்க ளறியாதே
பூணுமுலை மாதர் தங்கள் ஆசைவகை யேநினைந்து
போகமுற வேவிரும்பு மடியேனை
நீதயவ தாயிரங்கி நேசவரு ளேபுரிந்து
நீதிநெறி யேவிளங்க வுபதேச
நேர்மைசிவ னார்திகழ்ந்த காதிலுரை வேதமந்த்ர
நீலமயி லேறிவந்த வடிவேலா
ஓதுமறை யாகமஞ்சொல் யோகமது வேபுரிந்து
ஊழியுணர் வார்கள் தங்கள் வினைதீர
ஊனுமுயி ராய்வளர்ந்து ஓசையுடன் வாழ்வுதந்த
ஊதிமலை மீதுகந்த பெருமாளே.

விநாயகமலை

107

சரவண ஜாதா நமோநம கருணைய தீதா நமோநம
சததள பாதா நமோநம அபிராம
தருணக தீரா நமோநம நிருபமர் வீரா நமோநம
சமதள வூரா நமோநம ஜகதீச
பரமசொ ரூபா நமோநம சுரர்பதி பூபா நமோநம
பரிமள நீபா நமோநம உமைகாளி
பகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம
பவுருஷ சீலா நமோநம அருள்தாராய்

இரவியு மாகாச பூமியும் விரவிய தூளேற வானவ
ரேவர்களு மீடேற ஏழ்கடல் முறையோவேன்
றிடர்பட மாமேரு பூதர மிடிபடவேதா னிசாசர
ரிகல்கெட மாவேக நீடயில் விடுவோனே

மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகார வேதனும்
வசுவெனு மாகார ஈசனு மடிபேண
மயிலுறை வாழ்வே விநாயக மலை யுறை வேலா மகீதர
வனசர ராதார மாகிய பெருமாளே

பழமுதிர்சோலை

108

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயம தொழிந்து தெளியேனே
மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபத மணிந்து பணியேனே

ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று தெரியேனே
ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்ட
தாடுமயி லென்ப தறியேனே

நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானில மலைந்து திரிவேனே
நாகமணி கின்ற நாதநிலைகண்டு
நாடியதில் நின்று தொழுகேனே

சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து எனையாள்வாய்
சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற பெருமாளே

109

சீர்சி றக்கு மேனி பசேல் பசேலென
நூபு ரத்தி னோசை கலீர் கலீரென
சேர விட்ட தாள்கள் சிவேல் சிவேலென வருமானார்

சேக ரத்தின் வாலை சிலோர் சிலோர்களும்
நூறு லக்ஷ கோடி மயால் மயால்கொடு
தேடி யொக்க வாடி யையோ வையோவென
மடமாதர்

மார்ப டைத்த கோடு பளீர் பளீரென
ஏம லித்தெ னுவி பகீர் பகீரென
மாம சக்கி லாசை யுளோ முளோமென நினைவோடி

வாடை பற்று வேளை அடா அடாஎன
நீம யக்க மேது சொலாய் சொலாயென
வாரம் வைத்த பாத மிதோ இதோ என
அருள்வாயே

பார தத்தை மேரு வெளீ வெளீதிகழ்
கோடொ டித்த நாளில் வரைஇ வரைஇபவர்
பானி றக்க ணேசர் குவா குவாகனர் இளையோனே

பாடன் முக்ய மாது தமீழ் தமீழிறை
மாமு நிக்கு காதி லுணர் வுணர்விடு
பாச மற்ற வேத குரு குருபர குமரேசா

போர்மி குத்த சூரன் விடோம் விடோமென
நேரெ திர்க்க வேலை படீர் படீரென
போய றுத்த போது குபீர் குபீரென வெகுசோரி

பூமி யுக்க வீசு குகா குகாதிகழ்
சோலை வேற்பின் மேவு தெய்வா தெய்வானைதோள்
பூணி யிச்சை யாறு புயா புயாறுள பெருமாளே.

110

ஆசை நாலுசது ரக்கமல முற்றிஞெளி
வீசி யோடியிரு பக்கமோடு றச்செல்வளி
ஆவல் கூரமண்மு தற்சலச போற்சபையு
மிந்துவாகை
ஆர மூணுபதி யிற்கோளநி றுத்திவேளி
யாரு சோதி நுறு பத்தினுட னெட்டுஇத
ழாகி யேழுமள விட்டருண விற்பதியின் விந்துநாத
ஓசை சாலுமொரு சத்தமதி கப்படிக
மோடு கூடியொரு மித்தமுத சித்தியோடு
மோது வேதசர சத்தியடி யுற்றதிரு நந்தியூடே
ஊமை யேனையொளிர் வித்துனது முத்திபெற
மூல வாசல்வெளி விட்டுனது ரத்திலொளிர்
யோக பேதவகை யெட்டுமிதி லோட்டும் வகை
யின்றுதாராய்
வாசி வாணிகனெ னக்குதிரை விற்றுமகிழ்
வாத வூரனடி மைக்கோள்கிரு பைக்கடவுள்
மாழை ரூபன்முக மத்திகைவி தத்தருண
செங்கையாளி
வாகு பாதியுறை சத்திகவு ரிக்குதலை
வாயின் மாதுதுகிர் பச்சைவடி விச்சிவையேன்
மாசு சேரேழுபி றப்பையும றுத்தவுமை
தந்தவாழ்வே
காசி ராமேசுரம் ரத்நகிரி சர்ப்பகிரி
ஆருர் வேலுர்தேவுர் கச்சிமது ரைப்பறியல்
காவைமூதுரருணக்கிரிதிருத்தணியல் செந்தில்நாகை
காழி வேளுர்பழ நிக்கிரிகு றுக்கைதிரு
நாவ லூர்திருவே ணெய்ப்பதியின் மிக்கதிகழ்
காதல் சோலைவளர் வேற்பிலுறை முத்தர்புகழ்
தம்பிரானே.

111

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனெனவாகி
அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளுமாகி யினிமையுமாகி வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி
வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களிகூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம
முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலி வான **பழமுதிர் சோலை** மலைமிசை மேவு
பெருமாளே.

ஆறு திருப்பதி

112

ஈனமிகுத் துளபிறவி யணுகாதே
யானுமுனக் கடிமையென வகையாக
ஞானஅருட் டனையருளி வினைதீர
நாணமகற் றியகருணை புரிவாயே
தானதவத் தினின்மிகுதி பெறுவோனே
சாரதியுத் தமிதுணைவ முருகோனே
ஆனதிருப் பதிகமரு ளிளையோனே
ஆறுதிருப் பதியில்வளர் பெருமாளே.

பஞ்சபூத ஸ்தலங்கள்

1. காஞ்சிபுரம் (பிருதிவி)

113

சலமலம் விட்டத் தடம்பெ ருங்குடில்
சகலவி னைக்கோத் திருந்தி டும்படி
சதிர வுறுப்புச் சமைந்து வந்தொரு தந்தைதாயும்

தரவரு போய்க்குட் கிடந்த கந்தலி
லுறையு முயிர்ப்பைச் சமன்து ரங்தோரு
தனியி லிழுக்கப் படுந்த ரங்கமும் வந்திடாமுன்
பலவுரு வத்தைப் போருந்தி யன்றுயர்
படியு நேளிக்கப் படர்ந்த வன்கண
படமயில்புக்குத் துரந்துகோண்டிகல் வேன்றிவேலா
பரிமள மிக்கச் சிவந்த நின்கழல்
பழுதற நற்சோற் றேரிந்து அன்போடு
பகர்வ தினிச்சற் றுகந்து தந்திட வந்திடாயோ
சிலேயு மேனப்போற் சிலம்பை முன்கோடு
சிவமய மற்றுத் திடங்கு லேந்தவர்
திரிபுர மத்தைச் சுடுந்தி னந்தரி திண்கையாளி
திருமகள் கச்சுப் போருந்தி டுந்தன
தேரிவை யிரக்கத் துடன்பி றந்தவள்
திசைகளிலோக்கப்படர்ந்திடம்போரு கின்றஞானக்
கலேகள ணேக்கோத் தடர்ந்து வம்பலர்
நதிகோள கத்திற் பயந்து கம்பர்மேய்
கருக இடத்திற் கலந்தி ருந்தவள் கஞ்சபாதங்
கருணே மிகுத்துக் கசிந்து ளங்கோடு
கருது மவர்க்குப் பதங்கள் தந்தருள்
கவுரி திருக் கோட் டமர்ந்த இந்திரர் தம்பிரானே.

114

அறிவிலாப் பித்த ருன்ற னடிதோழாக் கேட்ட வஞ்சர்
அசடர்பேய்க் கத்தர் நன்றி யறியாத
அவலர்மேற் சோற்கள் கோண்டு கவிகளாக்கிப் புகழ்ந்து
அவரைவாழ்த் தித்தி ரிந்து போருள்தேடிச்
சிறிதுகூட் டிக்கோ ணர்ந்து தேருவுலாத் தித்தி ரிந்து
தேரிவைமார்க் குச்சோ ரிந்து அவமேயான்
திரியுமார்க் கத்து நிந்தை யதனேமாற் றிப்ப ரிந்து
தேளியமோ க்ஷத்தை யேன்று அருள்வாயே

இறைவர்மாற் றற்றசெம்போன் வடிவம்வேற் றுப்பிரிந்து
இடபமேற் கச்சி வந்த உமையாள்தன்
இருளைநீக் கத்த வஞ்செய் தருளநோக் கிக்கு ழைந்த
இறைவர்கேட் கத்த குஞ்சொ லுடையோனே
குறவர்கூட் டத்தில் வந்து கிழவனுய்ப் புக்கு நின்று
தருவியோட் டித்தி ரிந்த தவமானைக்
குணமதாக் கிச்சி றந்த வடிவுகாட் டிப்பு ணர்ந்த
குமரகோட் டத்த மர்ந்த பெருமாளே

115

கனகதம் பத்தைச் சேச்சையை மேச்சுங்
கடகசங் கத்துப் போற்புய வேற்பன்
கடலுள்வஞ் சித்துப் புக்கதோர் கோக்கும்
போடியாகக்
கறுவுசெஞ் சத்திப் பத்மக ரத்தன்
குமரனேன் றர்ச்சித் தப்படி செப்புங்
கவிமொழிந் தத்தைக் கற்றற வுற்றும்
புவியோர்போய்
குனகியுங் கைக்குக் கற்பக மோப்பேன்
றனகனேன் றிச்சைப் பட்டத ளிக்குங்
குமுணனேன் ஞேப்பிட் டித்தனை பட்டிங் கிரவான
குருடுகோண் டத்தச் சத்தம னைத்துந்
திருடியுஞ் சோற்குத் தக்கதோ டுத்துங்
குலவியுங் கத்தப் பட்டக லக்கந் தெளியாதோ
சனகனன் புற்றுப் பெற்றம டப்பெண்
தனிபெருங் கற்புச் சக்ரந டத்துந்
தகையிலங்கைச்சுற்றத்தைமுழுத்துஞ் சுடவேவேஞ்
சமரசண் டக்கோற் றத்தவ ரக்கன்
கதிர்விடும் பத்துக் கோத்துமு டிக்குந்
தனியோரம் பைத்தோட் டுச்சுரர் விக்னங்
களைவோனும்

தினகரன் சோர்க்கத் துக்கிறை சுக்ரன்
சசிதரன் திக்குக் கத்தர கத்யன்
திசைமுகன் செப்பப் பட்டவ சிட்டன் திரள்வேதஞ்

சேகதலஞ் சுத்தப் பத்தியர் சித்தம்
செயலொழிந் தற்றுப் பெற்றவர் மற்றும்
சிவனும்வந் திக்கக் கச்சியில் நிற்கும் பெருமாளே.

2. திருவானைக்கா (அப்பு)

116

அனித்த மான வூனுளு மிருப்ப தாக வேநாசி
யடைத்து வாயு வோடாத வகைசாதித்
தவத்தி லேகு வால்மூலி புசித்து வாடு மாயாச
அசட்டு யோகி யாகாமல் மலமாயை

சேனித்த காரி யோபாதி யொழித்து ஞான ஆசார
சிரத்தை யாகி யான்வேறெ னுடல்வேறு
சேகத்தி யாவும் வேறாக நிகழ்ச்சி யாம னோதீத
சிவச்சொ ரூப மாயோகி யெனஆள்வாய்

தொனித்த நாத வேயூது சகஸ்ர நாம கோபால
சுதற்கு நேச மாருத மருகோனே
சுவர்க்க லோக மீகாம சமஸ்த லோக பூபால
தொடுத்த நீப வேல்வீர வயலூரா

மனித்த ராதி சோணாடு தழைக்க மேவு காவேரி
மகப்ர வாக பானீய மலைமோதும்
மணத்த சோலை சூழ்காவை அனைத்து லோக மாள்வாரு
மதித்த சாமி யேதேவர் பெருமாளே.

117

ஓல மறைக ளறைகின்ற வொன்றது
மேலை வெளியி லொளிரும் பரஞ்சுடர்
ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவ ரேவராலும்

ஓதவரிய துரியங் கடந்தது
போத அருவ சுருபம் ப்ரபஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங் கலந்தது சிவஞானம்

சால வுடைய தவர்கண்டு கொண்டது
மூல நிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமு மிலதன்றி யன்பர்சோ னவியோமஞ்

சாரு மநுப வரமைந்த மைந்தமெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனே

வால குமர குககந்த குன்றெறி
வேல மயில எனவந்து கும்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர் களைவோனே

வாச களப வரதுங்க மங்கல
வீர கடக புயசிங்க சுந்தர
வாகை புனையும் ரணரங்க புங்கவ வயலூரா

ஞால முதல்வி யிமயம் பயந்தமின்
நீலி கவுரி பரைமங்கை குண்டலி
நாளு மினிய கனியெங்க ளம்பிகை த்ரிபுராயி

நாத வடிவி யகிலம் பரந்தவ
ளாலி னுதர முளைபைங் கரும்புவே
ளுவ லரசு மனைவஞ்சி தந்தருள் பெருமாளே.

118

குருதிபு லாலென்பு தோன ரம்புகள்
கிருமிகள் மாலம்பி சீத மண்டிய
குடர்நிணம் ரோமங்கள் மூளை என்பன போதிகாயக்

குடிலிடை யோரைந்து வேட ரைம்புல
அடவியி லோடுந்து ராசை வஞ்சகர்
கோடியவர் மாபஞ்ச பாத கஞ்செய அதனாலே

சுருதிபு ராணங்க ளாக மம்பகர்
சரியைக்ரி யாவண்டர் பூசை வந்தனே
துதியோடு நாடுந்தி யான மொன்றையு முயலாதே
சுமடம தாய்வம்பு மால்கோ ளுந்திய
திமிரரோ டேபந்த மாய்வ ருந்திய
துரிசற ஆநந்த வீடு கண்டிட அருள்வாயே
ஒருதனி வேல்கொண்டு நீள்க்ர வுஞ்சமும்
நிருதரு மாவுங்க லோல சிந்துவும்
உடைபட மோதுங்கு மார பங்கய கரவீரா
உயர்தவர் மாவும்ப ரான அண்டர்கள்
அடிதொழு தேமன்ப ராவு தொண்டர்கள்
உளமதில் நாளுங்கு லாவி யின்புற வுறைவோனே
கருதிய ஆறங்க வேள்வி யந்தணர்
அரிகரி கோவிந்த கேச வென்றிரு
கழல்தொழு சீரங்க ராச னண்புறு மருகோனே
கமலனு மாகண்ட லாதி யண்டரு
மெமது பிரானென்று தாள்வ ணங்கிய
கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்தருள் பெருமாளே.

3. திருவருணை (தேயு)

119

இருவினை யஞ்ச மலவகை மங்க
இருள்பிணி மங்க மயிலேறி
இனவரு ளன்பு மொழிய கடம்பு
வினதக முங்கொ டளிபாடக்
கரிமுக னெம்பி முருகனெ னண்டர்
களிமலர் சிந்த அடியேன்முன்
கருணை பொழிந்து முகமு மலர்ந்து
கடுகி நடங்கொ டருள்வாயே

திரிபுர மங்க மதனுடல் மங்க
திகழ்நகை கொண்ட விடையேறிச்
சிவம்வெளி யங்க ணருள்குடி கொண்டு
திகழ நடஞ்செய் தெமையீண
அரசி யிடங்கொள் மழுவுடை யெந்தை
அமலன் மகிழ்ந்த குருநாதா
அருணை விலங்கல் மகிழ்குற மங்கை
அமளி நலங்கொள் பெருமாளே.

120

கேதகைய பூமுடித்த மாதர்தம யாலிலுற்று
கேவலம தான அற்ப நினைவாலே
கேள்வியதி லாதிருக்கு மூழ்வினையி னுல்மிகுத்த
கேடுறுக வேநினைக்கும் வினையாலே
வேதனையி லேமிகுத்த பாதகனு மாயவத்தில்
மேதினியெ லாமுழற்று மடியேனை
வீடுதவி யாளவெற்றி வேல்கரம தேயெடுத்து
வீறுமயில் மீதிலுற்று வருவாயே
நீதிநெறி யேயழித்த தாருகனை வேரறுத்து
நீடுபுகழ் தேவரிற்கள் குடியேற
நீடருளி னுல்விடுத்த பாலகும ராசெழித்த
நீலநிற மால்தனக்கு மருகோனே
சோதியன லாவுதித்த சோணகிரி மாமலைக்குள்
சோபைவட கோபுரத்தி லுறைவோனே
சோனைமழை போலெதிர்த்த தானவர்கள் மாளவெற்றி
தோளின்மிசை வாளெடுத்த பெருமாளே.

121

கோடுசெறி மத்த கத்தை வீசுபலை தத்த வொத்தி
கூறுசெய்த ழித்து ரித்து நடைமாணர்

கோளுலவு முப்பு ரத்தை வாளெரிகோ ளுத்தி விட்ட
கோபநுத லத்த ரத்தர் குருநாதா

நீடுகன கத்த லத்தை யூடுருவி மற்ற வெற்பு
நீறெழுமி தித்த நித்த மனதாலே
நீபமலர் பத்தி மெத்த வோதுமவர் சித்த மெத்த
நீலமயில் தத்த விட்டு வரவேணும்

ஆடலணி பொற்சி லைக்கை வேடுவர்பு னக்கு றத்தி
ஆரமது மெத்து சித்ர முலைமீதே
ஆதரவு பற்றி மெத்த மாமணிநி றைத்த வெற்றி
ஆறிருதி ருப்பு யத்தில் அணைவீரா

தேடிமையோர் புத்தி மெத்தி நீடுறநி னைத்த பத்தி
சீருறவு ளத்தெ ரித்த சிவவேளே
தேறருணை யிற்ற ரித்த சேண்முகடி டத்த டர்த்த
தேவர்சிறை வெட்டி விட்ட பெருமாளே

122

தமர குரங்களுங் காரி ருட்பிழம்பு
மெழுகிய அங்கமும் பார்வை யிற்கொ ளுந்து
தழலுமிழ் கண்களுங் காள மொத்த கொம்பும்
உளகதக் கடமாமேல்

தனிவரு மந்தகன் பாசம் விட்டெறிந்து
அடவரு மென்றுசிந் தாகு லத்தி ருந்து
தமரழ மைந்தருஞ் சோக முற்றி ரங்க
மரணபக் குவமாநாள்

கமல முகங்களுங் கோம ளத்தி லங்கு
நகையு நெடுங்கணுங் காதி னிற்று லங்கு
கனக குதம்பையுந் தோடும் வஜ்ர அங்க
தமுமடற் சுடர்வேலுங்

கடிதுல கெங்கணுங் தாடி யிட்டு வந்த
மயிலுமி லங்கலங் கார பொற்ச தங்கை
கழலொலி தண்டையங் காலு மொக்க வந்து
வரமெனக் கருள்கூர்வாய்

இமகிரி வந்தபொன் பாவை பச்சை வஞ்சி
அகில தலம்பெறும் பூவை சத்தி யம்பை
யிளமுலை யின்செழும் பால்கு டித்தி லங்கு
மியல்நிமிர்த் திடுவோனே

இறைவ ரிறைஞ்சநின் ருக மப்ர சங்க
முரைசெய் திடும்ப்ரசண் டாவி சித்து நின்ற
ரணமுக துங்கவெஞ் சூரு டற்பி ளந்த
அயிலுடைக் கதிர்வேலா

அமண ரடங்கலுங் கூட லிற்றி ரண்டு
கழுவி லுதைந்துதைந் தேற விட்டு நின்ற
அபிநவ துங்ககங் காந திக்கு மைந்த
அடியவர்க் கெளியோனே

அமரர் வணங்குகந் தாகு றத்தி கொங்கை
தனில்முழு குங்கடம் பாமி குத்த செஞ்சொ
லருணை நெடுந்தடங் கோபு ரத்த மர்ந்த
அறுமுகப் பெருமாளே.

123

முழுகிவட வாமு கத்தி னெழுகனலி லேபி றக்கு
முழுமதிநி லாவி னுக்கும் வசையாலும்
மொழியுமட மாத ருக்கு மினியதனி வேயி சைக்கு
முதியமத ராஜ னுக்கு மழியாதே

புழுகுதிகழ் நீப மத்தி லழகியகு ராநி ரைத்த
புதுமையினி லாறி ரட்டி புயமீதே
புணரும்வகை தானி னைத்த துணரும்வகை நீல சித்ர
பொருமயிலி லேறி நித்தம் வரவேணும்

எழுமகர வாவி சுற்று பொழி லருணை மாந கர்க்கு
ளெழுதரிய கோபு ரத்தி லுறைவோனே
இடைதுவள வேடு வச்சி படமசைய வேக னத்த
இளமுலைவி டாத சித்ர மணிமார்பா
செழுமகுட நாக மொய்த்த ஒழுகுபுனல் வேணி வைத்த
சிவனைமுத லோது வித்த குருநாதா
திசைமுகன்மு ராரி மற்று மரியபல தேவ ருற்ற
சிறையடைய மீள விட்ட பெருமாளே.

124

கருணை சிறிதுமில் பறிதலை நிசிசரர்
பிசித அசனம றவரிவர் முதலிய
கலக விபரித வெகுபர சமயிகள் பலர்கூடிக்
கலக லெனநெறி கெடமுறை முறைமுறை
கதறி வதறிய குதறிய கலைகொடு
கருத அரியதை விழிபுனல் வரபொழி குழருவன்
புருகி யுனதருள் பரவுகை வரில்விர
கொழியி லுலகியல் பிணைவிடி லுரைசெய
லுணர்வு கெடிலுயிர் புணரிரு வினையள றதுபோக
உதறி லெனதெனு மலமறி லறிவினி
லெளிது பெறலென மறைபறை யறைவதொ
ருதய மரணமில் பொருளினை யருளுவ தொருநாளே
தருண சததள பரிமள பரிபுர
சரணி தமனிய தநுதரி திரிபுர
தகனி கவுரிப வதிபக வதிபயி ரவிசூலி
சடில தரியநு பவையுமை திரிபுரை
சகல புவனமு முதவிய பதிவ்ருதை
சமய முதல்வித னயபகி ரதிசுத சதகோடி
அருண ரவியினு மழகிய ப்ரபைவிடு
கருணை வருணித தனுபர குருபர
அருணை நகருறை சரவண குரவணி புயவேளே

அடவி சரர்குல மரகத வனிதையு
மமரர் குமரியு மனவர தமுமரு
கழகு பெறநிலை பெறவர மருளிய பெருமாளே.

125

இருவர் மயலோ அமளி விதமோ
எனென செயலோ அணுகாத
இருடி அயன்மா லமர ரடியா
ரிரையு மொலிதான் இவைகேளா
தொருவ னடியே னலறு மொழிதா
னொருவர் பரிவாய் மொழிவாரோ
உனது பததூள் புவன கிரிதா
னுனது கிருபா கரமேதோ
பரம குருவா யணுவி லசைவாய்
பவன முதலா கியபூதப்
படையு முடையாய் சகல வடிவாய்
பழைய வடிவா கியவேலா
அரியு மயனோ டபய மெனவே
அயிலை யிருள்மேல் விடுவோனே
அடிமை கொடுநோய் பொடிகள் படவே
அருண கிரிவாழ் பெருமாளே.

126

குமர குருபர குணதர நிசிசர
திமிர தினகர சரவண பவகிரி
குமரி சுதபகி ரதிசுத சுரபதி குலமானுங்
குறவர் சிறுமியு மருவிய திரள்புய
முருக சரணென வுருகுதல் சிறிதுமில்
கொடிய வினையனை யவலனை யசடனை யதிமோகக்

கமரில் விழவிடு மழகுடை யரிவையர்
களவி ஞெடுபொரு ளளவள வருளிய
கலவி யளறிடை துவளுறும் வெளிறனே யினிதாளக்
கருணை யடியரொ டருணையி லொருவிசை
சுருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே

தமர மிகுதிரை யெறிவளை கடல் குடல்
மறுகி யலைபட விடநதி யுமிழ்வன
சமுக முககண பணபணி பதிநெடு வடமாகச்
சகல வுலகமு நிலைபெற நிறுவிய
கனக கிரிதிரி தரவெகு கரமலர்
தளர வினியதொ ரமுதினை யொருதனி கடையாநின்

றமரர் பசிகெட வுதவிய க்ருபைமுகில்
அகில புவனமு மளவிடு குறியவன்
அளவு நெடியவ னளவிட அரியவன் மருகோனே
அரவு புனைதரு புநிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவையறிவது பொருளென அருளிய
பெருமாளே.

4. திருக்காளத்தி (வாயு)

127

சிரத்தா னத்திற் பணியாதே
செகத்தோர் பற்றைக் குறியாதே
வருத்தா மற்றொப் பிலதான
மலர்த்தாள் வைத்தெத் தனையாள்வாய்
நிருத்தா கர்த்தத் துவநேசா
நினைத்தார் சித்தத் துறைவோனே
திருத்தாள் முத்தர்க் கருள்வோனே
திருக்கா ளத்திப் பெருமாளே.

128

பங்கய ஞர்பெற் றிடுஞ்ச ராசர
அண்டம தாயுற் றிருந்த பார்மிசை
பஞ்சவர் கூடித் திரண்ட தோர்நர உருவாயே
பந்தம தாகப் பிணிந்த ஆசையில்
இங்கித மாகத் திரிந்து மாதர்கள்
பண்பொழி சூதைக் கடந்தி டாதுழல் படிறுயே
சங்கட ஞகித் தளர்ந்து நோய்வினை
வந்துடல் மூடக் கலங்கி டாமதி
தந்தடி யேனைப் புரந்தி டாயுன தருளாலே
சங்கரர் வாமத் திருந்த நூபுர
சுந்தரி யாதித் தருஞ்சு தாபத
தண்டைய னேகுக் குடம்பதாகையின் முருகோனே
திங்களு லாவப் பணிந்த வேணியர்
பொங்கர வாடப் புனைந்த மார்பினர்
திண்சிலை சூலத் தழுந்து பாணியர் நெடிதாழ்வார்
சிந்துவி லேயுற் றெழுந்த காளவி
டங்கள மீதிற் சிறந்த சோதியர்
திண்புய மீதிற் றவழ்ந்து வீறிய குருநாதா
சிங்கம தாகத் திரிந்த மால்கெரு
வம்பொடி யாகப் பறந்து சீறிய
சிம்புள தாகச் சிறந்த காவென வருகோமுன்
செங்கதி ரோனைக் கடிந்த தீவினை
துஞ்சிட வேநற் றவஞ்செய் தேறிய
தேன்கயி லாயத் தமர்ந்து வாழ்வருள் பெருமாளே.

5. சிதம்பரம் (ஆகாயம்)

129

சுடரனைய திருமேனி யுடையழகு முதுஞான
சொருபகிரி யிடமேவு முகமாறும்

சுரர்தெரிய லளிபாட மழலைகதி நறைபாய
துகிரிதழின் மொழிவேத மணம்வீச

அடர்பவள வொளிபாய அரியபரி புரமாட
அயில்கரமோ டெழில்தோகை மயிலேறி

அடியனிரு வினைநீறு பட அமர ரிதுபூரை
அதிசயமெ னருள்பாட வரவேணும்

விடைபரவி அயன்மாலோ டமரர்முனி கணமோட
மிடறடைய விடம்வாரி யருள்நாதன்

மினலனைய இடைமாது இடமருவு குருநாதன்
மிகமகிழ அநுபூதி யருள்வோனே

இடர்கலிகள் பிணியோட எனையுமருள் குறமாதி
னிணையிளநிர் முலைமார்பி னணைமார்பா

இனியமுது புலிபாத னுட னரவு சதகோடி
யிருடியர்கள் புகழ்ஞான பெருமாளே.

130

அவகுண விரகனை வேதாள ரூபனை
அசடனை மசடனை ஆசார ஈனனை
அகதியை மறவனை ஆதாளி வாயனை அஞ்சுபூதம்

அடைசிய சவடனை மோடாதி மோடனை
அழிகரு வழிவரு வீணாதி வீணனை
அழுகலை யவிசலை ஆருன வூணனை அன்பிலாத

கவடனை விகடனை நாணு விகாரனை
வெகுளியை வெகுவித மூதேவி மூடிய
கலியனை அலியனை ஆதேச வாழ்வனை வெம்பிவீழுங்

களியனை யறிவுரை பேணாத மாநுட
கசனியை யசனியை மாபாத னாகிய
கதியிலி தனையடி நாயேனை யாளுவ தெந்தநாளோ

மவுலியி லழகிய பாதாள லோகனு
மரகத முழுகிய காகோத ராஜனு
மநுநெறி யுடன்வளர் சோணாடர் கோனுட
னும்பர்சேரும்
மகபதி புகழ்புலி யூர்வாழு நாயகர்
மடமயில் மகிழ்வுற வாணாடர் கோவென
மலைமக ளுமைதரு வாழ்வே மனோகர மன்றுளாடும்
சிவசிவ ஹரஹர தேவா நமோநம
தெரிசன பரகதி யானாய் நமோநம
திசையினு மிசையினும் வாழ்வே நமோநம
செஞ்சொல்சேருந்
திருதரு கலவி மணாளா நமோநம
திரிபுர மெரிசெய்த கோவே நமோநம
ஜெயஜெய ஹரஹர தேவா சுராதிபர் தம்பிரானே.

131

எழுகடல்மணலை அளவிடி னதிக
மெனதிடர் பிறவி அவதாரம்
இனியுன தபய மெனதுயி ருடலு
மினியுடல் விடுக முடியாது
கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவு மயர்வானார்
கடனுன தபய மடிமையு னடிமை
கடுகியு னடிகள் தருவாயே
விழுதிக ழழகி மரகத வடிவி
விமலிமு னருளு முருகோனே
விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் வருவோனே
எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை யுடையோனே
இமையவர் முநிவர் பரவிய புலியு
ரினில்நட மருவு பெருமாளே.

132

காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொ றுத்துங்
காசினி முற்றுந் திரியாதே
சீவ னொடுக்கம் பூத வொடுக்கந்
தேற வுதிக்கும் பரஞான
தீப விளக்கங் காண எனக்குன்
சீதள பத்மந் தருவாயே
பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட வுக்ரந் தருவீரா
பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சுங் கதிர்வேலா
தூவிகள் நிற்குஞ் சாலி வளைக்குஞ்
சோலை சிறக்கும் புலியூரா
சூரர் மிகக்கோண் டாட நடிக்குந்
தோகை நடத்தும் பெருமாளே.

133

குகனே குருபர னேயென நெஞ்சிற்
புகழ அருள்கொடு நாவினி லின்பக்
குமுளி சிவவமு தூறுக வுந்திப் பசியாறிக்
கொடிய இருவினை மூலமும் வஞ்சக்
கலிகள் பிணியிவை வேரொடு சிந்திக்
குலைய நமசிவ யோமென கொஞ்சிக் களிகூரப்
பகலு மிரவுமி லாவெளி யின்புக்
குறுகி யிணையிலி நாடக செம்பொற்
பரம கதியிது வாமென சிந்தித் தழகாகப்

பவள மனதிரு மேனியு டன்போற்
சரண அடியவ ரார்மன வம்போற்
றருண சரண்மயி லேறியு னம்போற் கழல்தாராய்

தகுட தகுதகு தாதக தந்தத்
திகுட திகுதிகு தீதக தோந்தத்
தடுடு டுடுடுடு டாடக டிங்குட் டியல்தாளம்

தபலை திமிலைகள் பூரிகை பம்பைக்
கரடி தமருகம் வீணைகள் பொங்கத்
தடிய முனவுக மாருத சண்டச் சமரேறிக்

ககன மறைபட ஆடிய செம்புட்
பசிகள் தணிவுற சூரர்கள் மங்கக்
கடல்க ளேறிபட நாகமு மஞ்சத் தோடும்வேலா

கயிலை மலைதனி லாடிய தந்தைக்
குருக மனமுன நாடியே கொஞ்சிக்
கனக சபைதனில் மேவிய கந்தப் பெருமாளே.

134

கட்டி முண்டகர பாலி யங்கிதனை
முட்டி யண்டமொடு தாவி விந்துவொலி
கத்த மந்திரவ தான வெண்புரவி மிசையேறிக்

கற்ப கந்தெருவில் வீதி கொண்டுசுடர்
பட்டி மண்டபமு டாடி யிந்துவொடு
கட்டி விந்துபிசகாமல் வெண்பொடிகோ டசையாமல்

சுட்டு வெம்புரநி ருக விஞ்சைகொடு
தத்து வங்கள்விழ சாடி யெண்குணவர்
சொர்க்கம் வந்துகையு ளாக எந்தைபத முறமேவித்

துக்கம் வெந்துவிழ ஞான முண்டுகுடில்
வச்சி ரங்களென மேனி தங்கமுற
சுத்த கம்புகுத வேத விந்தையொடு புகழ்வேனோ

எட்டி ரண்டுமறி யாத என்செவியி
லெட்டி ரண்டுமிது வாமி லிங்கமென
எட்டி ரண்டும்வெளி யாமோ ழிந்தகுரு முருகோனே
எட்டி ரண்டுதிசை யோட செங்குருதி
யெட்டி ரண்டுமுரு வாகி வஞ்சகர்மே
லெட்டி ரண்டுதிசை யோர்கள் போன்றஅயில்
விடுவோனே
செட்டி யெனறுசிவ காமி தன்பதியில்
கட்டு செங்கைவளே கூறு மெந்தையிட
சித்த முங்குளிர நாதி வண்பொருளே நவில்வோனே
செட்டி யென்றுவன மேவி யின்பரச
சத்தி யின்செயலி னுளே யன்புருக
தெட்டி வந்துபுலி யூரின் மன்றுள்வளர் பெருமாளே.

135

வந்து வந்துவித் தூறி யென்றனுடல்
வெந்து வெந்துவிட் டோட நொந்துயிரும்
வஞ்சி னங்களிற் காடு கொண்டவடி வங்களாலே
மங்கி மங்கிவிட் டேனே யுன்றனது
சிந்தை சந்தோஷித் தாளு கொண்டருள
வந்து சிந்துரத் தேறி யண்டரோடு தொண்டர்சூழ
எந்தன் வஞ்சனைக் காடு சிந்திவிழ
சந்த ரண்டிசைத் தேவ ரம்பையர்க
ளிந்து பந்தடித் தாடல் கொண்டுவர மந்திமேவும்
எண்க டப்பணித் தோளு மம்பொன்முடி
சுந்த ரந்திருப் பாத பங்கயமும்
என்றன்முந்துறத்தோணியுன்றனது சிந்தைதாராய்
அந்த ரந்திகைத் தோட விஞ்சையர்கள்
சிந்தை மந்திரத் தோட கெந்தருவ
ரம்புயன்சலித்தோடஎண்டிசையையுண்டமாயோன்

அஞ்சி யுன்பதச் சேவை தந்திடேன
வந்த வெஞ்சினர்க் காடேரிந்துவிழ
அங்கி யின் குணக் கோலை யுந்திவிடு சேங்கைவேலா

சிந்து ரம்பணைக் கோடு கோங்கைகுற
மங்கை யின்புறத் தோள ணைந்துருக
சிந்து ரந்தனைச் சீர்ம ணம்புணர்நல் கந்தவேளே

சிந்தி முன்புரக் காடு மங்கநகை
கொண்ட செந்தழற் கோல ரண்டர்புகழ்
செம்போ னம்பலத் தாடு மம்பலவர் தம்பிரானே.

136

மச்சமேச்சு சூத்ரம் ரத்தபித்த மூத்ரம்
வைச்சிறைச்ச பாத்ர மநுபோகம்
மட்கவிட்ட சேக்கை உட்புழுத்த வாழ்க்கை
மட்குலப்ப தார்த்த மிடிபாறை
எய்ச்சிளைச்ச பேய்க்கு மெய்ச்சிளைச்ச நாய்க்கு
மெய்ச்சிளைச்ச ஈக்கு மிரையாகும்
இக்கடத்தை நீக்கி அக்கடத்து ளாக்கி
இப்படிக்கு மோக்ஷ மருள்வாயே
போய்ச்சினத்தை மாற்றி மெய்ச்சினத்தை யேற்றி
போற்பதத்து ளாக்கு **புலியூரா**
போக்கணத்து நீற்றை யிட்டோருத்த னுர்க்கு
புத்திமெத்த காட்டு புனவேடன்
பச்சிலைக்கும் வாய்க்கு ளேச்சிலுக்கும் வீக்கு
பைச்சிலைக்கு மாட்கோ ளரன்வாழ்வே
பத்திசித்தி காட்டி அத்தர்சித்த மீட்ட
பத்தருக்கு வாய்த்த பெருமாளே.

137

நாலுசது ரத்த பஞ்சறை மூலகம லத்தி லங்கியை
நாடியின டத்தி மந்திர பந்தியாலே

நாரண புரத்தி லிந்துவி னூடுற இணக்கி நன்சுடர்
நாறிசை நடத்தி மண்டல சந்தியாறிற்
கோலமு முதிப்ப கண்டுள நாலிணை மறித்தி தம்பெறு
கோவென முழக்கு சங்கொலி விந்துநாதங்
கூடிய முகப்பி லிந்திர வானவமு தத்தை யுண்டோரு
கோடி நடனப்ப தஞ்சபை யென்றுசேர்வேன்
ஆலமல ருற்ற சம்பவி வேரிலி குலக்கோ முந்திலி
ஆரணர் தலைக்க லங்கோளி சேம்பொன்வாசி
ஆணவ மயக்க முங்கலி காமிய மகற்றி யென்றனை
ஆளுமை பரத்தி சுந்தரி தந்தசேயே
வேலதை யெடுத்து மிந்திரர் மால்விதி பிழைக்க வஞ்சகர்
வீடேரி கொளுத்தி யெண்கட லுண்டவேலா
வேதசது ரத்தர் தென்புலி யூருறை யொருத்தி பங்கினர்
வீறுநட னர்க்கி சைந்தருள் தம்பிரானே.

காசி

138

வேழ முண்ட விளாகனி யதுபோல
மேனி கொண்டு வியாபக மயலூறி
நாளு மிண்டர்கள் போல்மிக அயர்வாகி
நானு நைந்து விடாதருள் புரிவாயே
மாள அன்றம ணீசர்கள் கழுவேற
வாதில் வென்ற சிகாமணி மயில்வீரா
காள கண்ட னுமாபதி தருபாலா
காசி கங்கையில் மேவிய பெருமாளே.

அவிநாசி

139

மனத்தி ரைந்தெழு மீளையு மேலிட
கறுத்த குஞ்சியு மேநரை யாயிட
மலர்க்க ணண்டிரு ளாகியு மேநடை தடுமாறி

வருத்த முந்தர தாய்மனை யாள்மக
வெறுத்தி டங்கிளை யோருடன் யாவரும்
வசைக்கு றுஞ்சொலி னால்மிக வேதின நகையாட

எனைக்க டந்திடு பாசமு மேகொடு
சினத்து வந்தெதிர் சூலமு மேகையி
லெடுத்தெ றிந்தழல் வாய்விட வேபய முறவேதான்

இழுக்க வந்திடு தூதர்க ளானவர்
பிடிக்கு முன்புன தாள்மல ராகிய
இணைப்ப தந்தர வேமயில் மீதினில் வரவேணும்

கனத்த செந்தமி ழால்நினை யேதின
நினைக்க வுந்தரு வாயுன தாரருள்
கருத்தி ருந்துறை வாயென தாருயிர் துணையாகக்

கடற்ச லந்தனி லேயொளி சூரனை
யுடற்ப குந்திரு கூறென வேயது
குதித்தெ ழுந்தொரு சேவலு மாமயில் விடும்வேலா

அனத்த னுங்கம லாலய மீதுறை
திருக்க லந்திடு மாலடி நேடிய
அரற்க ரும்பொருள் தானுரை கூறிய குமரேசா

அறத்தை யுந்தரு வோர்கன பூசுரர்
நினைத்தி னந்தொழு வாரம ராய்புரி
யருட்செ றிந்தவி நாசியுள் மேவிய பெருமாளே.

திருமயிலை

140

கடியவேக மாருத விரதசூத ராபாதர்
கலகமேசெய் பாழ்மூடர் வினைவேடர்

கபடவீன ராகாத இயல்புநாடி யேநீடு
கனவிகார மேபேசி நெறிபேணுக்

கோடியனேது மோராது விரகசால மேமூடு
குடிலின்மேவி யோநாளு மடியாதே
குலவுதோகை மீதாறு முகமும்வேலு மீராறு
குவளைவாகும் நேர்காண வருவாயே
படியினோடு மாமேரு அதிரவீசி யேசேட
பணமுமாட வேநீடு வரைசாடிப்
பரவையாழி நீர்மோத நிருதர்மாள வாளுடு
பதியதாக வேலேவு மயில்வீரா
வடிவுலாவி யாகாச மிளிர் பலாவி னீள்சோலை
வனசவாவி பூவோடை வயலோடே
மணிசெய்மாட மாமேடை சிகரமோடு வாகான
மயிலைமேவி வாழ்தேவர் பெருமாளே.

திருவடமுல்லைவாயில்

141

அணிசெவ்வி யார்திரை சூழ்புவி
தனநிவ்வி யேகரை யேறிட
அறிவில்லி யாமடி யேனிட ரதுதீர
அருள்வல்லை யோநெடு நாளின
மிருளில்லி லேயிடு மோவுன
தருளில்லை யோஇன மானவை யறியேனே
குணவில்ல தாமக மேரினை
யணிசெல்வி யாயரு ணசல
குருவல்ல மாதவ மேபெறு குணசாத
குடிலில்ல மேதரு நாளேது
மொழிநல்ல யோகவ ரேபணி
குணவல்ல வாசிவ னேசிவ குருநாதா
பணிகொள்ளி மாகண பூதமோ
டமர்கள்ளி கானக நாடக
பரமெல்லி யார்பர மேஸ்வரி தருகோவே

படரல்லி மாமலர் பாணம
துடைவில்லி மாமத னரனை
பரிசெல்வி யார்மரு காசுர முருகேசா

மணமோல்லை யாகி நகாகன
தனவல்லி மோகன மோடமர்
மகிழ்தில்லை மாநட மாடின ரருள்பாலா

மருமல்லி மாவன நீடிய
பொழில்மெல்லி காவன மாடமை
வடமுல்லை வாயிலின் மேவிய பெருமாளே.

வயிரவிவனம்

142

அருவரை யெடுத்த வீர னெரிபட விரற்க ளூனு
மரனிட மிருக்கு மாயி யருள்வோனே
அலைகட லடைத்த ராமன் மிகமன மகிழ்ச்சி கூரு
மணிமயில் நடத்து மாசை மருகோனே

பருதியி னொளிக்கண் வீறும் அறுமுக நிரைத்த தோள்ப
னிருகர மிகுத்த பார முருகாநின்
பதமல ருளத்தி னுளும் நினைவுறு கருத்தர் தாள்கள்
பணியவு மெனக்கு ஞானம் அருள்வாயே

சுருதிக ளுரைத்த வேத னுரைமொழி தனக்கு ளாதி
சொலுவென வுரைத்த ஞான குருநாதா
சுரர்பதி தழைத்து வாழ அமர்சிறை யனைத்து மீள
துணிபட அரக்கர் மாள விடும்வேலா

மருமலர் மணக்கும் வாச நிறைதரு தருக்கள் சூழும்
வயல்புடை கிடக்கு நீல மலர்வாவி
வளமுறு தடத்தி னூடு சரஸ்வதி நதிக்கண் வீறு
வயிரவி வனத்தில் மேவு பெருமாளே.

திருக்குரங்காடுதுறை

143

அலங்கார முடிக்கிரணத்
திரண்டாறு முகத்தழகிற்
கசைந்தாடு குழைக்கவசத் திரடோளும்

அலந்தாம மணித்திரளைப்
புரண்டாட நிரைத்தகரத்
தணிந்தாழி வளைக்கடகச் சுடர்வேலுஞ்

சிலம்போடு மணிச்சுருதிச்
சலங்கோசை மிகுத்ததிரச்
சிவந்தேறி மணத்தமலர்ப் புனைபாதந்

திமிந்தோதி திமித்திமித்
தனந்தான தனத்தனனத்
தினந்தோறு நடிப்பதுமற் புகல்வேனோ

இலங்கேசர் வனத்துள்வனக்
குரங்கேவி யழற்புகையிட்
டிளந்தாது மலர்த்திருவைச் சிறைமீளும்

இளங்காள முகிற்கடுமைச்
சரங்கோடு கரத்திலெடுத்
திருங்கான நடக்குமவற் சினியோனே

குலங்கோடு படைத்தசுரப்
பெருஞ்சேனை யழிக்கமுனைக்
கொடுந்தாரை வெயிற்கயிலைத் தொடும்வீரா

கொழுங்காவின் மலர்ப்பொழிலிற்
கரும்பாலை புணர்க்குமிசைக்
குரங்காடு துறைக்குமரப் பெருமாளே.

கூந்தலூர்

144

தரையினில் வெகுவழி சார்ந்த மூடனை
வெறியனை நிறைபொறை வேண்டி டாமத
சடலனை மகிமைகள் தாழ்ந்த வீணனை மிகுகேள்வி

தவநெறி தனைவிடு தாண்டு காலியை
யவமதி யதனில்போ லாங்கு தீமைசெய்
சமடனை வலியஅ சாங்க மாகிய தமியேனை

விரைசெறி குழலியர் வீம்பு நாரியர்
மதிமுக வனிதையர் வாஞ்சை மோகியர்
விழிவலை மகளிரோ டாங்கு கூடிய வினையேனை

வெகுமல ரதுகொடு வேண்டி யாகிலு
மொருமல ரிலைகொடு மோர்ந்து யானுனை
விதமுறு பரிவோடு வீழ்ந்து தாடொழ
அருள்வாயே

ஒருபது சிரமிசை போந்த ராவண
னிருபது புயமுட னேந்து மேதியு
மொருகணை தனிலற வாங்கு மாயவன் மருகோனே

உனதடி யவர்புக ழாய்ந்த நூலின
ரமரர்கள் முனிவர்க ளீந்த பாலகர்
உயர்கதி பெறஅரு ளோங்கு மாமயி
லுறைவோனே

குரைகழல் பணிவொடு கூம்பி டார்பொரு
களமிசை யறமது தீர்ந்த சூரர்கள்
குலமுழு தனைவரு மாய்ந்து தூளெழ முனிவோனே

கோடுவிட மதுதனை வாங்கி யேதிரு
மிடறினி லிருவென ஏந்து மீசுரர்
குருபர னெனவரு கூந்தலூருறை பெருமாளே.

திருவிடைமருதூர்

145

அறுகுநுனி பனியனைய சிறியதுளி பெரியதொரு
ஆக மாகியோர் பால ரூபமாய்
அருமதலை குதலைமொழி தனிலுருகி யவருடைய
ஆயி தாதையார் மாய மோகமாய்
அருமையினி லருமையிட மொளுமோளென வுடல்வளர
ஆளு மேளமாய் வால ரூபமாய்
அவரொரு பெரியோராய்
அழகுபெறு நடையடைய கிறுதுபடு மொழிபழகி
ஆவி யாயவோர் தேவி மாருமாய்
விழுசுவரை யரிவையர்கள் படுகுழியை நிலைமையென
வீடு வாசலாய் மாட கூடமாய்
அணுவளவு தவிடுமிக பிதிரவிட மனமிறுகி
ஆசை யாளராய் ஊசி வாசியாய்
அவியுறு சுடர்போலே
வெறுமிடிய னொருதவசி யமுதுபடை யெனுமளவில்
மேலை வீடுகேள் கீழை வீடுகேள்
திடுதிடென நுழைவதன்முன் எதிர்முடுகி யவர்களொடு
சீறி ஞாளிபோல் ஏறி வீழ்வதாய்
விரகினொடு வருபொருள்கள் சுவறியிட மொழியுமொரு
வீணி யார்சொலே மேல தாயிடா
விதிதனை நினையாதே
மினுகுமினு கெனுமுடல மறமுறுகி நெகிழ்வுறவும்
வீணர் சேவையே பூணு பாவியாய்
மறுமையுள தெனுமவரை விடும்விழலை யதனின்வரு
வார்கள் போகுவார் காணு மோளனு
விடுதுறவு பெரியவரை மறையவரை வெடுவெடென
மேள மேசொலாய் ஆளி வாயராய்
மிடையுற வருநாளில்

வறுமைகளு முடுகிவர வுறுபொருளு நழுவசில
வாத மூதுகா மாலை சோகைநோய்

பெருவயிறு வயிறுவலி படுவன்வர இருவிழிகள்
பீளை சாறிடா ஈளை மேலிடா

வழவழென உமிழுமது கொழகொழென ஒழுகிவிழ
வாடி யூனெலாம் நாடி பேதமாய்
மனையவள் மனம்வேறாய்

மறுகமனை யுறுமவர்கள் நணுகுநணு கெனுமளவில்
மாதர் சீயெனு வாலர் சீயெனு

கனவுதனி லிரதமொடு குதிரைவர நெடியசுடு
காடு வாவெனு வீடு போவெனு

வலதழிய விரகழிய வுரைகுழறி விழிசொருகி
வாயு மேலிடா ஆவி போகுநாள்
மனிதர்கள் பலபேச

இறுதியதோ டறுதியென உறவின்முறை கதறியழ
ஏழை மாதராள் மோதி மேல்விழா

எனதுடைமை யெனதடிமை யெனுமறிவு சிறிதுமற
ஈமோ லேலெனு வாயை ஆவெனு

இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு தவிலறைய
ஈம தேசமே பேய்கள் சூழ்வதாய்
எரிதனி லிடும்வாழ்வே

இணையடிகள் பரவுமுன தடியவர்கள் பெறுவதுவும்
ஏசி டார்களோ பாச நாசனே

இருவினையு மலமுமற இறவியொடு பிறவியற
ஏக போகமாய் நீயு நானுமாய்

இறுகும்வகை பரமசுக மதனையரு ளிடைமருதில்
ஏக நாயகா லோக நாயகா
இமையவர் பெருமாளே.

146

படியையள விடுநெடிய கொண்டலுஞ் சண்டனும்
தமரசது மறையமரர் சங்கமுஞ் சம்புவும்
பரவரிய நிருபன்விர கன்சுடுஞ் சம்பனன்
செம்பொன்மேனிப்

பரமனெழில் புனையுமர வங்களுங் கங்கையுந்
திருவளரு முளரியொடு திங்களுங் கொன்றையும்
பரியகுமி ழறுகுகன தும்பையுஞ் செம்பையுந்
துன்றுமூலச்

சடைமுடியி லணியுநல சங்கரன் கும்பிடுங்
குமரனறு முகவன்மது ரந்தருஞ் செஞ்சொலன்
சரவணையில் வருமுதலி கொந்தகன் கந்தனென்
றுய்ந்துபாடித்

தணியவொலி புகலும்வித மொன்றிலுஞ் சென்றிலன்
பகிரவொரு தினையளவு பண்புகொண் டண்டிலன்
தவநெறியி லொழுகிவழி பண்படுங் கங்கணஞ்
சிந்தியாதோ

கடுகுபொடி தவிடுபட மந்திரந் தந்திரம்
பயிலவரு நிருதருட லம்பிளந் தம்பரங்
கதறிவெகு குருதிநதி பொங்கிடுஞ் சம்ப்ரமங்
கண்டுசேரக்

கழுகுநரி கொடிகருட னங்கெழுந் தெங்குநின்
றலகைபல திமிலைகொடு தந்தனந் தந்தனங்
கருதியிசை பொசியுநசை கண்டுகண் டின்புறுந்
துங்கவேலா

அடல்புனையு மிடை மருதில் வந்திணங் குங்குணம்
பெரியகுரு பரகுமர சிந்துரஞ் சென்றடங்
கடவிதனி லுறைகுமரி சந்திலங் குந்தனந்
தங்குமார்பா

அருணமணி வெயிலிலகு தண்டையம் பங்கயங்
கருணைபொழி வனகழலி லந்தமுந் தம்பமென்
றழகுபெற நெறிவருடி யண்டருந் தொண்டுறுந்
தம்பிரானே.

கும்பகோணம்

147

கரியகுழல் சரியமுகம் வேர்வாட வாசமுறு
களபமுலை புளகமெழ நேரான வேல்விழிகள்
கயல்பொருது செயலதென நீள்பூச லாடநல
கனிவாயின்

கமழ்குமுத அதரவிதழ் தேனூறல் பாயமிகு
கடலமுத முதவியிரு தோள்மாலை தாழவளை
கலகலென மொழிபதற மாமோக காதலது
கரைகாணு

தெரியணுகு மெழுகுபத மாய்மேவி மேவியிணை
யிருவருட லொருவரென நாணுது பாயல்மிசை
யிளமகளிர் கலவிதனி லேமூழ்கி யாழுகினு
மிமையாதே

இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இளமையுமு னழகுபுனை யீராறு தோள்நிரையும்
இருபதமு மறுமுகமும் யானோத ஞானமதை
யருள்வாயே

உரியதவ நெறியில்நம நாராய ணயவென
ஒருமதலை மொழியளவி லோராத கோபமுட
னுனதிறைவ னெதனிலுள னோதாய டாவெனுமு
னுறுதூணில்

உரமுடைய அரிவடிவ தாய்மோதி வீழவிர
லுகிர்புதைய இரணியனை மார்பீறி வாகைபுனை
உவணபதி நெடியவனும் வேதாவும் நான்மறையு
முயர்வாக

வரியளிக ளிசைமுரல வாகான தோகையிள
மயிலிடையில் நடனமிட ஆகாச முடுருவ
வளர்கமுகின் விரிகுலேகள் பூஞ்ரு மாகியிட
மதில்சூழும்

மருதரசர் படைவிடுதி வீடாக நாடிமிக
மழவிடையின் மிசையிவரு சோமீசர் கோயில்தனில்
மகிழ்வுபெற வுரைமுருக னேபேணு வானவர்கள்
பெருமாளே.

திருவீழிமிழலை

148

எருவாய் கருவாய் தனிலே யுருவா
யிதுவே பயிராய் விளைவாகி

இவர்போ யவரா யவர்போ யிவரா
யிதுவே தொடர்பாய் வெறிபோல

ஒருதா யிருதாய் பலகோ டியதா
யுடனே யவமா யழியாதே

ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோ தருள்தாராய்

முருகா வெனவோர் தரமோ தடியார்
முடிமே லிணைதா ளருள்வோனே

முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூ ரரமேல் விடும்வேலா

திருமால் பிரமா அறியா தவர்சீர்
சிறுவா திருமால் மருகோனே

செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீழியில்வாழ் பெருமாளே.

சோமநாதன்மடம்

149

ஒருவழிப டாதுமாயை யிருவினைவி டாதுநாளு
முழலுமநு ராகமோக அநுபோகம்

உடலுமுயிர் தானுமாயு னுணர்விலொரு காலிராத
வுளமுநெகிழ் வாகுமாறு அடியேனுக்

கிரவுபகல் போனஞான பரமசிவ யோகதீர
மெனமொழியும் வீசுபாச கனகோப

எமபடரை மோதுமோன வுரையிலுப தேசவாளை
எனதுபகை தீரநீயும் அருள்வாயே

அரிவையொரு பாகமான அருணகிரி நாதர்பூசை
அடைவுதவ றுதுபேணும் அறிவாளன்

அமணர்குல காலனுகும் அரியதவ ராஜராஜன்
அவனிபுகழ் **சோமநாதன்** மடமேவும்

முருகபொரு சூரர்சேனை முறியவட மேருவீழ
முகரசல ராசிவேக முனிவோனே

மொழியுமடி யார்கள்கோடி குறைகருதி னுலும்வேறு
முனியஅறி யாததேவர் பெருமாளே.

பெரியமடம்

150

கலகவிழி மாமகளிர் கைக்குளே யாய்ப்போய்
களவுமத னூல்பலப டித்தவா வேட்கை
கனதனமு மார்புமுற லிச்சையா லார்த்து கழுநீரார்

கமழ்நறைச வாதுபுழு கைத்துழாய் வார்த்து
நிலவரசு நாடறிய கட்டில்போட் டார்ச்சேய்
கருமமறியாதுசிறு புத்தியால் வாழ்க்கை கருதாதே

தலமடைசு சாளரமு கப்பிலே காத்து
நிறைபவுசு வாழ்வரசு சத்யமே வாய்த்த
தேனவுருகி யோடியோரு சற்றுளே வார்த்தை
தடுமாறித்

தழுவியநு ராகமும்வி ளைத்துமா யாக்கை
தனையுமரு நாளையும வத்திலே போக்கு
தலையறிவி லேனைநெறி நிற்கநீ தீக்ஷை தரவேணும்

அலகில்தமி ழாலுயர்ச மர்த்தனே போற்றி
அருணைநகர் கோபுரவி ருப்பனே போற்றி
அடல்மயில்ந டாவியப்ரி யத்தனே போற்றி
அவதான

அறுமுகசு வாமியெனும் அத்தனே போற்றி
அகிலதல மோடிவரு நிர்த்தனே போற்றி
அருணகிரி நாதஎனும் அப்பனே போற்றி அசுரேசர்

பெலமடிய வேல்விடுக ரத்தனே போற்றி
கரதலக பாலிகுரு வித்தனே போற்றி
பெரியகுற மாதணைபு யத்தனே போற்றி
பெருவாழ்வாம்

பிரமனறி யாவிரத தக்ஷிணா மூர்த்தி
பரசமய கோளரித வத்தினல் வாய்த்த
பெரியமட மேவியசு கத்தனே யோக்யர் பெருமாளே.

ஸ்ரீ முட்டம்

151

கழைமுத்து மாலை புயல்முத்து மாலை
கரிமுத்து மாலை மலைமேவுங்

கடிமுத்து மாலை வளைமுத்து மாலை
கடல்முத்து மாலை யரவீனும்

அழல்முத்து மாலை யிவைமுற்று மார்பி
னடைவோத்து லாவ அடியேன்முன்

அடர்பச்சை மாவி லருளிற்பெ ணோடு
மடிமைக்கு ழாமோ டருள்வாயே

மழையொத்த சோதி குயில்தத்தை போலு
மழலைச்சொ லாயி யெமையீனு

மதமத்த நீல களநித்த நாதர்
மகிழ்சத்தி யீனு முருகோனே

செழுமுத்து மார்பி னமுதத்தெய் வானை
திருமுத்தி மாதின் மணவாளா

சிறையிட்ட சூரர் தலைவெட்டி ஞான
திருமுட்ட மேவு பெருமாளே.

தேவனூர்

152

காணொ ணாதது உருவோ டருவது
பேசொ ணாதது உரையே தருவது
காணு நான்மறை முடிவாய் நிறைவது பஞ்சபூதக்

காய பாசம தனிலே யுறைவது
மாய மாயுட லறியா வகையது
காய மானவ ரெதிரே யவரென வந்துபேசிப்

பேணொ ணாதது வெளியே யொளியது
மாய ஞாய னறியா வகையது
பேத பேதமோ டுலகாய் வளர்வது விந்துநாதப்

பேரு மாய்கலை யறிவாய் துரியவ
தீத மானது வினையேன் முடிதவ
பேறு மாயருள் நிறைவாய் விளைவது ஒன்றுநீயே

வீணே ணுதேன அமையா தசுரரை
நூறி யேயுயிர் நமனீ கொளுவென
வேல்க டாவிய கரனே யுமைமுலை யுண்டகோவே

வேத நான்முக மறையோ னுடும்வினை
யாடி யேகுடு மியிலே கரமோடு
வீற மோதின மறவா குறவர்கு றிஞ்சியூடே

சேணே ணுயிடு மிதண்மே லரிவையை
மேவி யேமயல் கோளலீ லைகள்செய்து
சேர நாடிய திருடா அருடரு கந்தவேளே

சேரோ ணுவகை வெளியே திரியுமெய்ஞ்
ஞான யோகிக ளுளமே யுறைதரு
தேவ னூர்வரு குமரா வமரர்கள் தம்பிரானே.

153

தூர காசு ரன்ச ரிந்து வீழ வேரு டன்ப றிந்து
சாதி பூத ரங்கு லுங்க முதுமீனச்

சாக ரோதை யங்கு ழம்பி நீடு தீகொ ளுந்த அன்று
தாரை வேல்தொ டுங்க டம்ப மததாரை

ஆர வார வும்பர் கும்ப வார ணுச லம்பொ ருந்து
மானை யாளு நின்ற குன்ற மறமானும்

ஆசை கூரு நண்ப என்று மாம யூர கந்த என்றும்
ஆவல் தீர என்று நின்று புகழ்வேனே

பார மார்த ழும்பர் செம்பொன் மேனியாளர் கங்கை வேணக
பால மாலை கொன்றை தும்பை சிறுதாளி

பார மாசு ணங்கள் சிந்து வார வார மென்ப டம்பு
பானல் கூவி ளங்க ரந்தை அறுகோடே

சேர வேம ணந்த நம்ப ரீச ஞரி டஞ்சி றந்த
சீத ளார விந்த வஞ்சி பெருவாழ்வே
தேவர் யாவ ருந்தி ரண்டு பாரின் மீது வந்தி றைஞ்சு
தேவ னூர்வி ளங்க வந்த பெருமாளே.

உத்தரமேரூர்

154

சுருதி மறைக ளிருநாலு திசையி லதிபர் முனிவோர்கள்
துகளி லிருடி யெழுபேர்கள் சுடர்மூவர்
சோலவில் முடிவில் முகியாத பகுதி புருடர் நவநாதர்
தோலைவி லுடுவி னுலகோர்கள் மறையோர்கள்
அரிய சமய மொருகோடி அமரர் சரணர் சதகோடி
அரியு மயனு மொருகோடி யிவர்கூடி
அறிய அறிய அறியாத அடிக ளறிய அடியேனும்
அறிவு ளறியு மறிவூற அருள்வாயே
வரைகள் தவிடு பொடியாக நிருதர் பதியும் அழிவாக
மகர சலதி அளறுக முதுசூரும்
மடிய அலகை நடமாட விஜய வனிதை மகிழ்வாக
மவுலி சிதறி இரைதேடி வருநாய்கள்
நரிகள் கொடிகள் பசியாற உதிர நதிக ளலைமோத
நமனும் வெருவி யடிபேண மயிலேறி
நளின வுபய கரவேலை முடுகு முருக வடமேரு
நகரி யுறையு மிமையோர்கள் பெருமாளே.

155

தோலெலும்பு சீநரம்பு பீளைதுன்று கோழைபொங்கு
சோரிபிண்ட மாயுருண்டு வடிவான
தூலபங்க காயம்வம்பி லேசுமந்து நான்மெலிந்து
சோருமிந்த நோயகன்று துயராற

ஆலமுண்ட கோனகண்ட லோகமுண்ட மால்விரிஞ்ச
ஞரணங்க ளாகமங்கள் புகழ்தாளும்
ஆனனங்கள் மூவிரண்டு மாறிரண்டு தோளுமங்கை
யாடல்வென்றி வேலுமென்று நினைவேனோ
வாலசந்த்ர சூடிசந்த வேதமந்த்ர ரூபியம்பை
வாணிபஞ்ச பாணிதந்த முருகோனே
மாயையைந்து வேகமைந்து பூதமைந்து நாதமைந்து
வாழ்பெருஞ் சராசரங்க ளுறைவோனே
வேலையன்பு கூரவந்த ஏகதந்த யானைகண்டு
வேடர்மங்கை யோடியஞ்ச அணைவோனே
வீரமங்கை வாரிமங்கை பாரின்மங்கை மேவுகின்ற
மேருமங்கை யாளவந்த பெருமாளே.

வயலூர்

156

திருவுரூப நேராக அழகதான மாமாய
திமிர மோக மானூர்கள் கலைமூடுஞ்
சிகரியூடு தேமாலை யடவியூடு போயாவி
சேருமால ஞசார வினையேனைக்
கருவிழாது சீரோதி யடிமைபூண லாமாறு
கனவிலாள்சு வாமிநின் மயில்வாழ்வுங்
கருணைவாரி கூரேக முகமும்வீர மாருத
கழலுநீப வேல்வாகு மறவேனே
சருவதேவ தேவாதி நமசிவாய நாமாதி
சயிலநாரி பாகாதி புதல்வோனே
சதமகீவல் போர்மேவு குலிசபாணி மால்யானை
சகசமான சாரீசெ யிளையோனே

மருவுலோக மீரேழு மளவிடாவோ ணுவான
வரையில்வீசு தாள்மாயன் மருகோனே
மநுநியாய சோணுடு தலைமையாக வேமேலை
வயலிமீது வாழ்தேவர் பெருமானே.

157

என்னுல் பிறக்கவும் என்னு லிறக்கவும்
என்னுல் துதிக்கவுங் கண்களாலே
என்னு லழைக்கவும் என்னுல் நடக்கவும்
என்னு லிருக்கவும் பெண்டிர்வீடு
என்னுல் சுகிக்கவும் என்னுல் முசிக்கவும்
என்னுல் சலிக்கவும் தோந்தநோயை
என்னு லெரிக்கவும என்னுல் நினைக்கவும்
என்னுல் தரிக்கவும் இங்குநானுர்
கன்னு ருரித்தஎன் மன்னு எனக்குநல்
கர்ணு மிர்தப்பதம் தந்தகோவே
கல்லார் மனத்துட னில்லா மனத்தவ
கண்ணு டியிற்றடங் கண்டவேலா
மன்னுன தக்கனை முன்னுள் முடித்தலை
வன்வா ளியிற்கொளுந் தங்கரூபன்
மன்னு குறத்தியின் மன்னு வயற்பதி
மன்னு முவர்க்கொரு தம்பிரானே.

திருப்பாதிரிப்புலியூர்

158

நிணமோடு குருதி நரம்பு மாறிய
தசைகுடல் மிடையு மெலும்பு தோலிவை
நிரைநிரை செறியு முடம்பு நோய்படு முதுகாயம்

நிலைநிலை யுருவ மலங்க ளாவது
நவதோளை யுடைய குரம்பை யாமிதில்
நிகழ்தரு பொழுதில் முயன்று மாதவ முயவோரும்

உணர்விலி செபமுத லொன்று தானிலி
நிறையிலி முறையிலி யன்பு தானிலி
உயர்விலி யெனினுமே னெஞ்சு தானினை வழியாமுன்

ஒருதிரு மரகத துங்க மாமிசை
யறுமுக மொளிவிட வந்து நான்மறை
யுபநிட மதனை விளங்க நீயருள் புரிவாயே

புணரியில் விரவி யெழுந்த ஞாயிறு
விலகிய புரிசை யிலங்கை வாழ்பதி
பொலமணி மகுட சிரங்கள் தாமொரு பதுமாறிப்

புவியிடை யுருள முனிந்து கூர்கணை
யுறுசிலை வளைய வலிந்து நாடிய
புயலதி விறலரி விண்டு மால்திரு மருகோனே

அணிதரு கயிலை நடுங்க வோரெழு
குலகிரி யடைய இடிந்து தூளெழ
அலையெறி யுததி குழம்ப வேல்விடு முருகோனே

அமலைமு னரிய தவஞ்செய் பாடல
வளநகர் மருவி யமர்ந்த தேசிக
அறுமுக குறமக ளன்ப மாதவர் பெருமாளே.

திருவிடைக்கழி

159

பகரு முத்தமிழ்ப் பொருளு மெய்த்தவப்
பயனு மெப்படிப் பலவாழ்வும்

பழைய முத்தியிற் பதமு நட்புறப்
பரவு கற்பகத் தருவாழ்வும்

புகரில் புத்தியுற் றரசு பெற்றுறப்
போலியும் அற்புதப் பெருவாழ்வும்
புலன கற்றிடப் பலவி தத்தினைப்
புகழ்ப லத்தினைத் தரவேணும்

தகரி லற்றகைத் தலம்வி டப்பிணைச்
சரவ ணத்தினிற் பயில்வோனே
தனிவ னத்தினிற் புனமறத்தியைத்
தழுவு போற்புயத் திருமார்பா

சிகர வெற்பினைப் பகிரும் வித்தகத்
திறல யிற்சுடர்க் குமரேசா
செழும லர்ப்பொழிற் குரவ முற்றபொற்
றிருவி டைக்கழிப் பெருமாளே.

நெடுங்களம்

160

பஞ்சபுல னும்பழைய ரண்டுவினை யும்பிணிகள்
பஞ்செனஎ ரிந்துபொடி யங்கமாகிப்
பண்டறவு டன்பழைய தொண்டர்களு டன்பழகி
பஞ்சவர்வி யன்பதியு டன்குலாவக்

குஞ்சரமு கன்குணமொ டந்தவனம் வந்துலவ
கொஞ்சியசி லம்புகழல் விந்துநாதங்
கொஞ்சமயி லின்புறமேல் வந்தருளி யென்கவலை
கொன்றருள்நி றைந்தகழ லின்றுதாராய்

எஞ்சியிடை யுஞ்சுழல அம்புவிழி யுஞ்சுழல
இன்பரச கொங்கைகர முங்கோளாமல்
எந்தவுடை சிந்தபெல மிஞ்சியமு தம்புரள
இந்துநுத லும்புரள கங்குல்மேகம்

அஞ்சுமள கம்புரள மென்குழைக ளும்புரள
அம்பொனுரு மங்கைமண முண்டபாலா
அன்பர்குல வுந்திருநே டுங்களவ ளம்பதியி
லண்டரய னும்பரவு தம்பிரானே,

திருக்கூடலையாற்றூர்

161

வாட்டியெனைச் சூழ்ந்தவினை யாசையமு வாசையனல்
மூட்டியுலைக் காய்ந்தமழு வாமெனவி காசமொடு
மாட்டியெனைப் பாய்ந்துகட வோடடமோ டாடிவிடு
விஞ்சையாலே

வாய்த்தமலர்ச் சாந்துபுழு கானபனி நீர்களொடு
காற்றுவரத் தாங்குவன மார்பிலணி யாரமொடு
வாய்க்குமெனப் பூண்டழக தாகபவி சோடுமகிழ்
வன்புகூரத்

தீட்டுவிழிக் காந்திமட வார்களுட னுடிவலை
பூட்டிவிடப் போந்துபிணி யோடுவலி வாதமென
சேர்த்துவிடப் போந்துவினை மூடியடி யேனுமுன
தன்பிலாமல்

தேட்டமுறத் தேர்ந்துமமிர் தாமெனவெ யேகிநம
னேட்டிவிடக் காய்ந்துவரி வேதனடை யாளமருள்
சீட்டுவரக் காண்டுநலி காலனணு காநினரு
ளன்புதாராய்

வேட்டுவரைக் காய்ந்துகுற மாதையுற வாடியிருள்
நாட்டவரைச் சேர்ந்தகதிர் வேல்கொடம ராடிசிறை
மீட்டமரர்க் காண்டவனை வாழ்கநிலை யாகவைகும்
விஞ்சையோனே

வேற்றுருவிற் போந்துமது ராபுரியி லாடிவைகை
யாற்றின்மணற் ருங்குமமு வாளியென தாதைபுர
மேட்டையெரித்தாண்டசிவலோகன்விடை யேறியிட
முங்கோளாயி

கோட்டுமுலைத் தாங்குமிழை யானஇடை கோடிமதி
தோற்றமெனப் போந்தஅழ கானசிவ காமிவிறல்
கூற்றுவனைக் காய்ந்தஅபி ராமிமன தாரஅருள்
கந்தவேளே

கூட்டுநதித் தேங்கியவே ளாறுதர ளாறுதிகழ்
நாட்டிலுறைச் சேந்தமயிலாவளிதெய்வானையோடே
கூற்றுவிழத் தாண்டியென தாகமதில் வாழ்குமர
தம்பிரானே.

இராமேச்சுரம்

162

வாலவய தாகியழ காகிமத ளுகிபணி
வாணிபமோ டாடிமரு ளாடிவிளை யாடிவிழல்
வாழ்வுசத மாகிவலு வாகிமட கூடமோடு
பொருள்தேடி

வாசபுழு கோடுமல ரோடுமன மாகிமகிழ்
வாசனைக ளாதியிட லாகிமய லாகிவிலை
மாதர்களை மேவியவ ராசைதனி லேசுழல
சிலநாள்போய்த்

தோல்திரைக ளாகிநரை யாகிகுரு டாகியிரு
கால்கள்தடு மாறிசெவி மாறிபசு பாசபதி
சூழ்கதிகள் மாறிசுக மாறிதடி யோடுதிரி யுறுநாளிற்

சூலைசொறி யீளைவலி வாதமொடு நீரிழிவு
சோகைகள மாலைசுர மோடுபிணி தூறிருமல்
சூழலுற மூலகசு மாலமென நாறியுட லழிவேனோ

நாலுமுக ஞதியரி யோமேனஅ தாரமுறை
யாதபிர மாவைவிழ மோதிபொரு ளோதுகேன
நாலுசிர மோடுசிகை தூளிபட தாளமிடு
மிளையோனே

நாறிதழி வேணிசிவ ரூபகலி யாணிமுத
லீணமக வாணமகிழ் தோழவன மீதுசேறி
ஞானகுற மாதைதினை காவில்மண மேவு புகழ்
மயில்வீரா

ஓலமிடு தாடகைசு வாகுவள ரேழுமரம்
வாலியோடு நீலிபக ஞேடொருவி ராதனெழு
மோதகட லோடுவிறல் ராவணகு ழாமமரில்
பொடியாக

ஓகைதழல் வாளிவிடு மூரிதநு நேமிவளை
பாணிதிரு மார்பனரி கேசன்மரு காஎனவே
யோதமறை **ராமேசுர**மேவுகும ராவமரர் பெருமாளே.

எழுகரைநாடு

163

விரகற நோக்கியு முருகியும் வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட அன்புமேன்மேல்
மிகவுமி ராப்பகல் பிறிதுப ராக்கற
விழைவுகு ராப்புனை யுங்குமார
முருகச டாக்ஷர சரவண கார்த்திகை
முலைநுகர் பார்த்திப என்றுபாடி
மொழிகுழ ருத்தொழு தழுதழு தாட்பட
முழுதும லாப்பொருள் தந்திடாயோ
பரகதி காட்டிய விரகசி லோச்சய
பரமப ராக்ரம சம்பராரி

படவிழி யாற்பொரு பசுபதி போற்றிய
பகவதி பார்ப்பதி தந்தவாழ்வே

இரைகடல் தீப்பட நிசிசரர் கூப்பிட
எழுகிரி யார்ப்பெழ வென்றவேலா

இமையவர் நாட்டினில் நிறைகுடி யேற்றிய
எழுகரை நாட்டவர் தம்பிரானே.

விரிஞ்சிபுரம்

164

மருவு மஞ்சு பூத முரிமை வந்தி டாது
மலமி தென்று போட அறியாது

மயல்கொ ளிந்த வாழ்வு அமையு மெந்த நாளும்
வகையில் வந்தி ராத அடியேனும்

உருகி யன்பி னோடு உனைநி னைந்து நாளும்
உலக மென்று பேச அறியாத

உருவ மொன்றி லாத பருவம் வந்து சேர
உபய துங்க பாத மருள்வாயே

அரிவி ரிஞ்சர் தேட அரிய தம்பி ரானும்
அடிப ணிந்து பேசி கடையூடே

அருளு கென்ற போது பொருளி தென்று காண
அருளு மைந்த ஆதி குருநாதா

திரியு மும்பர் நீடு கிரி பிளந்து சூரர்
செருவ டங்க வேலை விடுவோனே

செயல மைந்த வேத தொனிமு ழங்கு வீதி
திருவி ரிஞ்சை மேவு பெருமாளே.

மதுரை

165

அலகில வுணரைக் கொன்ற தோளென
மலைதொளை யுருவச் சென்ற வேலென
அழகிய கனகத் தண்டை சூழ்வன புண்டரீக
அடியென முடியிற் கொண்ட கூதள
மெனவன சரியைக் கொண்ட மார்பென
அறுமுக மெனநேக் கென்பெ லாமுரு கன்புருதோ

கலகல கலெனக் கண்ட பேரொடு
சிலுகிடு சமயப் பங்க வாதிகள்
கதறிய வெகுசொற் பங்க மாகிய போங்களாவுங்
கலைகளு மொழியப் பஞ்ச பூதமு
மொழியுற மொழியிற் றுஞ்சு ருதன
கரணமு மொழியத் தந்த ஞானமி ருந்தவாறென்

இலகுக டலைகற் கண்டு தேனொடு
மிரதமு றுதினைப் பிண்டி பாகுடன்
இனிமையி னுகருற் றெம்பி ரானொரு கொம்பினாலே
எழுதென மொழியப் பண்டு பாரதம்
வடகன சிகரச் செம்பொன் மேருவில்
எழுதிய பவளக் குன்று தாதையை யன்றுசூழ

வலம்வரு மளவிற் சண்ட மாருத
விசையினும் விசையுற் றெண்டி சாமுக
மகிதல மடையக் கண்டு மாசுண முண்டுலாவு
மரகத கலபச் செம்புள் வாகன
மிசைவரு முருகச் சிம்பு ளேயென
மதுரையில் வழிபட் டும்ப ரார்தொழு தம்பிரானே.

166

பரவு நெடுங்கதி ருலகில் விரும்பிய
பவனி வரும்படி யதனுலே
பகர வளங்களு நிகர விளங்கிய
இருளை விடிந்தது நிலவாலே
வரையினி லெங்கணு முலவி நிறைந்தது
வரிசை தரும்பத மதுபாடி
வளமொடு செந்தமி ழுரைசெய அன்பரு
மகிழ வரங்களு மருள்வாயே
அரஹர சுந்தர அறுமுக என்றுனி
அடியர் பணிந்திட மகிழ்வோனே
அசலநெ டுங்கொடி அமையுமை தன்சுத
குறமக ளிங்கித மணவாளா
கருதரு திண்புய சரவண குங்கும
களபம ணிந்திடு மணிமார்பா
கனக மிகும்பதி மதுரை வளம்பதி
யதனில் வளர்ந்தருள் பெருமாளே.

167

பழிப்பர் வாழ்த்துவர் சிலசில பெயர்தமை
ஒருத்தர் வாய்ச்சுரு ளொருவர்கை யுதவுவர்
பணத்தை நோக்குவர் பிணமது தழுவுவர்
அளவளப் பதனுலே
படுக்கை வீட்டினு ளவுஷத முதவுவர்
அணைப்பர் கார்த்திகை வருதென வுறுபொருள்
பறிப்பர் மாத்தையி லொருவிசை வருகென
அவரவர்க் குறவாயே

அழைப்ப ராஸ்திகள் கருதுவ ரோருவரை
முடுக்கி யோட்டுவ ரழிகுடி யரிவையர்
அலட்டி ஞற்பிணை யெருதென மயலெனு
நரகினிற் சுழல்வேனே
அவத்த மாய்ச்சில படுகுழி தனில்விழும்
விபத்தை நீக்கியு னடியவ ருடனெனை
அமர்த்தி யாட்கோள மனதினி லருள்செய்து
கதிதனைத் தருவாயே
தழைத்த சாத்திர மறைபொரு ளறிவுள
குருக்கள் போற்சிவ நெறிதனை யடைவொடு
தகப்ப ஞர்க்கொரு செவிதனி லுரைசெய்த
முருகவித் தகவேளே
சமத்தி ஞற்புகழ் சனகியை நலிவுசெய்
திருட்டு ராக்கத னுடலது துணிசெய்து
சயத்த யோத்தியில் வருபவ னரிதிரு
மருமகப் பரிவோனே
செழித்த வேற்றனை யசுரர்க ளுடலது
பிளக்க வோச்சிய பிறகம ரர்கள்பதி
செலுத்தி யீட்டிய சுரபதி மகள்தனை
மணமதுற் றிடுவோனே
திறத்தி ஞற்பல சமணரை யெதிரெதிர்
கழுக்க ளேற்றிய புதுமையை யினிதோடு
திருத்த மாய்ப்புகழ் மதுரையி லுறைதரும்
அறுமுகப் பெருமாளே.

168

முத்துநவ ரத்னமணி பத்திநிரை சத்தியிட
மோய்த்தகிரி முத்திதரு வெனவோதும்
முக்கணிறை வர்க்குமருள் வைத்தமுரு கக்கடவுள்
முப்பதுமு வர்க்கசுர ரடிபேணி

பத்துமுடி தத்தும்வகை யுற்றகணை விட்டஅரி
பற்குனனை வெற்றிபெற ரதமூரும்
பச்சைநிற முற்றபுயல் அச்சமற வைத்தபொருள்
பத்தர்மன துற்றசிவம் அருள்வாயே

தித்திமிதி தித்திமிதி திக்குகுகு திக்குகுகு
தெய்த்ததென தெய்த்ததென தெனனுன
திக்குவென மத்தளமி டக்கைதுடி தத்ததகு
செச்சரிகை செச்சரிகை யெனஆடும்

அத்தனுட னொத்தநட நித்ரிபுவ நத்திநவ
சித்தியருள் சத்தியருள் புரிபாலா
அற்பவிடை தற்பமது முற்றுநிலை பெற்றுவள
ரற்கனக பத்மபுரி பெருமாளே.

169

நீதத் துவமாகி - நேமத் துணையாகிப்
பூதத் தயவான - போதைத் தருவாயே
நாதத் தொனியோனே - ஞானக் கடலோனே
கோதற் றமுதானே - கூடற் பெருமாளே.

கோடைநகர்

170

தோழமை கொண்டுச லஞ்செய் குண்டர்கள்
ஓதிய நன்றிம றந்த குண்டர்கள்
சூழ்விர தங்கள் கடிந்த குண்டர்கள் பெரியோரைத்

தூஷண நிந்தைப கர்ந்த குண்டர்க
ளீவது கண்டுத கைந்த குண்டர்கள்
சூளுற வென்பதொ ழிந்த குண்டர்கள் தொலையாமல்

வாழநி னைந்துவ ருந்து குண்டர்கள்
நீதிய றங்கள்சி தைந்த குண்டர்கள்
மானவ கந்தைமி குந்த குண்டர்கள் வலையாலே

மாயையில் நின்றுவ ருந்து குண்டர்கள்
தேவர்கள் சோங்கள்க வர்ந்த குண்டர்கள்
வாதைந மன்றன்வ ருந்தி டுங்குழி விழுவாரே

ஏழு மாங்களும் வன்கு ரங்கெனும்
வாலியு மம்பர மும்ப ரம்பரை
ராவண னுஞ்சது ரங்க லங்கையு மடைவேமுன்
ஈடழி யும்படி சந்த்ர னுஞ்சிவ
சூரிய னுஞ்சுர ரும்ப தம்பெற
ராம சரந்தொடு புங்க வன்திரு மருகோனே
கோழி சிலம்பந லம்ப யின்றக
லாபந டஞ்செய மஞ்சு தங்கிய
கோபுர மெங்கும்வி ளங்கு மங்கல வயலூரா
கோமள அண்டர்கள் தொண்டர் மண்டலர்
வேல னெனும்பெய ரன்பு டன்புகழ்
கோடை யெனும்பதி வந்த இந்திரர் பெருமாளே.

171

வாசித்த நூல்ம தங்கள் பேசிக்கொ டாத விந்து
வாய்மைப்ர காச மென்று நிலையாக
மாசிக்க பால மன்றில் நாசிக்கு ளோடு கின்ற
வாயுப்பி ராண னென்று மடைமாறி
யோசித்த யாரு டம்பை நேசித்து ருத லைந்து
ரோமத்து வார மெங்கு முயிர்போக
யோகச்ச மாதிகொண்டு மோகப்ப சாசு மண்டு
லோகத்தில் மாய்வ தென்று மொழியாதோ
வீசப்ப யோதி துஞ்ச வேதக்கு லால னஞ்ச
மேலிட்ட சூர்த டிந்த கதிர்வேலா
வீரப்ர தாப பஞ்ச பாணத்தி னுல்ம யங்கி
வேடிச்சி காலி லன்று விழுவோனே

கூசிப்பு காவோ துங்க மாமற்றி காத ரிந்த
கூளப்பு ராரி தந்த சிறியோனே
கோழிப்ப தாகை கொண்ட கோலக்கு மார கண்ட
கோடைக்குள் வாழ வந்த பெருமாளே.

திருப்போரூர்

172

தீமிர மாமன மாமட மடமை யேனிட ராணவ
திமிர மேயரி சூரிய திரிலோக
தினக ராசிவ காரண பனக பூஷண ஆரண
சிவசு தாவரி நாரணன் மருகோனே

குமரி சாமளி மாதுமை அமலி யாமளி பூரணி
குணக லாநிதி நாரணி தருகோவே
குருகு காகும ரேசுர சரவ ணுசக ளேசுர
குறவர் மாமக ளாசைகோள் மணியேசம்

பமர பாரப்ர பாருண படல தாரக மாசுக
பசுர பாடன பாளித பகளேச
பசித பாரண வாரண துவச ஏடக மாவயில்
பரவு பாணித பாவல பரயோக

சமப ராமத சாதல சமய மாறிரு தேவத
சமய நாயக மாமயில் முதுவீர
சகல லோகமு மாசறு சகல வேதமு மேதொழு
சமர மாபுரி மேவிய பெருமாளே.

மதுராந்தகம்

173

சயிலாங்க ணைக்கு ருகியிடப்பக்
கங்கோ டுத்த கம்பர் வெகுசாரி
சதிதாண்ட வத்தர் சடையிடத்துக்
கங்கை வைத்த நம்பர் உரைமாளச்

சேயல்மாண்டு சித்த மவிழநித்தத்
த்வம்பெ றப்ப கர்ந்த உபதேசஞ்
சிறியேன்த னக்கு முரைசெயிற்சற்
றுங்கு ருத்து வங்கு றையுமோதான்
அயில்வாங்கி யேற்றி உததியிற்கோக்
கன்ற ஊனப்பிளந்து சுரர்வாழ
அகிலாண்ட முற்று நோடியினிற்சுற்
றுந்தி றற்ப்ர சண்ட முழுநீல
மயில்தாண்ட விட்டு முதுதலப்பொற்
குன்றி டித்த சங்க்ர மவிநோதா
மதுராந்த கத்து வடதிருச்சிற்
றம்ப லத்த மர்ந்த பெருமாளே.

திருவேட்களம்

174

சதுரத்தரை நோக்கிய பூவொடு
கதிரோத்திட ஆக்கிய கோளகை
தழையச்சிவ பாக்கிய நாடக அநுபூதி
சரணக்கழல் காட்டியெ ஞணவ
மலமற்றிட வாட்டிய ஆறிரு
சயிலக்குல மீட்டிய தோளொடு முகமாறுங்
கதிர்சுற்றுக நோக்கிய பாதமு
மயிலிற்புற நோக்கிய ஞமென
கருணைக்கடல் காட்டிய கோலமும் அடியேனைக்
கனகத்தினு நோக்கினி தாயடி
யவர்முத்தமி ழாற்புக வேபர
கதிபெற்றிட நோக்கிய பார்வையு மறவேனே

சிதறத்தரை நாற்றிசை பூதர
நேரியப்பறை மூர்க்கர்கள் மாமுடி
சிதறக்கட லார்ப்புற வேயயில் விடுவோனே

சிவபத்தினி கூற்றினை மோதிய
பதசத்தினி முத்தவி நாயகி
செகமிப்படி தோற்றிய பார்வதி யருள்பாலா

விதுரற்கும ராக்கோடி யானையும்
விகடத்துற வாக்கிய மாதவன்
விசையற்குயர் தேர்ப்பரி யூர்பவன் மருகோனே

வெளியெட்டிசை சூர்ப்பொரு தாடிய
கோடிகைக்கோடு கீர்த்தியு லாவிய
விறல்மெய்த்திரு வேட்கள மேவிய பெருமாளே.

நிம்பபுரம்

175

அஞ்சுவித பூத முங்கரண நாலு
மந்திபகல் யாதும் அறியாத
அந்தநடு வாதி யொன்றுமில தான
அந்தவொரு வீடு! பெறுமாறு

மஞ்சு தவழ் சார லஞ்சயில வேடர்
மங்கைதனை நாடி வனமீது
வந்தசர ணார விந்தமது பாட
வண்டமிழ்வி நோத மருள்வாயே

குஞ்சரக லாப வஞ்சியபி ராம
குங்குமப டீர வதிரேகக்
கும்பதன மீது சென்றணையு மார்ப
குன்றுதடு மாற இகல்கோப

வெஞ்சவரு சூர னெஞ்சுபக வீர
வென்றிவடி வேலை விடுவோனே
விம்பமதில் சூழு நிம்பபுர வாண
விண்டலம கீபர் பெருமாளே.

திருநல்லூர்

176

மூல முண்டகனு பூதி மந்திரப
ராப ரஞ்சுடர்கள் மூணு மண்டலஅ
தார சந்திமுக மாறு மிந்த்ரதரு வுந்தளாமேல்
மூது ரம்பலவர் பீட மந்தமுமி
லாத பந்தவொளி யாயி ரங்கிரண
மூணு மிந்துவொளிர் சோதி வின்படிக விந்துநாதம்

ஓல மென்றுபல தாள சந்தமிடு
சேவை கண்டமுதை வாரி யுண்டுலகி
ரேழு கண்டுவிளை யாடி யிந்துகதி ரங்கிசூலம்
ஓடு மந்தகலி காலோ டுங்கநடு
தூணில் தங்கவரி ஞான வண்கயிறு
மீத ணைந்துசத கோடி சந்த்ரவொளி சந்தியாதோ

சூலி யந்தரிக பாலி சங்கரிபு
ராரி யம்பரிகு மாரி யெண்குணசு
வாமி பங்கிசிவ காம சுந்தரியு கந்தசேயே
சூர சங்கரகு மார இந்திரச
காய அன்பருப கார சுந்தரகு
காவெனுஞ்சுருதி ஓலமொன்றநட னங்கொள்வேலா

சீல வெண்பொடியி டாத வெஞ்சமணர்
மாள வெங்கழுவி லேறு மென்றுபொடி
நீறி டுங்கமல பாணி சந்த்ரமுக கந்தவேளே

தேவ ரம்பையமு தீண மங்கைதரு
மான ணைந்தபுய தீர சங்கரதி
யாகர் வந்துறைந லூர மர்ந்துவளர் தம்பிரானே.

சீர்காழி

177

இரத மான தேனூற லதர மான மாமாத
ரேதிரி லாத பூணார முலைமீதே
இனிது போடு மேகாச உடையி னாலு மாலால
விழியி னாலு மாலாகி யநுராக
விரக யாகி யேபாய லிடைவி டாமல் நாடோறு
ம்ருகம தாதி சேரோதி நிழல்மூழ்கி
விளையுமோக மாமாயை கழலுமாறு நாயேனும்
விழல னுய்வி டாதேநி னருள்தாராய்
அரக ராள னாமூடர் திருவெ ணீறி டாமூடர்
அடிகள் பூசி யாமூடர் கரையேற
அறிவு நூல்க லாமூடர் நெறியி லேநி லாமூடர்
அறம் விசாரி யாமூடர் நரகேழிற்
புரள வீழ்வ ரீராறு கரவி நோத சேய்சோதி
புரண பூர ணாகார முருகோனே
புயலு லாவு சேணாடு பரவி நாளு மீடேறு
புகலி மேவி வாழ்தேவர் பெருமாளே.

வைத்தீசுரன் கோயில்

178

மூலா தாரமோ டேற்றி யங்கியை
ஆரு தாரமோ டோட்டி யந்திர
மூலா வாயுவை யேற்று நன்சுழி முனையூடே

மூதா தாரம ரூப்பி லந்தர
நாதா கீதம தார்த்தி டும்பர
மூடே பாலொளி ஆத்து மந்தனை விலகாமல்
மாலா டுனொடு சேர்த்தி தம்பெற
நாலு வேதம சாத்தி ரஞ்சொலும்
வாழ்ஞா னபுரி யேற்றி மந்திர தவிசூடே
மாதா நாதனும் வீற்றி ருந்திடும்
வீடே மூலொளி காட்டி சந்திர
வாகார் தேனமு தூட்டி யென்றனை யுடனுள்வாய்
சூலாள் மாதுமை தூர்த்த சம்பவி
மாதா ராபகல் காத்த மைந்தனை
சூடோ டேர்வினை வாட்டி மைந்தரே னைமையாளுங்
தூயாள் மூவரை நாட்டு மேந்தையர்
வேளூர் வாழ்வினை தீர்த்த சங்கரர்
தோய்சா ரூபரோ டேற்றி ருந்தவ ளருள்பாலா
வேலா ஏழ்கடல் வீட்டி வஞ்சக
மூடார் சூரரை வாட்டி யந்தகன்
வீடு டேவிய காத்தி ரம்பரி மயில்வாழ்வே
வேதா நால்தலை சீக்கோ ளும்படி
கோலா காலம தாட்டு மந்திர
வேலா மால்மக ளார்க்கி ரங்கிய பெருமாளே.

திருக்கடவூர்

179

சூலமென வோடு சர்ப்ப வாயுவைவி டாத டக்கி
தூயவொளி காண முத்தி விதமாகச்
சூழுமிருள் பாவ கத்தை வீழஅழ லூடே ரித்து
சோதிமணி பீட மிட்ட மடமேவி
மேலைவெளி யாயி ரத்து நாலிருப ராப ரத்தின்
மேவியரு ணச லத்தி னுடன்மூழ்கி

வேலுமயில் வாக னப்ர காசமதி லேத ரித்து
வீடுமது வேசி றக்க அருள்தாராய்
ஓலசுர ராழி யெட்டு வாளகிரி மாய வெற்பு
மூடுருவ வேல்தொ டுத்த மயில்வீரா
ஓதுகுற மான்வ னத்தில் மேவியவள் கால்பி டித்து
ளோமெனுப தேச வித்தொ டணைவோனே
காலனோடு மேதி மட்க வூழிபுவி மேல்கி டத்து
காலனிட மேவு சத்தி யருள்பாலா
காலமுதல் வாழ்பு விக்க தாரநகர் கோபு ரத்துள்
கானமயில் மேல்த ரித்த பெருமாளே.

பேரூர்

180

தீராப் பிணிதீர - சீவாத் துமஞான
ஊராட் சியதான - ஓர்வாக் கருள்வாயே
பாரோர்க் கிறைசேயே - பாலாக் கிரிராசே
பேராற் பெரியோனே - பேரூர்ப் பெருமாளே.

திருக்குற்ருலம்

181

வேதத்திற் கேள்வியி லாதது
போதத்திற் காண வொணாதது
வீசத்திற் றூர மிலாதது கதியாளர்
வீதித்துத் தேடரி தானது
ஆதித்தற் காய வொணாதது
வேகத்துத் தீயில் வேகாதது சுடர்கானம்
வாதத்துக் கேயவி யாதது
காதத்திற் பூவிய லானது
வாசத்திற் பேரொளி யானது மதமூறி

மாயத்திற் காய மதாசல
தீதற்குத் தூரம தாகிய
வாழ்வைச்சற் காரம தாஇனி யருள்வாயே
காதத்திற் காயம தாகும
தீதித்தித் தீதிது தீதேன
காதற்பட் டோதியு மேவிடு கதிகாணுர்
காணப்பட் டேகோடு நோய்கோடு
வாதைப்பட் டேமதி தீதக
லாமற்கெட் டேதடு மாறிட அடுவோனே
கோதைப்பித் தாயொரு வேடுவ
ருபைப்பெற் றேவன வேடுவர்
கூடத்துக் கேகுடி யாய்வரு முருகோனே
கோதிற்பத் தாரோடு மாதவ
சீலச்சித் தாதியர் சூழ்தரு
கோலக்குற் ருலமு லாவிய பெருமாளே.

பொது

182

அதல சேட ஞராட அகில மேரு மீதாட
அபின காளி தாஞட அவளோடன்
றதிர வீசி வாதாடும் விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தாஞட மலரில் வேத ஞராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம ஞராட
மயிலு மாடி நீயாடி வரவேணும்
கதைவி டாத தோள்வீம னெதிர்கொள் வாளி யால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாகக்
கதறு காலி போய்மீள விஜய னேறு தேர்மீது
கனக வேத கோடுதி அலைமோதும்

உததி மீதி லேசாயு முலக மூடு சீர்பாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரபுட தேவ மாராஜ
னுளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

183

ஓது வித்தவர் கூலிகொ டாதவர்
மாத வர்க்கதி பாதக மானவர்
ஊச லிற்கன லாயெரி காளையர் மறையோர்கள்
ஊர்த னக்கிட ரேசெயு மேழைகள்
ஆர்த னக்குமு தாசின தாரிகள்
ஓடி யுத்தம ரூதிய நாடின ரீரவோருக்
கேது மித்தனை தானமி டாதவர்
பூத லத்தினி லோரம தானவர்
ஈசர் விஷ்ணுவை சேவைசெய் வோர்தமை யிகழ்வோர்கள்
ஏக சித்ததி யானமி லாதவர்
மோக முற்றிடு போகித மூறினர்
ஈன ரித்தனை பேர்களு மேழ்நர குழல்வாரே
தாத தத்தத தாதத தாதத
தூது துத்துது தூதுது தூதுது
சாச சச்சச சாசச சாசச சசசாச
தாட டட்டட டாடட டாடட
டூடு டுட்டுடு டூடுடு டூடுடு
தாடி டிட்டிடி டீடிடி டீடிடி டிடிடீடி
தீதி தித்திதி தீதிதி தீதிதி
தோதி குத்திகு தோதிகு தோதிகு
சேகு சேக்குகு சேகுகு சேகுகு சேகுசேகு
சேயெ னப்பல ராடிட மாகலை
ஆயு முத்தமர் கூறிடும் வாசக
சேகு சித்திர மாகவி ணுடிய பெருமாளே.

184

உறவின்முறை கதறியழ ஊராரு மாசையற
பறைதிமிலை முழவினிசை யாகாச மீதுமுற
உலகிலுள பலரரிசி வாய்மீதி லேசோரியு மந்தநாளில்

உனதுமுக கருணைமல ரோரா று மாறிருகை
திரள்புயமு மெழில்பணிகோள் வார்காது நீள்விழியு
முபயபத மிசைகுலவு சீரேறு நூபுரமும் அந்தமார்பும்

மறையறைய அமரர்தரு பூமாரி யேசோரிய
மதுவொழுகு தரவில்மணி மீதேமு நூலொளிர
மயிலின்மிசை யழகுபொலி யாளாய்மு ளுரடியர்
வந்துகூட

மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபல முறைமுறையி லேயூதி வாதுசெய்து
மதலையொரு குதலையடி நாயேனை யாளஇங்ன்
வந்திடாயோ

பிறையெயிறு முரணசுரர் பேராது பாரில்விழ
அதிரஎழு புவியுலக மீரேழு மோலமிட
பிடிகளிறி னடல்நிரைகள் பாழாக வேதிசையில்
நின்றநாகம்

பிரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழ
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணநிணமு முணவுசெய்து பேயோடு மாடல்செய
வென்றதீரா

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருட
கரடிபுலி திரிகடிய வாரான கானில்மிகு
குளிர்கணியி னிளமரம தேயாகி நீடியுயர் குன்றுலாவி

கோடியதோரு முயலகனின் மீதாடு வாருடைய
வோருபுறம துறவளரு மாதாபே ருவருள்செய்
குமரகுரு பரஅமரர் வாளுடர் பேணஅருள்
தம்பிரானே.

185

வேடர்செ ழுந்தினை காத்திதண்
மீதிலி ருந்தபி ராட்டிவி
லோசன அம்புக ளாற்செயல் தடுமாறி
மேனித ளர்ந்துரு காப்பரி
தாபமு டன்புன மேற்றிரு
வேளைபு குந்தப ராக்ரம மதுபாடி
நாடறி யும்படி கூப்பிடு
நாவலர் தங்களை யார்ப்பதி
ஞுலுல கங்களு மேத்திய இருதாளில்
நாறுக டம்பணி யாப்பரி
வோடுபு ரந்தப ராக்ரம
நாடஅ ருந்தவம் வாய்ப்பது மோருநாளே
ஆடக மந்தர நீர்க்கசை
யாமலு ரம்பெற நாட்டியோ
ராயிர வெம்பகு வாய்ப்பணி கயிருக
ஆழிக டைந்தமு தாக்கிய
நேகர்பெ ரும்பசி தீர்த்தரு
ளாயனு மன்றெயில் தீப்பட அதிபார
வாடைநெ டுங்கிரி கோட்டிய
வீரனு மெம்பர மாற்றிய
வாழ்வென வஞ்சக ராக்ஷதர் குலமாள
வாசவன் வன்சிறை மீட்டவ
னூரும டங்கலு மீட்டவன்
வானுல குங்குடி யேற்றிய பெருமாளே.

186

முனைய ழிந்தது மேட்டிகு லைந்தது
வயது சென்றது வாய்ப்பலு திர்ந்தது
முதுகு வெஞ்சிலை காட்டிவ ளைந்தது ப்ரபையான
முகமி ழிந்தது நோக்குமி ருண்டது
இருமல் வந்தது தூக்கமொ ழிந்தது
மொழித ளர்ந்தது நாக்குவி ழுந்தது அறிவேபோய்
நினைவ யர்ந்தது நீட்டல்மு டங்கலு
மவச மும்பல ஏக்கமு முந்தின
நெறிம றந்தது மூப்புமு திர்ந்தது பலநோயும்
நிலுவை கொண்டது பாய்க்கிடை கண்டது
சலம லங்களி னூற்றமெ ழுந்தது
நிமிஷ மிங்கினி யாச்சுதென் முன்பினி தருள்வாயே
இனைய இந்திர னேற்றமு மண்டர்கள்
தலமு மங்கிட வோட்டியி ருஞ்சிறை
யிடுமி டும்புள ராக்கதர் தங்களில் வெகுகோடி
எதிர்போ ரும்படி போர்க்குளே திர்ந்தவர்
தசைசி ரங்களு நாற்றிசை சிந்திட
இடிமு ழங்கியவேற்படையொன் றனை யெறிவோனே
தினைவ னங்கிளி காத்தச வுந்தரி
அருகு சென்றடி போற்றிம ணஞ்செய்து
செகம றிந்திட வாழ்க்கைபு ரிந்திடு மிளையோனே
திரிபு ரம்பொடி யாக்கிய சங்கரர்
குமர கந்தப ராக்ரம செந்தமிழ்
தெளிவு கொண்டடி யார்க்குவி ளம்பிய பெருமாளே.

187

சிவஞான புண்டரிக மலர்மாது டன்கலவி
சிவபோக மன்பருக அறியாமற்

சேகமீது முன்றுமல வடிவாயி ருந்துபோது
திகழ்மாதர் பின்சேருமி யழிவேனே

தவமாத வங்கள் பயில் அடியார்க ணங்களோடு
தயவாய்ம கிழ்ந்துதினம் விளையாடத்

தமியேன்ம லங்களிரு வினைநோயி டிந்தலற
ததிநாளும் வந்ததென்முன் வரவேணும்

உவகாரி யன்பர்பணி கலியாணி யெந்தையிட
முறைநாய கங்கவுரி சிவகாமி

ஒளிரானை யின்கரமில் மகிழ்மாது ளங்கனியை
யொருநாள் பகிர்ந்தவுமை யருள்பாலா

அவமேபி றந்தஎனை யிறவாம லன்பர்புகு
மமுதா லயம்பதவி யருள்வோனே

அழகான கம்போலியு மயிலாகு றிஞ்சிமகிழ்
அயிலாபு கழ்ந்தவர்கள் பெருமாளே.

188

மதனேவிய கணையாலிரு
வினையால்புவி கடல்சாரமும்
வடிவாயுடல் நடமாடுக முடியாதேன்

மனமாயையோ டிருகாழ்வினை
யறமூதுடை மலம்வேரற
மகிழ்ஞானக அநுபூதியி னருள்மேவிப்

பதமேவுமு னடியாருடன்
விளையாடுக அடியேன்முனே
பரிபூரண கிருபாகர முடன்ஞான

பரிமேலழ குடனேறிவி
ணவர்பூமழை யடிமேல்விட
பலகோடிவெண் மதிபோலவெ வருவாயே

சதகோடிவெண் மடவார்கட
லெனசாமரை யசையாமுழு
சசிசூரியர் சுடராமென வொருகோடிச்

சடைமாமுடி முனிவோர்சர
ணெனவேதியர் மறையோதுக
சதிநாடக மருள்வேணிய னருள்பாலா

விதியானவ னிளையாளென
துளமேவிய வளிநாயகி
வெகுமாலுற தனமேலணை முருகோனே

வெளியாசையோ டடைபூவணர்
மருகாமணி முதிராடக
வெயில்வீசிய அழகாதமிழ் பெருமாளே.

189

மோது மறலியொரு கோடி வேற்படை
கூடி முடுகியெம தாவி பாழ்த்திட
மோக முடையவெகு மாதர் கூட்டமு மயலாரும்

மூளு மளவில்விசை மேல்வி ழாப்பரி
தாப முடனும்விழி நீர்கொ ளாக்கொடு
மோக வினையில்நெடு நாளின் மூத்தவ ரிளையோர்கள்

ஏது கருமமிவர் சாவெ னுச்சிலர்
கூடி நடவு'மிடு காடெ னுக்கடி
தேழு நரகினிடை வீழ்மெ னுப்பொறி யறுபாவி

ஏழு புவனமிகு வான நாட்டவர்
சூழு முனிவவர்கிளை தாமு மேத்திட
ஈச னருள்குமர வேத மார்த்தெழ வருவாயே

சூது பொருதரும னுடு தோற்றிரு
வாறு வருஷம்வன வாச மேற்றியல்
தோகை யுடனுமெவி ராட ராச்சிய முறைநாளிற்

சூறை நிரைகோடவ ரேக மீட்டேதி
ராளு முரிமைதரு மாறு கேட்டோரு
தூது சேலஅடுவ லாண்மை தாக்குவ னேனமீள

வாது சமர்திருத ரான ராட்டிர
ராஜ குமரர்துரி யோத னுற்பிறர்
மாள நிருபரோடு சேனை தூட்பட வரிசாப

வாகை விஜயனடல் வாசி பூட்டிய
தேரை முடுகுநெடு மால்ப ராக்ரம
மாயன் மருகஅமர் நாடர் பார்த்திப பெருமாளே.

190

வருபவர்க ளோலை கொண்டு
நமனுடைய தூத ரென்று
மடிபிடிய தாக நின்று தொடர்போது

மயலதுபோ லாத வம்பன்
விரகுடைய னுகு மென்று
வசைகளுட னேதொ டர்ந்து அடைவார்கள்

கருவியத னுலே றிந்து
சதைகள்தனை யேய ரிந்து
கரியபுன லேசொ ரிந்து விடவேதான்

கழுமுனையி லேயி ரென்று
விடுமெனும வேளை கண்டு
கடுகிவர வேணு மென்றன் முனமேதான்

பரகிரியு லாவு செந்தி
மலையினுட னேயி டும்பன்
பழநிதனி லேயி ருந்த குமரேசா

பதிகள்பல வாயி ரங்கள்
மலைகள்வெகு கோடி நின்ற
பதமடியர் காண வந்த கதிர்காமா

அரவுபிறை பூளை தும்பை
விலுவமொடு தூர்வை கொன்றை
யணிவர்சடை யாளர் தந்த முருகோனே
அரகரசி வாய சம்பு
குருபரகு மார நம்பு
மடியர்தமை யாள வந்த பெருமாளே.

191

அகரமுத லெனவுரைசெய் ஐம்பந்தொ ரக்ஷரமும்
அகிலகலை களும்வெகுவி தங்கொண்ட தத்துவமும்
அபரிமித சுருதியும டங்குந்த னிப்பொருளை
எப்பொருளு மாய
அறிவையறி பவரறியும் இன்பந்த னைத்துரிய
முடிவைஅடி நடுமுடிவில் துங்கந்த னைச்சிறிய
அணுவையணு வினில்மலமு நெஞ்சுங்கு ணத்ரயமு
மற்றதொரு காலம்
நிகழும்வடி வினைமுடிவி லொன்றென்றி ருப்பதனை
நிறைவுகுறை வொழிவறநி றைந்தெங்கு நிற்பதனை
நிகர்பகர அரியதைவி சும்பின்பு ரத்ரயமெ
ரித்தபெரு மானும்
நிருபகுரு பரகுமர என்றென்று பத்திகொடு
பரவஅரு ளியமவுன மந்த்ரந்த னைப்பழைய
நினதுவழி யடிமையும்வி ளங்கும்ப டிக்கினிது
ணர்த்தியருள் வாயே
தகுதகுகு தகுதகுகு தந்தந்த குத்தகுகு
டிகுடிகுகு டிகுடிகுகு டிண்டிண்டி குக்குடிகு
தகுதகெண கெணசெகுத தந்தந்த ரித்தகுத
தத்ததகு தீதோ
தனதனன தனதனன தந்தந்த னத்ததன
டுடுடுடு டுடுடுடு டுண்டுண்டு டுட்டுடுடு
தரரரர ரிரிரிரிரி யென்றென்றி டக்கையுமு
டுக்கையுமி யாவும்

மோகுமோகென அதிரமுதி ரண்டம்பி ளக்கநிமிர்
அலகைகர ணமிடவுல கெங்கும்ப்ர மிக்கநட
முடுகுபயி ரவர்பவுரி கொண்டின்பு றப்படுக
ளத்திலொரு கோடி
முதுகழுகு கொடிகருட னங்கம்போ ரக்குருதி
நதிபெருக வெகுமுகக வந்தங்கள் நிர்த்தமிட
முரசதிர நிசிசரரை வென்றிந்தி ரற்கரச
ளித்தபெரு மாளே.

192

அடியார்ம னஞ்சலிக்க எவராகி லும்பழிக்க
அபராதம் வந்துகெட்ட பிணிமூடி
அணைவோரும் வந்துசிச்சி யெனநால்வ ருஞ்சிரிக்க
அனலோட மூன்றுசெத்து விடுமாபோற்
கடையேன்ம லங்கள்முற்று மிருநோயு டன்பிடித்த
கலியோடி றந்துசுத்த வெளியாகிக்
களிகூர என்றனுக்கு மயிலேறி வந்துமுத்தி
கதியேற அன்புவைத்து னருள்தாராய்
சடைமீது கங்கைவைத்து விடையேறு மெந்தைசுத்த
தழல்மேனி யன்சிரித்தொர் புரமூணும்
தவிடாக வந்தெதிர்த்த மதனாக முஞ்சிதைத்த
தழல்பார்வை யன்றளித்த குருநாதா
மிடிதீர அண்டருக்கு மயிலேறி வஞ்சர் கோட்டம்
வெளியாக வந்துநிர்த்த மருள்வோனே
மினனூல்ம ருங்குல்பொற்பு முலைமாதி ளங்குறத்தி
மிகுமாலொ டன்புவைத்த பெருமாளே.

193

ஆசைகூர் பத்த னேன்மனோ பத்ம
மானபூ வைத்து நடுவேயன்

பானநூ லிட்டு நாவிலே சித்ர
மாகவேகட்டி யோருஞான
வாசம்வீ சிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி யளிபாட
மாத்ருகா புஷ்ப மாலைகோ லப்ர
வாளபா தத்தி லணிவேனோ
மூசுகா னத்து மீதுவாழ் முத்த
மூரல்வே டிச்சி தனபார
மூழ்குநீ பப்ர தாபமார் பத்த
மூரிவே ழத்தின் மயில்வாழ்வே
வீசுமீ னப்ப யோதிவாய் விட்டு
வேகவே தித்து வருமாசூர்
வீழமோ திப்ப ராரைநா கத்து
வீரவேல் தோட்ட பெருமாளே.

194

ஆராத காத லாகி மாதர்த
மாபாத சூட மீதி லேவிழி
யாலோல னுய்வி கார மாகியி லஞ்சியாலே
ஆசாப சாசு மூடி மேலிட
ஆசார வீன னாகி யேமிக
ஆபாச னாகி யோடி நாளும ழிந்திடாதே
ஈராறு தோளு மாறு மாமுக
மோடாரு நீப வாச மாலையு
மேரூன தோகை நீல வாசியு மன்பினாலே
ஏனோரு மோது மாறு தீதற
நாலுசு பாடி யாடி நாடோறு
வீடேறு மாறு ஞான போதக மன்புரோதோ

வாராகி நீள்க பாலி மாலினி
மாமாயி யாயி தேவி யாமளை
வாசாம கோச ராப ராபரை யிங்குளாயி
வாதாடி மோடி காடு காளுமை
மாஞால லீலி யால போசனி
மாகாளி சூலி வாலை யோகினி யம்பவானி
சூராரி மாபு ராரி கோமளை
தூளாய பூதி பூசு நாரணி
சோணேச லாதி லோக நாயகி தந்தவாழ்வே
தோளாலும் வாளி னாலு மாறிடு
தோலாத வான நாடு சூறைகோள்
சூராரி யேவி சாக னேசுரர் தம்பிரானே.

195

ஆராதன ராடம் பரத்து
மாருதுச வாலம் பனத்து
மாவாகன மாமந் திரத்து மடலாலும்
ஆரூர்தேச மாமண் டபத்தும்
வேதாகம மோதுந் தலத்து
மாமாறெரி தாமிந் தனத்து மருளாதே
நீராளக நீர்மஞ் சனத்த
நீடாரக வேதண்ட மத்த
நீநானற வேறின்றி நிற்க நியமாக
நீவாவென நீயிங் கழைத்து
பாராவர வாநந்த சித்தி
நேரேபர மாநந்த முத்தி தரவேணும்
வீராகர சாமுண்டி சக்ர
பாராகண பூதங் களிக்க
வேதாளச மூகம் பிழைக்க அமராடி

வேதாமுறை யோவென் றரற்ற
ஆகாசக பாலம் பிளக்க
வேர்மாமர மூலந் தறித்து வடவாலும்
வாராகர மேழுங் குடித்து
மாசூரோடு போரம் பறுத்து
வாஞ்சன மேலுந் துணித்த கதிர்வேலா
வாடைர சாளும் படிக்கு
வாவாவென வாவென் றழைத்து
வானோர்பரி தாபந் தவிர்த்த பெருமாளே.

196

ஆனாத ஞான புத்தி யைக்கோ டுத்ததும்
ஆராயு நூல்க ளிற்க ருத்த ளித்ததும்
ஆதேச வாழ்வி னிற்ப்ர மித்தி ளைத்துயி ரழியாதே
ஆசாப யோதி யைக்க டக்க விட்டதும்
வாசாம கோச ரத்தி ருத்து வித்ததும்
ஆபாத னேன்மி கப்ர சித்தி பெற்றினி துலகேழும்
யானாக நாம அற்பு தத்தி ருப்புகழ்
தேனூற வோதி யெத்தி சைப்பு றத்தினும்
ஏடேவு ராஜ தத்தி னைப்ப ணித்ததும் இடராழி
ஏறாத மாம லத்ர யக்கு ணத்ரய
நானாவி கார புற்பு தப்பி றப்பற
ஏதேம மாயெ னக்க நுக்ர கித்ததும் மறவேனே
மாநாக நாண்வ லுப்பு றத்து வக்கியோர்
மாமேரு பூத ரத்த னுப்பி டித்தொரு
மாலாய வாளி யைத்தொ டுத்த ரக்கரி லொருமூவர்
மாளாது பாத கப்பு ரத்ர யத்தவர்
தூளாக வேமு தற்சி ரித்த வித்தகர்
வாழ்வேவ லாரி பெற்றெ டுத்த கற்பக வனமேவும்

தேநாய காள னத்து தித்த உத்தம
வாஞடர் வாழ விக்ர மத்தி ருக்கழல்
சேராத சூர னைத்து ணித்த டக்கிய வரைமோதிச்

சேருய சோரி புக்க ளக்கர் திட்டேழ
மாருநி சாச ரக்கு லத்தை யிப்படி
சீராவி ஞல றுத்த றுத்தோ துக்கிய பெருமாளே.

197

இரவோ டும்பக லேமா ருதே
அநுதி னந்துய ரோயா தேயே
யெரியு முந்தியி ஞலே மாலே பெரிதாகி

இரைகோ ளும்படி யூடே பாடே
மிகுதி கொண்டோழி யாதே வாதே
யிடைக ளின்சில நாளே போயே வயதாகி

நரைக ளும்பெரி தாயே போயே
கிழவ னென்ருரு பேரே சார்வே
நடைக ளும்பல தாறே மாறே விழலாகி

நயன முந்தெரி யாதே போஞல்
விடிவ தென்றடி யேனே தானே
நடன குஞ்சித வீடே கூடா தழிவேனே

திருந டம்புரி தாளீ தூளீ
மகர குண்டலி மாரீ சூரீ
திரிபு ரந்தழ லேவீ சார்வீ யபிராமி

சிவனி டந்தரி நீலீ சூலீ
கவுரி பஞ்சவி யாயீ மாயீ
சிவைபெ ணம்பிகை வாலா சீலா அருள்பாலா

அரவ கிண்கிணி வீரா தீரா
கிரிபு ரந்தோளிர் நாதா பாதா
அழகி ளங்குற மாஞர் தேஞர் மணவாளா

அரிய ரன்பிர மாவோ டேமூ
வகைய ரிந்திர கோமா னீள்வா
னமரர் கந்தரு வாஞே ரேஞேர் பெருமாளே.

198

இருநோய்ம லத்தை சிவ வொளியால்மி ரட்டியெனை
இனிதாவ ழைத்தெனது முடிமேலே
இணைதாள ளித்துனது மயில்மேலி ருத்தியொளி
ரியல்வேல ளித்துமகி ழிருவோரும்
ஒருவாகெ னக்கயிலை யிறையோன ளித்தருளு
மொளிர்வேத கற்பகந லிளையோனே
ஒளிர்மாம றைத்தொகுதி சுரர்பார்து தித்தருள
உபதேசி கப்பதமு மருள்வாயே
கருநோய றுத்தெனது மிடிதூள்ப டுத்திவிடு
கரிமாமு கக்கடவு ளடியார்கள்
கருதாவ கைக்குவர மருள்ஞான தொப்பைமகிழ்
கருணாக டப்பமல ரணிவோனே
திருமால ளித்தருளு மொருஞான பத்தினியை
திகழ்மார்பு றத்தழுவு மயில்வேலா
சிலைதூளெ ழுப்பிகவ டவுணரை வெட்டிசுரர்
சிறைமீள விட்டபுகழ் பெருமாளே.

199

உமையெனு மயில்பெற்ற மயில்வா கனனே
வனிதைய ரறுவர்க்கு மொருபா லகனே
உளமுரு கியபத்த ருறவே மறவே னெனவோதி
உருகுத லொருசற்று மறியேன் வறியேன்
இருவினை யிடையிட்ட கொடியே னடியேன்
உணர்விலி பெறமுத்தி தருவாய் துகிர்வாய் மடமாதர்

அமையென வளர்சித்ர இருதோள் தழுவா
அமுதென மதுரித்த கனிவா யணுகா
அமளியி லணைவுற்ற அநுரா கமதோ ததிமூழ்கி

அநவரதமுமுற்ற மணிமா முலைதோய்
கலவியி னலமற்ப சுகமா கினுமா
அநுபவ மிதுசற்றும் விடவோ இயலா தியலாதே

தமனிய குலசக்ர கிரியோ கடலோ
விடமென முடிவைத்த முதுபே ரிருளோ
தனுவென முனையிட்ட கோலமு விலைவேல்
கொடுபார்வை

தழலெழ வருமுக்ர எமபா தகனே
யுகஇறு தியில்மிக்க வடவா னலமோ
தனியிவ னெனமிக்க பிசிதா சனபூ பதியாகி

இமையவ ரனைவர்க்கும் அறையோ அறையோ
அரியயன் முழுதுக்கும் அறையோ அறையோ
எழுபுவி யுலகுக்கும் அறையோ அறையோ
போரவாரும்

எனவரும் ஒருதுட்டன் முறையோ முறையோ
வடகுல கிரியெட்டும் அபிதா அபிதா
எனவொரு அயில்தொட்ட அரசே யிமையோர்
பெருமாளே.

200

உரைதரு பரசம யங்க ளோதுவ
துருவென அருவென வொன்றி லாததோ
ரொளியென வெளியென வும்பராமென இம்பராநின்

றுலகுகள் நிலைபெறு தம்ப மாமென
வுரைசெய அதுபொருள் கண்டு மோனமோ
டுணர்வுற வுணர்வொடி ருந்த நாளும ழிந்திடாதே

பரகதி பெறுவதோ ழிந்தி டார்வன
பரிசன தெரிசன கந்த வோசைகள்
பலநல விதமுள துன்ப மாகிம யங்கிடாதே
பரிபுர பதமுள வஞ்ச மாதர்கள்
பலபல விதமுள துன்ப சாகர
படுகுழி யிடைவிழு பஞ்சபாதக னென்றுதீர்வேன்

அரகர சிவசுத கந்த னேநின
தபயம பயமென நின்று வானவ
ரலறிட வொழிகினி யஞ்சி டாதென அஞ்சல்கூறி
அடல்தரு நிருதர நந்த வாகினி
யமபுர மடையஅ டர்ந்து போர்புரி
அசுரன தகலமி டந்து போகவ கிர்ந்தவேகம்

விரிகடல் துகளெழ வென்ற வேலவ
மரகத கலபசி கண்டி வாகன
விரகுள சரவண முந்தை நான்மறை யந்தமோதும்
விரை தரு மலரிலி ருநத வேதனும்
விடவர வமளிது யின்ற மாயனும்
விமலைகொள் சடையர னும்ப ராவிய தம்பிரானே.

201

எதிரொருவ ரிலையுலகி லெனஅலகு சிலுகுவிரு
திட்டுக்ரி யைக்கேயெ முந்துபாரின்
இடையுழல்வ சுழலுவன சமயவித சகலகலை
யெட்டெட்டு மெட்டாத மந்த்ரவாளால்
விதிவழியி னுயிர்கவர வருகொடிய யமபடரை
வெட்டித் துணித்தர்ண்மை கொண்டுநீபம்
விளவினிள இலைதளவு குவளைகமழ் பவளநிற
வெட்சித் திருத்தாள்வ ணங்குவேனோ

தீதிபுதல்வ ரோடுபொருது குருதிநதி முழுகியொளிர்
சேக்கச் சேவத்தேறு செங்கைவேலா
சிகரகிரி தகரவிடு முருவமர கதகலப
சித்ரக் ககத்தேறு மெம்பிரானே

முதியபதி னொருவிடையர் முடுகுவன பரிககன
முட்டச் செலுத்தாறி ரண்டுதேரர்
மொழியுமிரு அசுவினிக ளிருசதுவி தவசுவெனு
முப்பத்து முத்தேவர் தம்பிரானே.

202

எழுபிறவி நீர்நிலத்தி லிருவினைகள் வேர்பிடித்து
இடர்முளைக ளேமுளைத்து வளர்மாயை
எனுமுலவை யேபணைத்து விரககுழை யேகுழைத்து
இருளிலைக ளேதழைத்து மிகநீளும்

இழவுநனை யேபிடித்து மரணபழ மேபழுத்து
இடியுமுடல் மாமரத்தி னருநீழல்
இசையில்விழ ஆதபத்தி யழியுமுன மேயெனக்கு
இனியதொரு போதகத்தை யருள்வாயே

வழுவுநெறி பேசுதக்க னிசையுமக சாலையுற்ற
மதியிரவி தேவர்வஜ்ர படையாளி
மலர்கமல யோனிசக்ர வளைமருவு பாணிவிக்ர
மறையஎதிர் வீரவுக்ரர் புதல்வோனே

அழகியக லாபகற்றை விகடமயி லேறியெட்டு
அசலமிசை வாகையிட்டு வரும்வேலா
அடலசுரர் சேனைகெட்டு முறியமிக மோதிவெட்டி
அமரர்சிறை மீளவிட்ட பெருமாளே.

203

கோந்து வார்குர வடியினு மடியவர்
சிந்தை வாரிச நடுவினு நெறிபல
கொண்ட வேதநன் முடியினு மருவிய குருநாதா

கோங்கி லேர்தரு பழநியி லறுமுக
சேந்தில் காவல தணிகையி லிணையிலி
கோந்து காவென மொழிதர வருசம யவிரோத

தந்த்ர வாதிகள் பெறவரி யதுபிறர்
சந்தி யாதது தனதென வருமொரு
சம்ப்ர தாயமு மிதுவென வுரைசெய்து விரைநீபச்

சஞ்ச ரீகரி கரமுரல் தமனிய
கிண்கி ணீமுக விதபத யுகமலர்
தந்த பேரருள் கனவிலு நனவிலு மறவேனே

சிந்து வாரமு மிதழியு மிளநவ
சந்த்ர ரேகையு மரவமு மணிதரு
செஞ்ச டாதரர் திருமக வெனவரு முருகோனே

செண்ப காடவி யினுமித ணினுமுயர்
சாந்த ணுடவி யினுமுறை குறமகள்
செம்பொ னூபுர கமலமும் வளையணி புதுவேயும்

இந்து வாண்முக வனசமு ம்ருகமத
குங்கு மாசல யுகளமு மதுரித
இந்த ளாம்ருத வசனமு முறுவலு மபிராம

இந்த்ர கோபமு மரகத வடிவமு
மிந்த்ர சாபமு மிருகுழை யொடுபொரு
மிந்த்ர நீலமு மடலிடை யெழுதிய பெருமாளே.

204

நெடிய வடகுவ டிடியவு மெழுகிரி
நெறுநெ றெனநெரி யவுமுது பணிபதி
நிபிட முடிகிழி யவுநில மதிரவும் விளையாடும்

நிகரில் கலபியும் ரவியுமிழ் துவசமும்
நினது கருணையு முறைதரு பெருமையும்
நிறமு மிளமையும் வளமையு மிருசர ணமுநீப

முடியு மபிநவ வனசரர் கொடியிடை
தளர வளர்வன ம்ருகமத பரிமள
முகுள புளகித தனகிரி வழுவிய திரடோளும்
மோகுமோ கேனமது கரமுரல் குரவணி
முருக னறுமுக னெனவரு வனபெயர்
முழுது மியல்கொடு பழுதற மொழிவது மொருநாளே

கொடிய படுகொலை நிசிசர ருரமொடு
குமுகு மெனவிசை யுடனிசை பெறமிகு
குருதி நதிவித சதியொடு குதிகொள விதியோடக்
குமுறு கடல்குடல் கிழிபட வடுமர
மொளுமொ ளெனஅடி யொடலறி விழவுயர்
குருகு பெயரிய வரைதொளை படவிடு சுடர்வேலா

இடியு முனைமலி குலிசமு மிலகிடு
கவள தவளவி கடதட கனகட
இபமு மிரணிய தரணியு முடையதொர் தனியானைக்
கிறைவ குருபர சரவண வெகுமுக
ககன புனிதையும் வனிதைய ரறுவரும்
எமது மகவென வுமைதரு மிமையவர் பெருமாளே.

205

பகிர நினைவொரு தினையள விலுமிலி
கருணை யிலியுன தருணை யொ டுதணியல்
பழநி மலைகுரு மலைபணி மலைபல மலைபாடிப்
பரவு மிடறிலி படிறுகொ டிடறுசொல்
பழகி யழகிலி குலமிலி நலமிலி
பதிமை யிலிபவு ஷதுமிலி மகிமையி லிகுலாலன்
திகிரி வருமொரு செலவினி லெழுபது
செலவு வருமன பவுரிகொ டலமரு
திருக னுருகுத லழுகுதல் தொழுகுதல் நினையாத

திமிர னியல்பிலி யருளிலி பொருளிலி
திருடன் மதியிலி கதியிலி விதியிலி
செயலி லுணர்விலி சிவபத மடைவது மொருநாளே

மகர சலநிதி முறையிட நிசிசரன்
மகுட மொருபது மிருபது திரள்புய
வரையு மறவொரு கணைதெரி புயல்குரு ந்ருபதூதன்

மடுவில் மதகரி முதலென வுதவிய
வரத னிருதிறல் மருதொடு பொருதவன்
மதலை குதலையின் மறைமொழி யிகழிர ணியனுகம்

உகிரி னுதிகொடு வகிருமொ ரடலரி
திகிரி தரமர கதகிரி யெரியுமிழ்
உரக சுடிகையில் நடநவி லரிதிரு மருகோனே

உருகு மடியவ ரிருவினை யிருள்பொரு
முதய தினகர இமகரன் வலம்வரும்
உலகமுழுதொருநொடியினில்வலம்வரு பெருமாளே.

206

பழுதற வோதிக் கடந்து பகைவினை தீரத் துறந்து
பலபல யோகத் திருந்து மதராசன்

பரிமள பாணத் தயர்ந்து பனிமட லூர்தற் கிசைந்து
பரிதவி யாமெத்த நொந்து மயல்கூர

அழுதழு தாசைப் படுங்க ணபிநய மாதர்க் கிரங்கி
யவர்விழி பாணத்து நெஞ்ச மறைபோய்நின்

றழிவது யான்முற் பயந்த விதிவச மோமற்றை யுன்ற
னருள்வச மோஇப்ர மந்தெ ரிகிலேனே

எழுதரு வேதத்து மன்றி முழுதினு மாய்நிற்கு மெந்தை
யெனவொரு ஞானக் குருந்த ருளமேவும்

இருவுரு வாகித் துலங்கி யொருகன தூணிற் பிறந்து
இரணியன் மார்பைப் பிளந்த தனியாண்மை

பொழுதிசை யாவிக்ர மன்தன் மருகபு ராரிக்கு மைந்த
புளகப டீரக்கு ரும்பை யுடன்மேவும்
புயல்கரி வாழச் சிலம்பின் வனசர மானுக் குகந்து
புனமிசை யோடிப்பு குந்த பெருமாளே.

207

புகரில் சேவல தந்துர சங்க்ரம
நிருதர் கோபக்ர வுஞ்சநெ டுங்கிரி
பொருத சேவக குன்றவர் பெண்கொடி மணவாள
புனித பூசுர ருஞ்சுர ரும்பணி
புயச பூதர என்றிரு கண்புனல்
பொழிய மீமிசை யன்புது ளும்பிய மனமாகி
அகில பூதவு டம்புமு டம்பினில்
மருவு மாருயி ருங்கர ணங்களு
மவிழ யானுமி ழந்த இடந்தனி லுணர்வாலே
அகில வாதிக ளுஞ்சம யங்களும்
அடைய ஆமென அன்றென நின்றதை
யறிவி லேனறி யும்படி யின்றருள் புரிவாயே
மகர கேதன முந்திகழ் செந்தமிழ்
மலய மாருத மும்பல வெம்பரி
மளசி லீமுக மும்பல வெம்பரி வெறியாடும்
மதுக ராரம்வி குஞ்சணி யுங்கர
மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராஜனை வெந்துவி ழும்படி முனிபால
முகிழ்வி லோசன ரஞ்சிறு திங்களு
முதுப கீரதி யும்புனை யுஞ்சடை
முடியர் வேதமு நின்றும ணங்கமழ் அபிராமி
முகர நூபுர பங்கய சங்கரி
கிரிகு மாரித்ரி யம்பகி தந்தருள்
முருக னேசுர குஞ்சரி ரஞ்சித பெருமாளே.

208

புவிக்குன் பாத மதைநினை
பவர்க்குங் கால தரிசனை
புலக்கண் கூடு டிதுதனை அறியாதே
புரட்டும் பாத சமயிகள்
நெறிக்கண் பூது படிறரை
புழுக்கண் பாவ மதுகொளல் பிழையாதே
கவிக்கொண் டாடு புகழினை
படிக்கும் பாடு திறமிலி
களைக்கும் பாவ சுழல்படு மடிநாயேன்
கலக்குண் டாகு புவிதனி
லெனக்குண் டாகு பணிவிடை
கணக்குண் டாதல் திருவுள மறியாதோ
சிவத்தின் சாமி மயில்மிசை
நடிக்குஞ் சாமி யெமதுளே
சிறக்குஞ் சாமி சொருபமி தொளிகாணச்
செழிக்குஞ் சாமி பிறவியை
யொழிக்குஞ் சாமி பவமதை
தெறிக்குஞ் சாமி முநிவர்க ளிடமேவுந்
தவத்தின் சாமி புரிபிழை
பொறுக்குஞ் சாமி குடிநிலை
தரிக்குஞ் சாமி யசுரர்கள் பொடியாகச்
சதைக்குஞ் சாமி யெமைபணி
விதிக்குஞ் சாமி சரவண
தகப்பன் சாமி யெனவரு பெருமாளே.

209

போத நிர்க்குண போதா நமோநம
நாத நிஷ்கள நாதா நமோநம
பூர ணக்கலை சாரா நமோநம பஞ்சபாண

பூபன் மைத்துன பூபா நமோநம
நீப புஷ்பக தாளா நமோநம
போக சொர்க்கபு பாலா நமோநம சங்கமேறும்
மாத மிழ்த்ரய சேயே நமோநம
வேத னத்ரய வேளே நமோநம
வாழ்ஜ கத்ரய வாழ்வே நமோநம என்றுபாத
வாரி சத்தில்வி ழாதே மகோததி
யேழ்பி றப்பினில் மூழ்கா மனோபவ
மாயை யிற்சுழி யூடே விடாதுக லங்கலாமோ
கீத நிர்த்தவே தாளா டவீநட
நாத புத்திர பாகீ ரதீகிரு
பாச முத்திர ஜீமுத வாகனர் தந்திபாகா
கேக யப்பிர தாபா முலாதிப
மாலி கைக்கும ரேசா விசாகக்ரு
பாலு வித்ரும காரா ஷடானன புண்டரீகா
வேத வித்தக வேதா விநோதகி
ராத லக்ஷ்மிகி ரீடா மகாசல
வீர விக்ரம பாரா வதானவ கண்டசூர
வீர நிட்டுர வீராதி காரண
தீர நிர்ப்பய தீராபி ராமவி
நாய கப்ரிய வேலாயு தாசுரர் தம்பிரானே.

210

மதிதனை யிலாத பாவி குருநெறி யிலாத கோபி
மனநிலை நிலாத பேயன் அவமாயை
வகையது விடாத பேடி தவநினை விலாத மோடி
வரும்வகை யிதேது காய மெனநாடும்
விதியிலி போலாத லோபி சபைதனில் வராத கோழை
வினையிகல் விடாத கூள னெனைநீயும்
மிகுபர மதான ஞான நெறிதனை விசார மாக
மிகுமுன துருப தான மருள்வாயே

எதிர்வரு முதார சூர னிருபிள வதாக வேலை
யியலோடு கடாவு தீர குமரேசா
இனியசொல் மருத சீலர் கருவழி வராமல் நாளும்
இளமையது தானு மாக நினைவோனே
நதியுட னராவு பூணு பரமகுரு நாத னென
நடைபெறு கடூர மான மயில்வீரா
நகைமுக விநோத ஞான குறமினுட னேகு லாவு
நவமணி யுலாவு மார்ப பெருமாளே.

211

மாண்டாரெ லும்பணி யுஞ்சடை
யாண்டாரி றைஞ்ச மொழிந்ததை
வான்பூத லம்பவ னங்கனல் புனலான
வான்பூத முங்கர ணங்களு
நான்போயொ டுங்கஅ டங்கலு
மாய்ந்தால்வி ளங்கும தொன்றினை யருளாயேல்
வேண்டாமை யொன்றைய டைந்துள
மீண்டாறி நின்சர ணங்களில்
வீழ்ந்தாவல் கொண்டுரு கன்பினை யுடையேனாய்
வேந்தாக டம்புபு னைந்தருள்
சேந்தாச ரண்சர ணென்பது
வீண்போம தொன்றல என்பதை யுணராதோ
ஆண்டார்த லங்கள ளந்திட
நீண்டார்மு குந்தர்த டந்தனில்
ஆண்டாவி துஞ்சிய தென்றுமு தலைவாயுற்
ருங்கோர்சி லம்புபு லம்பிட
ஞான்றூது துங்கச லஞ்சலம்
ஆர்பூமு ழங்கிய டங்கும ளவில்நேசம்
பூண்டாழி கொண்டுவ னங்களி
லேய்ந்தாள வென்றுவே றுந்தனி
போந்தோல மென்றுத வம்புயல் மருகோனே

பூம்பாளை யெங்கும ணங்கமழ்
தேங்காவில் நின்றதோர் குன்றவர்
பூந்தோகை கோங்கைவி ரும்பிய பெருமாளே.

212

முருகம யூரச் சேவக சரவண ஏனற் பூதரி
முகுளப டீரக் கோமள முலைமீதே
முழுகிய காதற் காமுக பதிபசு பாசத் தீர்வினை
முதியபு ராரிக் கோதிய குருவேயென்
றுருகியு மாடிப் பாடியு மிருகழல் நாடிச் சூடியு
முணர்வினொ டேடிக் கூடியும் வழிபாடுற்
றுலகினொ ராசைப் பாடற நிலைபெறு ஞானத் தாலினி
யுனதடி யாரைச் சேர்வது மொருநாளே
மருகனெ னுமற் சூழ்கொலை கருதிய மாமப் பாதகன்
வரவிடு மாயப் பேய்முலை பருகாமேல்
வருமத யானைக் கோடவை திருகிவி ளாவிற் காய்கனி
மதுகையில் வீழச் சாடிய சதமாபுட்
பொருதிரு கோரப் பாரிய மருதிடை போயப் போதொரு
சகடுதை யாமற் போர்செய்து விளையாடிப்
பொதுவியர் சேரிக் கேவளர் புயல்மரு காவஜ் ராயுத
புரமதில் மாபுத் தேளிர்கள் பெருமாளே.

213

மனைமக்கள் சுற்ற மெனுமாயா
வலையைக்க டக்க அறியாதே
வினையிற்செ ருக்கி யடிநாயேன்
விழலுக்கி றைத்து விடலாமோ
சுனையைக்க லக்கி விளையாடு
சொருபக்கு றத்தி மணவாளா
தினநற்ச ரித்ர முளதேவர்
சிறைவெட்டி விட்ட பெருமாளே.

214

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

215

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

216

பொன்னை விரும்பிய போதுமாதர்
புன்மை விரும்பியே தடுமாறும்
என்னை விரும்பிநீ யொருகால்நின்
எண்ணி விரும்பவு மருள்வாயே
மின்னை விரும்பிய சடையாளர்
மெய்யின் விரும்பிய குருநாதா
அன்னை விரும்பிய குறமானை
அண்மி விரும்பிய பெருமாளே.

217

நீலங்கோள் மேகத்தின் மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே
வேல்கொண்டு வேலைப்பண் டேறிவோனே
வீரங்கோள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.

218

காதி மோதி வாதாடு நூல்கற் றிடுவோருங்
காசு தேடி யீயாமல் வாழப் பெறுவோரும்
மாது பாகர் வாழ்வே யெனாநேக் குருகாரும்
மாறி லாத மாகால னூர்புக் கலைவாரே
நாத ரூப மாநாத ராகத் துறைவோனே
நாக லோக மீரேழு பாருக் குரியோனே
தீதிலாத வேல்வீர சேவற் கொடியோனே
தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளே.

219

நாலி ரண்டித ழாலே கோலிய
ஞால முண்டக மேலே தானிள
ஞாயி றென்றுறு கோலா காலனு மதின்மேலே
ஞால முண்டபி ராணா தாரனும்
யோக மந்திர மூலா தாரனு
நாடி நின்றப்ர பாவா காரனு நடுவாக
மேலி ருந்தகி ரீடா பீடமு
நூல றிந்தம ணீமா மாடமு
மேத குஞ்ப்ரபை கோடா கோடியு மிடமாக

வீசி நின்றுள தூபா தீபவி
சால மண்டப மீதே யேறிய
வீர பண்டித வீராசாரிய வினைதீராய்

ஆல கந்தரி மோடா மோடிகு
மாரி பிங்கலை நாரு தேசிய
மோகி மங்கலை லோகா லோகியே யுயிர்பாலும்

ஆன சம்ப்ரமி மாதா மாதவி
ஆதி யம்பிகை ஞாதா வானவ
ராட மன்றினி லாடா நாடிய அபிராமி

கால சங்கரி சீலா சீலித்ரி
சூலி மந்த்ரசு பாஷா பாஷணி
காள கண்டிக பாலீ மாலினி கலியாணி

காம தந்திர லீலா லோகினி
வாம தந்திர நூலாய் வாள்சிவ
காம சுந்தரி வாழ்வே தேவர்கள் பெருமாளே.

220

குகையில்நவ நாதருஞ் சிறந்த
முகைவனச சாதனுந் தயங்கு
குணமுமசு ரேசருந் தரங்க முரல்வேதக்

குரகதபு ராரியும் ப்ரசண்ட
மரகதமு ராரியுஞ் செயங்கொள்
குலிசகைவ லாரியுங் கொடுங்க ணறநூலும்

அகலிய புராணமும் ப்ரபஞ்ச
சகலகலை நூல்களும் பரந்த
அருமறைய நேகமுங் குவிந்தும் அறியாத

அறிவுமறி யாமையுங் கடந்த
அறிவு திருமேனியென் றுணர்ந்துன்
அருணசர ணாரவிந் தமென்று அடைவேனோ

பகைகொள் துரி யோதனன் பிறந்து
படைபொருத பாரதந் தெரிந்து
பரியதொரு கோடுகொண் டுசண்ட வரைமீதே
பழுதறவி யாசனன் றியம்ப
எழுதியவி நாயகன் சிவந்த
பவளமத யானைபின் புவந்த முருகோனே
மிகுதமர சாகரங் கலங்க
எழுசிகர பூதரங் குலுங்க
விபரிதநி சாசரன் தியங்க அமராடி
விபுதர்குல வேழமங் கைதுங்க
பரிமளப டீரகும் பவிம்ப
ம்ருகமதப யோதரம் புணர்ந்த பெருமாளே.

221

அகல நீளம் யாதாலு மொருவ ராலு மாராய
அரிய மோன மேகோயி லெனமேவி
அசைய வேக்ரி யாபீட மிசைபு காம காஞான
அறிவி ஞூத ராமோத மலர்தூவி
சகல வேத ஞூதீத சகல வாச காதீத
சகல மாக்ரி யாதீத சிவரூப
சகல சாத காதீத சகல வாச ஞூதீத
தனுவை நாடி மாபூசை புரிவேனோ
விகட தார சூதான நிகள பாத போதூள
விரக ராக போதார சுரர்கால
விபுத மாலி காநீல முகப டாக மாயூர
விமல வ்யாப காசீல கவிநோத
ககன கூட பாடீர தவள சோபி தாளான
கவன பூத ராரூட சதகோடி
களப காம வீர்வீசு கரமு கார வேல்வீர
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

222

அடைப டாது நாடோறும் இடைவி டாது போம்வாயு
அடைய மீளில் வீடாகு மெனநாடி
அருள்பெ ருவ ஞசார கரும யோகி யாகாமல்
அவனி மீதி லோயாது தடுமாறும்
உடலம் வேறு யான்வேறு கரணம் வேறு வேருக
உதறி வாச காதீத அடியூடே
உருகி ஆரி யாசார பரமயோகி யாமாறுன்
உபய பாத ராசீக மருள்வாயே
வடப ராரை மாமேரு கிரியே டாந டாமோது
மகர வாரி யோரேழு மமுதாக
மகுட வாள ராநோவ மதிய நோவ வாரீச
வனிதை மேவு தோளாயி ரமுநோவக்
கடையு மாதி கோபாலன் மருக சூலி காபாலி
புதல்வ கான வேல்வேடர் கோடிகோவே
கனக லோக பூபால சகல லோக ஆதார
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

223

அமல வாயு வோடாத கமல நாபி மேல்மூல
அமுத பான மேமூல அனல்மூள
அசைவு ருது பேராத விதமு மேவி யோவாது
அரிச தான சோபான மதனுலே
எமனை மோதி யாகாச கமன மாம னேபாவ
மெளிது சால மேலாக வுரையாடும்
எனதி யானும் வேருகி எவரும் யாதும் யானுகும்
இதய பாவ னுதீத மருள்வாயே
விமலை தோடி மீதோடு யமுனை போல வோரேழு
விபுத மேக மேபோல வுலகேழும்

விரிவு காணு மாமாயன் முடிய நீளு மாபோல
வெகுவி தாமு காகாய பதமோடிக்
கமல யோனி வீடான ககன கோள மீதோடு
கலப நீல மாயூர இளையோனே
கருணை மேக மேதூய கருணை வாரி யேயீறில்
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

224

சுருதி யூடு கேளாது சரியை யாளர் காணாது
துரிய மீது சாராது எவராலுந்
தொடரொ ணாது மாமாயை யிடைபு காது ஆனுத
சுகம கோத தீயாகி யொழியாது
பருதி காயில் வாடாது வடவை மூளில் வேகாது
பவனம் வீசில் வீழாது சலியாது
பரவை சூழி லாழாது படைகள் மோதில் மாயாது
பரம ஞான வீடேது புகல்வாயே
நிருதர் பூமி பாழாக மகர பூமி தீமூள
நிபிட தாரு காபூமி குடியேற
நிகர பார நீகார சிகர மீது வேலேவு
நிருப வேத ஆசாரி யனுமாலும்
கருது மாக மாசாரி கனக கார்மு காசாரி
ககன சாரி பூசாரி வெகுசாரி
கயிலை நாட காசாரி சகல சாரி வாழ்வான
கருணை மேரு வேதேவர் பெருமாளே.

225

நீருநில மண்டாத தாமரைப டர்ந்தோடி
நீளமக லஞ்சோதி வடிவான
நேசமல ரும்பூவை மாதின்மண மும்போல
நேர்மருவி யுண்காத லுடன்மேவிச்

சூரியனு டன்சோம னீழலிவை யண்டாத
சோதிமரு வும்பூமி யவையூடே
தோகைமயி லின்பாக ஞமெனம கிழ்ந்தாட
சோதிஅயி லுந்தாரு மருள்வாயே
வாரியகி லங்கூச ஆயிரப ணஞ்சேடன்
வாய்விடவோ டெண்பாலு முடுபோல
வார்மணியு திர்ந்தோட வேகவினி றைந்தாட
மாமயில்வி டுஞ்சேவல் கொடியோனே
ஆரியன வன்தாதை தேடியின மும்பாடு
மாடலரு ணஞ்சோதி யருள்பாலா
ஆனைமுக வன்தேடி யோடியெய ணங்காத
லாசைமரு வுஞ்சோதி பெருமாளே.

226

பாணிக்குட் படாது சாதகர் காணச்சற் றேணுது வாதிகள்
பாஷிக்கத் தகாது பாதக பஞ்சபூத
பாசத்திற் படாது வேறொரு பாயத்திற் புகாது பாவனை
பாவிக்கப் பெருது வாதனை நெஞ்சமான
ஏணிக்கெட் டோணுது மீதுயர் சேணுக்குச்சமான நூல்வழி
யேறிப்பற் றேணுது நாடினர் தங்களாலும்
ஏதுச்சேப்போணுததோர்போருள்சேரத்துக்கமாமகோததி
யேறச்சேச் சைநாறு தானேவ ணங்குவேனே
ஆணிப்போற்ப்ரதாபமேருவைவேலிட்டுக்கடாவிவாசவன்
ஆபத்தைக் கெடாநி சாசரர் தம்ப்ரகாசம்
ஆழிச்சத் ரசாயை நீழலி லாதித்தப் ப்ரகாச நேர்தர
ஆழிச்சக் ரவாள மாள்தரும் எம்பிரானே

மாணிக்கப் ப்ரவாள நீலம தாணிப்போற் கிராதை நூபுர
வாசப்பத் மபாத சேகர சம்புவேதா
வாசிக்கப் படாத வாசகம் ஈசர்க்குச் சுவாமி யாய்முதல்
வாசிப்பித் ததேசி காசுரர் தம்பிரானே.

227

சூதினுண வாசைதனி லேசுழலு மீனதேன
தூசுவழ கானவடி வதனாலே
சூதமுட னேருமென மாதர்நசை தேடுபொரு
ளாசைதமி லேசுழல வருகாலன்

ஆதிவிதி யோடுபிற ழாதவகை தேடியென
தாவிதனை யேகுறுகி வருபோது
ஆதிமுரு காதிமுரு காதிமுரு காஎனவு
மாதிமுரு காநினைவு தருவாயே

ஓதமுகி லாடுகிரி யேறுபட வாழசுரர்
ஓலமிட வேயயில்கொ டமராடி
ஓநமசி வாயகுரு பாதமதி லேபணியும்
யோகமயி லாவமலை மகிழ்பாலா

நாதரகு ராம அரி மாயன்மரு காபுவன
நாடுமடி யார்கள்மன துறைவோனே
ஞானசுர வானைகண வாமுருக னேயமரர்
நாடுபெற வாழவருள் பெருமாளே.

228

விழையுமனி தரையுமுநி வரையுமவ ருயிர்துணிய
வெட்டிப் பிளந்துளம் பிட்டுப பறிந்திடுஞ்
சேங்கண்வேலும்

விரையளக முகிலுமிள நகையும்ருக மதகனவி
சித்ரத் தனங்களுந் தித்தித்த தொண்டையும்
புண்டரீகச்

சுழிமடுவு மிடையுமழ கியமகளிர் தருகலவி
சுட்டித் திரிந்திஙன் தட்டுப் படுங்கொடும்
பங்கவாழ்வுந்

தொலைவில்பிற வியுமகல வொருமவுன பரமசுக
சுத்தப் பெரும்பதஞ் சித்திக்க அன்புடன்
சிந்தியாதோ

எழுதரிய அறுமுகமு மணிநுதலும் வயிரமிடை
யிட்டுச் சமைந்தசெஞ் சுட்டிக் கலன்களுந்
துங்கநீள்பன்

னிருகருணை விழிமலரு மிலகுபதி னிருகுழையும்
ரத்நக் குதம்பையும் பத்மக் கரஙகளுஞ்
செம்பொனூலும்

மொழிபுகழு முனடமணியு மரைவடமு மடியிணையு
முத்தச் சதங்கையுஞ் சித்ரச் சிகண்டியுஞ்
செங்கைவேலும்

முழுதுமழ கியகுமர கிரிகுமரி யுடனுருகு
முக்கட் சிவன்பெறுஞ் சற்புத்ர வும்பர்தந்
தம்பிரானே.

229

இத்தரணி மீதிற் பிறவாதே
எத்தரொடு கூடிக் கலவாதே
முத்தமிழை யோதித் தளராதே
முத்தியடி யேனுக் கருள்வாயே

தத்துவமெய்ஞ் ஞானக் குருநாதா
சத்தசொரு பாபுத் தமுதோனே
நித்தியக்ரு தாநற் பெருவாழ்வே
நிர்த்தஜெக ஜோதிப் பெருமாளே.

230

நாரியர்க ளாசையைக் கருதாதே
நானுனிரு பாதபத் மமுநாட
ஆரமுத மானசர்க் கரைதேனே
ஆனஅநு பூதியைத் தருவாயே
காரணம தானவுத் தமசீலா
கானகுற மாதினைப் புணர்வோனே
சூரர்கிளை தூளெழப் பொரும்வேலா
தோகைமயில் வாகனப் பெருமாளே.

231

தேனியல் சொற் கனிமாதர்- சேவைதனைக் கருதாதே
யானெனதற் றிடுபோதம்- யானறிதற் கருள்வாயே
வானவருக் கரசான- வாசவனுக் கினியோனே
ஆனைமுகற் கிளையோனே- ஆறுமுகப் பெருமாளே.

232

வாரிமீ தேயெழு திங்களாலே
மாரவே ளேவிய அம்பினாலே
பாரெலா மேசிய பண்பினாலே
பாவியே னாவிம யங்கலாமோ
சூரனீள் மார்புதோ ளாந்தவேலா
சோதியே தோகைய மர்ந்தகோவே
மூரிமால் யானைம ணந்தமார்பா
மூவர்தே வாதிகள் தம்பிரானே.

க்ஷேத்திரக்கோவை

233

கும்ப கோணமோ டாரூர் சிதம்பரம்
உம்பர் வாழ்வுறு சீகாழி நின்றிடு
கொன்றை வேணியர் மாயூர மம்பெறு சிவகாசி
கொந்து லாவிய ராமேசு ரந்தனி
வந்து பூஜைசெய் நால்வேத தந்திரர்
கும்பு கூடிய வேளூர் பரங்கிரி தனில்வாழ்வே
செய்பு கேசுர மாடானை யின்புறு
செந்தி லேடகம் வாழ்சோலை யங்கிரி
தென்றன் மாகிரி நாடாள வந்தவ சேகநாதஞ்
செஞ்சோ லேரக மாவா வினன்குடி
குன்று தோறுடன் மூதூர் விரிஞ்சைநல்
செம்பொன் மேனிய சோணாடுவஞ்சியில் வருதேவே
கம்பை மாவடி மீதேய சுந்தர
கம்புலாவிய காவேரி சங்கமு
கஞ்சி ராமலை வாழ்தேவ தந்திர வயலூரா
கந்த மேவிய போரூர் நடம்புரி
தென்சி வாயமு மேயா யகம்படு
கண்டி யூர்வரு சாமீக டம்பணி மணிமார்பா
எம்பிரானொடு வாதாடு மங்கைய
ரும்பர் வாணிபோ னீள்மால் சவுந்தரி
எந்த நாள்தோறு மேர்பாக நின்றுறு துதியோதும்
இந்தி ராணிதன் மாதோடு நன்குற
மங்கை மானையு மாலாய் மணந்துல
கெங்கு மேவிய தேவால யந்தோறு பெருமாளே.

வேலு மயிலுந் துணை.

உ
குமரன் துணை

திருவகுப்பு

1. சீர்பாத வகுப்பு

உததியிடை கடவுமர கதவருண குலதுரக
வுபலளித கனகரத சதகோடி சூரியர்கள்
உதயமென வதிகவித கலபகக மயிலின்மிசை
யுகமுடிவி னிருளகல வொருசோதி வீசுவதும்
உடலுமுட லுயிருநிலை பெறுதல்பொரு ளெனவுலக
மொருவிவரு மநுபவன சிவயோக சாதனையில்
ஒழுகுமவர் பிறிதுபர வசமழிய விழிசெருகி
யுணர்வுவிழி கொடுநியதி தமதூடு நாடுவதும்
உருவெனவு மருவெனவு முளதெனவு மிலதெனவு
முழலுவன பரசமய கலையார வாரமற
உரையவிழ வுணர்வவிழ வுளமவிழ வுயிரவிழ
வுளபடியை யுணருமவ ரநுபூதி யானதுவும்
உறவுமுறை மனைவிமக வெனுமலையி லெனதிதய
வுருவுடைய மலினபவ ஜலராசி யேறவிடும்
உறுபுணையு மறிமுகமு முயரமரர் மணிமுடியி
லுறைவதுவு முலைவிலது மடியேன் மனோரதமும்
இதழிவெகு முககமன நதியறுகு தறுகணர
விமகிரண தருணவுடு பதிசேர் ஜடாமவுலி
இறைமகிழ வுடைமணியொ டணிசகல மணிகலென
இமயமயில் தழுவுமொரு திருமார்பி லாடுவதும்
இமையவர்க ணகரிலிறை குடிபுகுத நிருதர்வயி
றெரிபுகுத வுரகர்பதி யபிஷேக மாயிரமும்
எழுபிலமு நெறுநெறென முறியவட குவடிடிய
இளையதளர் நடைபழகி விளையாடல் கூருவதும்

இனியகனி கடலைபய றொடியல்பொரி யமுதுசெயு
மிலகுவெகு கடவிகட தடபார மேருவுடன்
இகலிமுது திகிரிகிரி நெறியவளை கடல்கதற
எழுபுவியை யொருநொடியில் வலமாக வோடுவதும்
எறுழிபுலி கரடியரி கரிகடமை வருடையுழை
யிரலைமரை யிரவுபக லிரைதேர்க டாடவியில்
எயினரிடு மிதணதனி லிளகுதினை கிளிகடிய
வினிதுபயில் சிறுமிவளர் புனமீது லாவுவதும்

முதலவினை முடிவிலிரு பிறையெயிறு கயிறுகொடு
முதுவடவை விழிசுழல வருகால தூதர்கெட
முடுகுவது மருணெறியி லுதவுவது நினையுமவை
முடியவரு வதுமடியர் பகைகோடி சாடுவதும்
மொகுமொகென மதுபமுரல் குரவுவிள வினதுகுறு
முறியுமலர் வகுளதள முழுநீல தீவரமும்
முருகுகமழ் வதுமகில முதன்மைதரு வதும்விரத
முனிவர்கரு தரியதவ முயல்வார்த போபலமும்
முருகசர வணமகளி ரறுவர்முலை நுகருமறு
முககுமர சரணமென வருள்பாடி யாடிமிக
மொழிகுழற வழுதுதொழு துருகுமவர் விழியருவி
முழுகுவதும் வருகவென வறைகூவி யாளுவதும்
முடியவழி வழியடிமை யெனுமுரிமை யடிமைமுழு
துலகறிய மழலைமொழி கொடுபாடு மாசுகவி
முதலமொழி வனநிபுண மதுபமுக ரிதமவுன
முகுளபரி மளநிகில கவிமாலை சூடுவதும்

மதசிகரி கதறிமுது முதலைகவர் தரநெடிய
மடுநடுவில் வெருவியொரு விசையாதி மூலமென
வருகருணை வரதனிக லிரணியனை நுதியுகிரின்
வகிருமட லரிவடிவு குறளாகி மாபலியை

வலியசிறை யிட வெளியின் முகடுகிழி படமுடிய
வளருமுகி னிருதனிரு பதுவாகு பூதரமும்
மகுடமொரு பதுமுறிய வடுபகழி விடுகுரிசின்
மருகனிசி சரர்தளமும் வருதார காசுரனும்
மடியமலை பிளவுபட மகரசல நிதிகுறுகி
மறுகிமுறை யிடமுனியும் வடிவேல னீலகிரி
மருவுகுரு பதியுவதி பவதிபக வதிமதுர
வசனிபயி ரவிகவுரி புமையாள்த்ரி சூலதரி
வநசைமது பதியமலை விசயைதிரி புரைபுநிதை
வநிதையபி நவையநகை யபிராம நாயகிதன்
மதலைமலை கிழவனனு பவனபய னுபயசதுர்
மறையின்முத னடுமுடிவின் மணநாறு சீறடியே.

2. வேல்வகுப்பு

பருத்தமுலை சிறுத்தவிடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தவிதழ் மறச்சிறுமி
விழிக்குநிக ராகும்
பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கசக்கடவுள் பதத்திடுநி களத்துமுளை
தெறிக்கவர மாகும்
பழுத்தமுது தழிழ்ப்பலகை யிருக்குமொரு
கவிப்புலவ னிசைக்குருகி வரைக்குகையை
யிடித்துவழி காணும்
பசித்தலகை முசித்தழுது முறைப்படுத
லொழித்தவுண ருரத்துதிர நிணத்தசைகள்
புசிக்கவரு ணேரும்
சுரர்க்குமுநி வரர்க்குமக பதிக்கும்விதி
தனக்குமரி தனக்குநரர் தமக்குமுறு
மிடுக்கண்வினை சாடும்

சுடர்ப்பரிதி யொளிப்பநில வொழுக்குமதி
யொளிப்பஅலை யடக்குதழ லொளிப்பவொளி
ரொளிப்பிரபை வீசும்

துதிக்குமடி யவர்க்கொருவர் கெடுக்கவிடர்
நினைக்கினவர் குலத்தைமுத லறக்களையு
மெனக்கோர்துணை யாகும்

சொலற்கரிய திருப்புகழை யுரைத்தவரை
யடுத்தபகை யறுத்தெறிய வுறுக்கியெழு
மறத்தைநிலை காணும்

தருக்கிநமன் முருக்கவரி னெருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தவிறை
கழற்குநிக ராகும்

தலத்திலுள கணத்தொகுதி களிப்பினுண
வழைப்பதென மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை வாகும்

தனித்துவழி நடக்குமென திடத்துமொரு
வலத்துமிரு புறத்துமரு கடுத்திரவு
பகற்றுணைய தாகும்

சலத்துவரு மரக்கருடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை யெனச்சிகையில்
விருப்பமொடு சூடும்

திரைக்கடலை யுடைத்துநிறை புனற்கடிது
குடித்துடையு முடைப்படைய வடைத்துதிர
நிறைத்துவிளை யாடும்

திசைக்கிரியை முதற்குலிச னறுத்தசிறை
முளைத்ததென முகட்டினிடை பறக்கவற
விசைத்ததிர வோடும்

சினத்தவுண ரெதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்தெயிறு கடித்துவிழி
விழித்தலற மோதும்
திருத்தணியி லுதித்தருளு மொருத்தன்மலை
விருத்தனென துளத்திலுறை கருத்தன்மயில்
நடத்துகுகன் **வேலே.**

3. திருவேளைக்காரன் வகுப்பு.

ஆனபய பத்திவழி பாடுபெறு முத்தியது
வாகநிகழ் பத்தசன வாரக் காரனும்
ஆரமது ரித்தகனி காரணமு தற்றமைய
ஞருடனு ணக்கைபுரி தீமைக் காரனும்
ஆகமம்வி ளைத்தகில லோகமு நொடிப்பளவில்
ஆசையோடு சுற்றுமதி வேகக் காரனும்
ஆணவமு ழுக்கடையு மாவியை விளக்கியநு
பூதியடை வித்ததொரு பார்வைக் காரனும்
ஆடலைவு பட்டமரர் நாடதுபி ழைக்கவம
ராவதிபு ரக்குமட லாண்மைக் காரனும்
ஆடகவி சித்ரகன கோபுரமு கப்பிலரு
ணைபுரியி னிற்குமடை யாளக் காரனும்
ஆயிரமு கத்துநதி பாலனும கத்தடிமை
யானவர்தொ டுத்தகவி மாலைக் காரனும்
ஆறுமுக வித்தகனு மாறிருபு யத்தரசு
மாதிமுடி வற்றதிரு நாமக் காரனும்
யானெனதெ னச்சருவு மீனசம யத்தெவரும்
யாருமுணர் தற்கரிய நேர்மைக் **காரனும்**
யாதுநிலை யற்றலையு மேழுபிற விக்கடலை
யேறவிடு நற்கருணை யோடக் காரனும்

ஏரகமி டைக்கழிசி ராமலைதி ருப்பழநி
யேரணிசெ ருத்தணியில் வாசக் காரனும்
ஏழையினி ரட்டைவினை யாயதொரு டற்சிறையி
ராமல்விடு வித்தருணி யாயக் காரனும்
யாமளைம ணக்குமுக சாமளைம ணிக்குயிலை
யாயெனவ ழைத்துருகு நேயக் காரனும்
ஏதமற நிச்சயம ஞேலயவி ளக்கோளியும்
யாகமுநி வர்க்குரிய காவற் காரனும்
ஈரிரும ருப்புடைய சோணைமத வெற்பிவரும்
யானையள விற்றுவளு மாசைக் காரனும்
ஏடவிழ்க டப்பமலர் கூதளமு டிக்குமினை
யோனுமறி விற்பெரிய மேன்மைக் காரனும்
வானவர்போ ருட்டுமக வானதுபோ ருட்டுமலர்
வாவியிலு தித்தமுக மாயக் காரனும்
வாரணப திக்குதவு நாரணனு வக்குமரு
மானுமய னைக்கறுவு கோபக் காரனும்
வாழியென நித்தமற வாதுபர விற்சரண
வாரிசம ளிக்குமுப காரக் காரனும்
மாடமதில் சுற்றியத்ரி கூடகிரி யிற்கதிர்செய்
மாநகரி யிற்கடவு ளாயக் காரனும்
வாளெயிற துற்றபகு வாய்தொறு நெருப்புமிழும்
வாசுகியெ டுத்துதறும் வாசிக் காரனும்
வாளகிரி யைத்தனது தாளிலிடி யப்பொருது
வாகைபுனை குக்குடப தாகைக் காரனும்
மாசிலுயி ருக்குயிரு மாசிலுணர் வுக்குணர்வும்
வானிலணு வுக்கணுவு பாயக் காரனும்
வாதனைத விர்த்தகுரு நாதனும்வெ ளிப்படம
காடவியி னிற்பதொர்ச காயக் காரனும்

மீனவனு மிக்கபுல வோருமுறை பொற்பலகை
மீதமர்த மிழ்த்ரயவி நோதக்காரனும்
வேரிமது மத்தமதி தாதகிக டுக்கைபுனை
வேணியர்து திப்பதொரு கேள்விக் காரனும்
வேலைதுகள் பட்டுமலை சூரனுடன் பட்டுருவ
வேலையுற விட்டதனி வேலைக் காரனும்
மீனுலவு கிர்த்திகைகு மாரனுநி னைக்குமவர்
வீடுபெற வைத்தருளு தாரக் காரனும்
மேனையரி வைக்குரிய பேரனும தித்ததிறல்
வீரனும ரக்கர்குல சூறைக் காரனும்
வேதியர்வே றுக்கையும நாதிபர வஸ்துவும்வி
சாகனும்வி கற்பவேகு ரூபக்காரனும்
வேடுவர் புனத்திலுரு மாறிமுனி சொற்படிவி
யாகுலம னத்தினொடு போய்விற் காரனும்
மேவியபு னத்திதணி லோவியமே னத்திகழு
மேதகு குறத்திதிரு **வேளைக் காரனே.**

4. வேடிச்சி காவலன் வகுப்பு

உதரகம லத்தினிடை முதியபுவ னத்ரயமு
முகமுடிவில் வைக்குமுமை யாள்பெற்ற பாலகனும்
உமிழ்திரை பரப்பிவரு வேகுமுக குலப்பழைய
உதகமகள் பக்கல்வரு சோதிச் சடானனனும்
உவகையொடு கிர்த்திகைய ரறுவருமே டுக்கவவ
ரோருவரோரு வர்க்கவனெ ரோர்புத்ர னவனும்
உதயரவி வர்க்கநிகர் வனகிரண விர்த்தவித
முடையசத பத்ரநவ பீடத்து வாழ்பவனும்
உறைசரவ ணக்கடவுண் மடுவிலடர் வஜ்ரதர
னுடையமத வெற்புலைய வேதித்த வீரியனும்

உரைபெற வகுத்தருணை நகரிேனாரு பத்தனிடு
மொழிவளர் திருப்புகழ்ம தாணிக்கு பாகரனும்
உரககண சித்தகண கருடகண யக்ஷகண
முபநிட முரைத்தபடி பூசிக்கும் வானவனும்
ஒருவனு மகிழ்ச்சிதரு குருபரனு முத்தமனு
முபயமுறு மக்கிகர மீதிற்ப்ர பாகரனும்

அதிமதுர சித்ரகவி நிருபனு மகத்தியனு
மடிதொழு தமிழ்த்ரயவி நோதக் கலாதரனும்
அவரைபொரி யெட்பயறு துவரையவல் சர்க்கரையோ
டமுதுசெயும் விக்நபதி யானைச் சகோதரனும்
அவுணர்படை கெட்டுமுது மகரசல வட்டமுட
னபயமிட விற்படைகோ டாயத்த மானவனும்
அருணையி லிடைக்கழியி லுரககிரி யிற்புவியி
லழகிய செருத்தணியில் வாழ்கற்ப காடவியில்
அறிவுமறி தத்துவமு மபரிமித வித்தைகளு
மறியென விமைப்பொழுதின் வாழ்வித்த வேதியனும்
அரிபிரம ருக்குமுத லரியபர மற்குயரு
மருமறை முடிப்பையுப தேசித்த தேசிகனும்
அமலனு மெனக்கரசு மதிகுணனு நிர்க்குணனு
மகிலபுவ னத்தமர சேனைக்கு நாயகனும்
அனுபவனு மற்புதனு மனுகுணனு மக்ஷரனு
மருமனமொ ழிக்குமநு பூதிச் சுகோதயனும்

இதமகிதம் விட்டுருகி யிரவுபக லற்றவிட
மெனதறவி ருக்கைபுரி யோகப் புராதனனும்
எனதுமன சிற்பரம சுகமவுன கட்கமதை
யமன்முடி துணிக்கவிதி யாவைத்த பூபதியும்
எழுமையுமெ னைத்தனது கழல்பரவு பத்தனென
இனிதுகவி யப்படிப்ர சாதித்த பாவலனும்

இமையவர் முடித்தொகையும் வனசரர் பொருப்பு மென
திதயமு மணக்குமிரு பாதச் சரோருகனும்

எழுதரிய கற்பதரு நிழலில்வளர் தத்தைதழு
வியகடக வஜ்ரவதி பாரப் புயாசலனும்

எதிரில்புல வர்க்குதவு வெளிமுகடு முட்டவள
ரிவுளிமுகி யைப்பொருத ராவுத்த னனவனும்

எழுபரி ரதத்திரவி யெழுநிலமோ டக்கரிக
ளிடர்பட முழக்கியெழு சேவற் பதாகையனும்

இணையிலியு நிர்ப்பயனு மலமிலியு நிஷ்களனு
மிளையவனும் விப்ரகுல யாகச் சபாபதியும்

மதுகையொடு சக்ரகிரி முதுகுநெளி யப்புவியை
வளையவரும் விக்ரமக லாபச் சிகாவலனும்

வலியநிக ளத்தினொடு மறுகுசிறை பட்டொழிய
வனஜமுனி யைச்சிறிது கோபித்த காவலனும்

வருசுரர் மதிக்கவொரு குருகுபெயர் பெற்றகன
வடசிகரி பட்டுருவ வேல்தொட்ட சேவகனும்

வரதனு மநுக்ரகனு நிருதர்குல நிஷ்டுரனு
மநுபவன சித்தனும நோதுக்க பேதனனும்

வயிரிசை முழக்கமிகு மழைதவழ் குறிச்சிதொறு
மகிழ்குரவை யுட்டிரியும் வேடிக்கை வேடுவனும்

மரகத மணிப்பணியி னணிதழை யுடுத்துலவும்
வனசரர் கொடிச்சிதனை யாசிக்கும் யாசகனும்

மதனன்விடு புட்பசர படலமுட லத்தனையு
மடலெழுதி நிற்குமதி மோகத் தபோதனனும்

வரிசிலை மலைக்குறவர் பரவிய புனத்திதணின்
மயிலென இருக்குமொரு **வேடிச்சி காவலனே.**

5. சேவகன் வகுப்பு

இருபிறை யெயிறு நிலவெழ வுடல
மிருள்படு சொருப முடைக்கோ விடவே
இறுகிய கயிறு படவினை முடுகி
யெமபடர் பிடரி பிடித்தே கொடுபோய்
அருமறை முறையின் முறைமுறை கருதி
யதரிடை வெறுவ ஒறுத்தால் வகையால்
அறிவொடு மதுர மொழியது குழறி
யலமரு பொழுதி லழைத்தால் வருவாய்
ஒருபது சிரமு மிருபது கரமும்
விழவொரு பகழி தொடுத்தோன் மருகா
உரமது பெரிய திரிபுர மெரிய
வுயர்கன கிரியை வளைத்தோர் புதல்வா
மருவள ரடவி வனிதையர் பரவ
மரகத விதணி லிருப்பாள் கணவா
வளைகடல் கதற நிசிசரர் மடிய
மலையொடு பொருத முழுச்சே வகனே.

6. கடைக்கணியல் வகுப்பு

அலைகடல் வளைந்து டுத்த வெழுபுவி புரந்தி ருக்கு
மரசென நிரந்த ரிக்க வாழலாம்
அளகையர சன்ற னக்கு மமரரர சன்ற னக்கு
மரசென அறஞ்செ லுத்தி யாளலாம்
அடைபெறுவ தென்று முத்தி யதிமதுர செந்த மிழ்க்கு
மருள்பெற நினைந்து சித்தி யாகலாம்
அதிரவரு மென்று முட்ட அலகில்வினை சண்டை நிற்க
அடலெதிர் புரிந்து வெற்றி யாகலாம்

இலகிய நலஞ்சேய் புட்ப கமுமுட னிறம் வேளுத்த
இபவர சேனும்போ ருப்பு மேறலாம்
இருவரவர் நின்றி டத்து மேவரேவ ரிருந்தி டத்து
மோருவனிவ னென்று ணர்ச்சி கூடலாம்
எமபடர் தோடர்ந்த ழைக்கி லவருட னேதிர்ந்து ளுட்க
இடியேன முழங்கி வேற்றி பேசலாம்
இவையோழிய வும்ப லிப்ப தகலவிடு முங்கள் வித்தை
யிணையினி விடும்பே ருத்த பாருளீர்

முலையிடை கிடந்தி ளப்ப மோகுமோகேன வண்டிரைப்ப
முகையவிழ் கடம்ப டுத்த தாரினன்
முதலிபேரி யம்ப லத்துள் வரையசல மண்ட பத்துண்
முநிவர்தோழ வன்று நிர்த்த மாடினன்
முனைதோறு முழங்கி யோற்றி முகிலேன விரங்க வேற்றி
முறைநேறி பறந்து விட்ட கோழியான்
முதியவுண ரன்று பட்ட முதியகுடர் நன்று சுற்று
முதுகழுகு பந்த ரிட்ட வேலினன்

மலைமருவு பைம்பு னத்தி வளருமிரு குன்ற மோத்தி
வலிகுடி புகுந்தி ருக்கு மார்பினன்
மழலைகள் விளம்பி மோய்த்த அறுவர்முலை யுண்டுமுற்றும்
வடிவுடன் வளர்ந்திருக்கும் வாழ்வினன்
மலையிறை மடந்தைபேற்ற வோருமதலை யென்று தித்து
மலையிடிய வுந்து ணித்த தோளினன்
மயிலையு மவன்றி ருக்கை யயிலையு மவன் **கடைக்க**
ணியலையு நினைந்தி ருக்க வாருமே.

7. மயில் வகுப்பு.

ஆதவனு மம்புலிய மாசுறவி ழுங்கியுமி
ழாலமரு வும்பணியி ரண்டு மழுதே
ஆறுமுக னைந்துமுக னானமுக னேங்கடவு
ளாமேனமோ ழிந்தகல வேன்று விடுமே

ஆர்கலிக டைந்தமுது வானவரு ருந்தவரு
ளாதிபக வன்றுயில நந்தன் மணிசேர்
ஆயிரமி ருந்தலைக ளாய்விரிப ணங்குருதி
யாகமுழு துங்குலைய வந்த றையுமே
வேதமுழு தும்புகலி ராமனொரு தம்பிமிசை
வீடணன ருந்தமையன் மைந்த னிகலாய்
வீசுமர வஞ்சிதறி யோடவரு வெங்கலுழன்
மேலிடி யெனும்படிமு ழங்கி விழுமே
மேதினிசு மந்தபெரு மாசுணம யங்கநக
மேவுசர ணங்கோடுல கெங்கு முழுமே
வேலியென வெண்டிசையில் வாழுமுர கந்தளர
வேயழலெ னுஞ்சினமு டன்ப டருமே
போதினிலி ருந்தகலை மாதினைம ணந்தவுயர்
போதனை யிரந்துமலர் கொண்டு முறையே
பூசனைபு ரிந்துகோடி யாகிமகி ழொன்றுதுகிர்
பொன்முடிவி ளங்கவரு மஞ்ச மருமே
பூதரொடு கந்தருவர் நாதரொடு கிம்புருடர்
பூரணக ணங்களொடு வந்து தொழவே
போரிடுவ வென்றுவெகு வாரணக ணங்களுயிர்
போயினமெ னும்படியெ திர்ந்து விழுமே
கோதகலு மைந்துமலர் வாளிமத னன்பொருவில்
கோலவுட லங்கருகி வெந்து விழவே
கோபமொடு கண்டவிழி நாதரணி யும்பணிகள்
கூடிமன மஞ்சிவளை சென்று புகவே
கூவியிர வந்தமுணர் வாழியென நின்றுபொரு
கோழியொடு வென்றிமுறை யும்ப கருமே
கோலமுறு செந்தினகர் மேவுகும ரன்சரண
கோகனத மன்பொடுவ ணங்கு மயிலே.

8. கொலுவகுப்பு

அருமறை யவன்முத லரியரன் மகபதி
யநங்க னிமையோ ரினங்க ளொருபால்
அருணனு மதியமு மனலெழு கனலியு
மணங்கி னுடுசூழ் கணங்க ளொருபால்

வருணனு நிருதியும் வழியோடு தனதனு
மகிழ்ந்து மிகவே புகழ்ந்த தொருபால்
வயிரவ ரோடுபட ருவணரு முரகரும்
வரங்கள் பெறவே யிரங்க வொருபால்

இருடிக ளேவர்களு மினியகி னரர்களு
மிணங்கி யெதிரே வணங்க வொருபால்
இபமுக வனுமெழி லிளவல்க ளனைவரு
மியன்ற நெறியே முயன்ற தொருபால்

உருமலி குறளின மொடுவசு முசுமுக
னுறைந்து பரிவாய் நிறைந்த தொருபால்
உடுவொடு நடவுப னிருவரு முறைமுறை
யுகந்து தொழவே மிகுந்த தொருபால்

அடல்விடை முகனறை கதையுற வெகுசன
மதுங்கி யருகே யொதுங்க வொருபால்
அயன்முடி திருகிய வயவனு நியமமொ
டடங்கி வலமே தொடங்க வொருபால்

மடல்புனை புகரொடு வருபதி னுருவரு
மருங்கி னுறவே நெருங்க வொருபால்
மருவொடு துவரிரு வருமிசை வலமொடு
வசிந்து மனமே கசிந்த தொருபால்

மிடலிறை விறலரி விமலர்க ளருள்சுதன்
வியந்து விரைவாய் நயந்த தொருபால்
வெயில்விரி சுடரவன் மகனொடு மதிமகன்
விளம்பு முறையே கிளம்ப வொருபால்

உடலொளி மவுனிக ளுடனுப னிடதரு
முளங்கு ளிரவே விளங்க வொருபால்
உமைதிரு மகள்நில மகள்கலை மகளோடும்
உகந்தே வருமே தோகுந்த தொருபால்
அதிபகி ரதிபயி ரவிபக வதிசசி
யரம்பையருமே நிரம்ப வொருபால்
அழகிய கவுரியோ டிலகிய வலவையு
மடைந்து தயவாய் மிடைந்த தொருபால்
மதியர சருநிறை வசியரும் வினைஞரு
மலிந்து முகமே பொலிந்த தொருபால்
வருசிவ னடியவர் அரகர வெனமுறை
வழங்கு கடல்போல் முழங்க வொருபால்
விதிமுறை கருதியை வகைபுரி கருவிகள்
விளைந்த வொலிவா னளைந்த தொருபால்
விதமுட னபிநய வனிதையர் சதிமுறை
விரிந்த நடமே புரிந்த தொருபால்
உதிர்தரு மலர்விரை யுறுபுகை ம்ருகமத
முமிழ்ந்த மணமே கமழ்ந்த தொருபால்
ஒழுகிய கிரிதொடு பணிதம தடுசுட
ருவந்து ஒளியே நிவந்த தொருபால்
அரியக டெனமுக டளவிய வொருகுடை
யமர்ந்த நிழலே சமைந்த தொருபால்
அருமட வனமென விருபுடை கவரிக
ளசைந்த வழகே யிசைந்த தொருபால்
வரிசைசெய் துயிலொடு வனமயில் சிவிறியின்
வயங்கு சிறுகா லியங்க வொருபால்
மறுகட லினிலெழு நிறைமதி யமுதென
வரிந்து பனிநீர் சொரிந்த தொருபால்

விரியிருள் வலிதரு கிரணம தேனநல
மிகுஞ்சு ழலில்வீ சுகுஞ்ச மோருபால்
வியன்மர கதமணி மிளிர்தரு களசெதிர்
விரைந்து நிரையாய் நிரைந்த தோருபால்

உரியவெ ளிலையுட னுயரிய கமுகினி
லுகுந்த கனியே பகுந்த தோருபால்
உலகுள வனிதைய ரவரவர் விரதமோ
டுணர்ந்து கனியே கோணர்ந்த தோருபால்

அறுகதி ரவரேன அறுமணி மவுலிக
ளடர்ந்து வெயிலே படர்ந்த தோருபால்
அறுமதி யெனவறு திருமுக சததள
அலர்ந்த மலரே மலர்ந்த தோருபால்

மறுவறு கடலேன மருவுப னிருவிழி
வழிந்த அருளே பொழிந்த தோருபால்
வனைதரு மகரமு மணியணி பணிகளும்
வயங்கு குழையே தயங்க வோருபால்

இறுகுபொன் மலையோடு மிடறுப னிருபுய
மிசைந்து நெடுவா னசைந்த தோருபால்
எழிலியை யனையப னிருகையி லயின்முத
லிலங்கு படையே துலங்க வோருபால்

உறுவரை யருவியை நிகர்தரு முரமிசை
யுடன்கோள் புரிநூல் கிடந்ததோருபால்
உருமென விகலிமு னெதிர்பொரு மவுணரு
ளுடைந்த வுடைவாள் சிறந்த தோருபால்

அநவர தமுமறை முறையிடு பரிபுர
மலங்கு மிருதாள் குலுங்க வோருபால்

அளவறு கலவியின் முழுகிய குறமக
ளமர்ந்து ளோயிலாய் நிமிர்ந்த தொருபால்
வனதரு வினிலுறை சதமக னருண்மகள்
வதிந்து மணமே பொதிந்த தொருபால்
வருமடி யவரிடம் வலியசந தம்வர
வளர்ந்த சபையே கிளர்ந்த தொருபால்
நினைவொடு பணிபவர் வினைதுகள் படஎதிர்
நினைந்து திருநீ றணிந்த தொருபால்
நிறைமல ரொடுநல கலவையு முயர்குரு
நினைந்து தரவே புனைந்த தொருபால்
தினகர னுலவுசந் நிதியினி லிரவலர்
தெளிந்த தமிழே பொழிந்த தொருபால்
சிவபர கிரியினி லொருசிவன் வடிவொடு
திருந்த முருகோன் இருந்த கோலுவே.

—○—

கந்தரந்தாதி

— ● —

திருவாவி னன்குடி பங்காள ரெண்முது சீருரைச
திருவாவி னன்குடி வாஞர் பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி யேரகங் குன்றுதோ ருடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே.

(கருத்து) (பார்வதி சமேதரான) பரமசிவனும், லக்ஷ்மீ சமேதரான திருமாலும் புகழ்கின்ற கீர்த்தியும் வல்லமையுமுடைய குமாரக் கடவுளுக்கு உறைவிடமாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழநி, திருவேரகம், குன்றுதோருடல், பழமுதிர்சோலைமலை இவ்வாறு தலங்களையுந் துதியுங்கள். 1

செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்ற வாரண மஞ்சலென் ருண்டது நீண்டகன்மச்
செவிக்குன்ற வாரண வேலா யுதஞ்செற்ற துற்றனகட்
செவிக்குன்ற வாரண வள்ளிபோற் ருண்மற்றென்
[றேடுவதே.

(க-து) நாகமலையில் வாழுங் கந்தசுவாமியே! உன் திருப்புகழை யான் கேட்டறிந்த மாத்திரத்தில் நினது கோழிக் கொடி என் ஆத்துமாவை அபயங்கொடுத்து ஆண்டுகொண்டது; உன் வேலாயுதம் பிறப்புக்கிடமான பேராசையை யொழித்துவிட்டது; உன் தேவிமாரது திருவடியுங் கிடைத்தது. இனி யான் தேட வேண்டியது என்ன இருக்கின்றது? 2

திரிகையி லாயிர வெல்லாழி மண்விண் டருசிரபாத்
திரிகையி லாயிர வாநந்த நாடகி சேரிமகோத்
திரிகையி லாயிர மிக்குமைந் தாசெந்தி லாயொருகால்
திரிகையி லாயிரக் கோடிசுற் ருேடுந் திருத்துளமே.

(க-து) நித்தியமானவனே! சராசரங்களைப் படைத்தும், பிரமகபாலமேந்தியும், ஆநந்த நடனஞ்செய்து கயிலாசத்திலுறைகின்ற பரமசிவனுக்கும், இமயமலையின் குமாரியாகிய பார்வதிக்கும்

மைந்தனே! திருச்செந்திற் பதியோனே! என் உள்ளமானது குலாலன் சக்கரம் ஒருதரம் சுற்றுவதற்குள் அநேககோடிதரம் சுற்றி வருகின்றது; அதை யடக்கியருள வேண்டும். 3

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபோன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.

(க-து) கான்யாறோடும் புனத்திலிருந்த வள்ளிநாயகி பேரில் அன்புகூர்ந்த செந்திநாயகனே! அசுரர்குலாந்தகனே! சேந்தனே! என்று துதிக்கின்றவர்களுக்கு நவக்கிரகங்களின் வக்கிரோதயத்தாலாகுந் தீமையில்லை. 4

தீட்டப் படாவினி யுன்னாலென் சென்னி கறைப்பிறப்பில்
தீட்டப் படாவி யவரல்லன் யான்றிக்கு நான்மருப்புத்
தீட்டப் படாவி தமுகா சலன்சிறை விட்டவன்றாள்
தீட்டப் படாவி வனையே நினைவன் றிசாமுகனே.

(க-து) பிரமாவே! இனி யென்னை யுதரநிறைந்த கருக்குழியில் அழுந்துவோரைப்போல் நினையாதே! இந்திரனது சிறையைத் தவிர்த்தாண்ட குமாரக்கடவுளது பாத தாமரையை யடையும் பொருட்டு அவனையே தியானித்துக்கொண்டிருக்கிறேனாதலால் எனது தலை உன் கையால் இனி எழுதப்படாது. 5

சிவசிவ சங்கர வேலா யுததினை வஞ்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாவை யெனுந்திற லோய்போறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவோளி சேர்ந்தபின்னே.

(க-து) ஏகவஸ்துவான பரமசிவனது மைந்தனாகிய வேலாயுதத்தை யுடையோனே! தினைப்புனத்தில் வாழ்கின்ற வள்ளி நாயகனே! மயிலேறும் வீரனே! மாவடிவாய் நின்ற சூரனை வென்ற

வீரனே! நின் திருவருளின் பிரகாசத்திஞல் எனது கோபமென்னும் மிருகம் பொறுமை யென்னும் ஆயுதத்தால் அழிந்த தன்மைய தாயிற்று. 6

திறவா வனக புரிவாச னீக்கச் சிகரிநெஞ்சந்
திறவா வனச முனியைவென் ருேய்தென் றிசைத்திருச்செந்
திறவா வனமயி லோயந்த காலமென் சிந்தைவைக்கத்
திறவா வனநின் றிருவான தண்டைத் திருவடியே.

(க-து) கயிலாயத்தின் கதவு திறக்கும்படிச் செய்கின்றவனே! கிரவுஞ்சகிரியைப் பிளந்து பிரம்மாவையும் வென்ருேனே! தெற்கின் கண்ணதாகிய திருச்செந்தூரில் வாழும் மயில்வாகனனே! என் அனித்திய காலத்தில் உனது தண்டை யணிந்த தாளே என் சிந்தையை வைக்கு மடைக்கல ஸ்தானமாம். 7

சிறுமிக் குமர நிகர்வீர் பகிரச் சிதையுயிர்த்துச்
சிறுமிக் குமர சரணமென் னீருய்விர் செந்திணைமேற்
சிறுமிக் குமர புரைத்துநின் ருேன்சிலை வேட்டுவனேச்
சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீறடிக்கே.

(க—து) சிற்றுமியும் ஈயாமல் மரம்போன் றிருப்பவர்களே! நீங்கள் பிழைப்பதெப்படி? நீர் தும்முங்காலையிலாவது திணைப்புனத் தின்கண் வள்ளியம்மையினிடத்துத் தமது மரபையோதி நின்றவனும், கண்ணப்ப நாயஞர் நிவேதித்த எச்சிலை இனிதாகக் கொண்ட பரமசிவன் மைந்தனுமாகிய கந்தஸ்வாமியின் திருவடியைக் கருதிக் குமரனே சரண மென்பீராஞற் பிழைப்பீர்கள். 8

முருகா

கந்தரலங்காரம்

காப்பு

அடலரு ணைத்திருக் கோபுரத் தேயந்த வாயிலுக்கு
வடவருகிற் சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
றடபடெனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

அடல் = வல்லபம், நினைவார் வினை களையும் வலிமை. கும்பம் = மத்தகம், களிறு = யானை.

நூல்

பேற்றைத்தவஞ்சற் றுமில்லாத வென்னைப்ரபஞ்சமென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே.

ப்ரபஞ்சம் = உலகம். வழிவிட்டவா = வழிவிட்ட கருணைச் செயலை என்னென்று கூறி வியப்பேன். சடாடவி = சடைக்காடு. இதழி = கொன்றை. அம்புலி = சந்திரன். 1

அழித்துப் பிறக்கவொட் டாவயில் வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றேகவி கற்கின்றதே.

அழித்து = பிரமனெழுத்தை அழித்து. அயில்வேல் = கூர்மை பொருத்திய வேல். எழுத்துப்பிழையற = திருப்புகழைப் பிழையின்றிக் கற்று ஓதுதல் வேண்டும். 2

தோரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடகநெளிந்ததுசூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

புரமெரித்தான் = மும்மலங்களாகிய முப்புரத்தை எரித்தோன். கிரௌஞ்சம் = மாயை. கடகம் = சேனை. கன்மம். சூர் = சூரபன்மன்; ஆணவம். பேரணி = நடுச்சேனை. 3

ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட்டாரைவர் செய்வதென்யான்சென் றுதேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே.

ஓர்தல் = ஆராய்தல். ஐவர் = ஐம்புலன்கள். சோரி = உதிரம். கட்டாரி = குற்றுவாள், [வேல்]. 4.

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோது குவலயமே.

அறுவர் = கார்த்திகை பெண்கள். கடல் = கன்மம். குன்று = மாயை. சூர் = ஆணவம். குருந்து = குழந்தை. 5.

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மாநந்தந் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச்செந் தேனும் புளித்தறக் கைத்ததுவே.

ஏனல் = தினைப்புனம். உள்ள = நினைக்க.

சளத்திற் பிணிபட் டசட்டு க்ரியைக்குட் டவிக்குமென்றன்
உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே.

சளம் = வஞ்சனை, பொய். ப்ரமம் = மயக்கம். கழுது = பேய். 7

ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோ ராநந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்தவெறும்பாழைப்பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வா!முக மாறுடைத் தேசிகனே.

பூதரம்=மலை. அளி=கருணை. 8

தேனென்று பாகென்றுவமிக் கொணுமொழித் தெய்வவள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றே
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே.

கூறவற்றே=கூறவல்ல தகைமையதோ? கால்=காற்று. 9

சொல்லுகைக் கில்லையென் றெல்லா மிழந்துசும் மாவிருக்கு
மெல்லையுட் செல்ல எனைவிட்ட வா இகல் வேலனல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக் கொவ்வைச் செவ்வாய்
வல்லியைப் புல்கின்ற மால்வரைத் தோளண்ணல் வல்லபமே.

இகல்=போர். கொல்லி=கொல்லிப்பண். மால்=பெருமை. 10

குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசைகொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிடவெண்
டிசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே.

குசை=கடிவாளம். கசை=சம்மட்டி. வாசி=குதிரை. திடர்=மேடு. 11

படைபட்ட வேலவன் பால்வந்தவாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே.

வாகை=வெற்றி. பதாகை=கொடி. சலதி=கடல். உடு படலம்=நட்சத்திரக் கூட்டம். 12

ஒருவரைப் பங்கி லுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே.

ஒருவர்=ஒப்பற்றவர்; சிவபெருமான், (சமானரகிதர்.) வெருவர=அச்சமுற. கனகப்பருவரை=மேருகிரி. **13**

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்று வாயிரு நான்கு வெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணோருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே.

கு=பூமி, பாவம், சிறுமை. கொட்பு=சுழற்சி. சப்பாணி=கைகளை ஒன்றோடொன்று தட்டுதல். **14**

தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே.

தாவடி=பிரயாணம். **15**

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தான
[மென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவைவேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.

இருந்தபடி=அசைவற்ற மோன நிலை. **16**

வேதாகமசித்ர வேலா யுதன்வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்த மரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே.

வெட்சி=வீரர் அணியும் ஒருவகைப் பூ. **17**

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க் கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே.

வை = கூர்மை. கடைவழி = மரணயாத்திரை. 18

சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர் மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்க்குணம்பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே.

சொன்ன = சொர்ண; பொன். 19

கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோய்
ஊழிற்பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.

அத்தம் = பொருள். 20

மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞான கரசுர பாஸ்கரனே.

கலாபி = மயில். தந்து = நூல். 21

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.

வாரணம் = யானை. இலஞ்சியம் = சரவணப் பொய்கையிற் பிறந்தவர். இலஞ்சி = குளம். 22

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே.

வை = கூர்மை. ஐவர் = ஐம்புலன்கள். 23

கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே.

கின்னம் = துன்பம். குன்னம் = இரகசியம். குறிஞ்சிக் கிழவர் = மலைகளுக்குரியவர், வேடர். குறிச்சி = குறிஞ்சி நில ஊர். 24

தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலனுக்குத்
தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாய டாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

அவிரோதம் = விரோதமின்மை. 25

நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்;மரிப் பார்வெறுங் கர்மிகளே.

சிகண்டி = மயில். காலத்தை வெல்லுதல் = மரணமிலாப் பெருவாழ்வு. 26

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்த செச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே.

சேலை = பீதாம்பரக்கச்சை. சீரா = சிறுவாள்; கவசம். செச்சை = வெட்சி. தோகை = மயில். வாகை = வெற்றி மாலை. 27

வேலே விளங்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே:

மால் = அன்பின் முதிர்ச்சி. 28

கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங் காம சமுத்திரமே.

கடம் = மலைப்பக்கம். புணை = தெப்பம். பணை = மூங்கில்: மூங்கிலையொத்த தோள். 29

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென்ப தாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே.

கொற்றம் = வலி. 30

பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே.

பொக்கம் = பொய். குடில் = சிறுவீடு; உடம்பு. சிந்து = கடல்: கொக்கு = மாமரம்; மாமரமான சூரன். 31

கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங் கண்ணார்க்
கிளைத்துத்தவிக்கின்ற என்னை யெந்நாள்வந் திரட்சிப்பையே.

கிளைத்து = சுற்றத்தாருடன். 32

முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

மிடி = தரித்திரம். விதனம் = மனத்துயர். 33

பொட்டாக வெற்பைப் பொருதகந்தா தப்பிப் போன
[தோன்றற்
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே.

பொட்டு = நுழைவழி. இரும் = பெரிய. கட்டாரி = வாள். 34

பத்தித் துறையிழிந் தாநந்த வாரி படிவதினல்
புத்தித் தரங்கந் தெளிவதென் றேபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே.

தரங்கம் = அலை. குருதி = இரத்தம். மெத்தி = நிறைந்து. 35

சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வந் துன்பமின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ் சேகரிக் கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலை குன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.

கரிக்கோட்டு முத்து = யானைத்தந்தங்களி லுண்டாகும் முத்து.36

கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேன்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடு டுடு டுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற
ராவுத்தனே.

கண்டு = கற்கண்டு. முதுகூளி = கிழக்கூளி, 37

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

கோள் = கிரகங்கள். கூற்று = இயமன். 38

உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தென்னை யுன்னி
[லொன்று
விதித்தாண் டருள்தருங் காலமுண் டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு காமயி லேறிய மாணிக்கமே.

உன்னில் ஒன்று = கந்தவேளிடத்தில் இரண்டறக்கலத்தல். வெற்பு = மந்தரமலை. உரகபதி = வாசுகி. தாம்பு = கயிறு. அம்பரம் = கடல். மதித்தான் = கடைந்தான். 39

சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழிற் றேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்
வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே.

சேல் = சேற்கெண்டைகள். மால் = விருப்பம். 40

பாலே யனைய மொழியார்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலே கொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே.

கால் = காற்று. கணபணம் = பணமுடிகளுடைய ஆதி சேடன். 41

நிணங்காட்டுங் கொட்டிலை விட்டோரு வீடெய்தி நிற்கநிற்குங்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குற் குருகுங் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்
ததுவே.

கொட்டில் = கொட்டகை, ஒதுக்கிடம். 42

கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேன் முருகனைப் போற்றி
[யன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே.

கவி=குரங்கு. கட்செவி=பாம்பு. பணி=ஆபரணம். 43

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்
[தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே.

நால் ஆறுகால்=பத்துவாயுக்கள். ஆர்க்கை=கட்டுதல், 44

ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிரு;பூத வீட்டி லிராமலென் றுனிரு கோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குருபூத வேலவ னிட்டுர சூர குலாந்தகனே.

பொரு பூதரம்=போர்செய்கின்ற மலைபோன்ற யானை. ஏகா
சம்=மேற்போர்வை. பூதம்=பரிசுத்தம், 45

நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
றோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மநோதுக்க மானது மாய்வதற்கே.

நீயான ஞான விநோதம்=அத்துவித முத்தி. தோயா=
தோய்ந்து. 46

பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமேற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே. 47

பத்தி=வரிசை.

புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே.

சத்தி = வேல். குவடு = மலை. **48**

சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண்தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே.

தண்டு = சேனை. தாவடி = போர்பிரயாணம். பொறி = எழுத்து. **49**

படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும்பொழுதுவந் தஞ்சலென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே.

இராவுத்தன் = குதிரைச்சேவகன். (மயிலாகிய உக்ரதுரகம் ஏறுவோன்) **50**

மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.

ஆறு கூறெழ = வழியுண்டாகி பிளந்துவிழ. பொதிசோறு = கட்டுசோறு **51**

சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்மீ; பணி பாசசங் க்ராம பணமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குமராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே.

சிகர அத்ரி = சிகரத்துடன் கூடிய மலை. சங்க்ராமம் = போர். நிகரம் = கூட்டம். அக்ஷமம் = பொறுமை யின்மை. பட்சி துரங்கம் = மயில். விட்சோபம் = கலக்கமின்மை. **52**

வேடிச்சி கோங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினுற்
பாடிக் கசிந்துள்ள போதே கோடாதவர் பாதகத்தாற்
றேடிப் புதைத்துத் திருட்டிற் கோடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே.

வேடிச்சி கொங்கை விரும்பும் = ஞானகுறமாதின் பர அபர ஞானங்களாகிய தனங்களை விரும்புவோன். 53

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கோன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே.

ஈகைக்கு = தருமஞ் செய்தற்கு. வாகை = வெற்றி. 54

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மருர்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய்யா ரென்செய் வார்யமதூதருக்கே.

நினைப்பு மறப்பு = கருதா மறவா நெறி. தொழும்பு = தொண்டு. 55

கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவனூர்க் குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

அடல் = வலி. விடாய்ப்பட = தண்ணீர் விடாயால் துன்புற 56

பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவினை யோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணுது மாய வுடம்பிதுவே.

பிடி = பெண்யானை. களிறு = ஆண்யானை. 57

நெற்றுப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றுத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றுக்கை யும்வெந்து சங்கிராம வேளும் படவிழியாற்
செற்றூர்க் கினியவன் தேவேந்த்ர லோக சிகாமணியே.

இக்கு = கரும்பு. பற்றுக்கை = அம்புகட்டுங்கயிறு. 58

பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே.

பொங்கல் = கிளர்தல். ஆரம் = முத்து. வேலை = கடல்.
வங்காரம் = பொன். சங்காதம் = துணை. 59

சிந்திக் கிலேனின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக்கிலே னொன்றும் வாழ்த்துகி லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே.

புந்திக்கிலேசம் = மனோவேதனை. காயக்கிலேசம் = உடலுக்கு
வரும் பிணி முதலியன. 60

வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித் தவா!பஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.

செற்ற = சினந்த. புரை = குற்றம். 61

ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்
காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனு மேருவுமே.

ஆலுக்கு = ஆலகாலத்தையுண்ட சிவபிரானுக்கு. 62

பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப்போர்வேலனைச்சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே.

பாதித்திருவுரு = மாதொருபாகம். 63

பட்டிக் கடாவில் வருமந்த காலனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாள்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே.

பட்டி = களவு. 64

வெட்டுங் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன் விடுங் கயிற்றற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே.

கராசலம்:— கர அசலம் = கைகளையுடைய மலைகள்; யானை. 65

நீர்க் குமிழிக்கு நிகரென்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற்குமரற் கன்பிலாதவர் ஞான மிகவுநன்றே.

அன்பிலாதவர் ஞானம் = அன்போடு சம்பந்தப்படாத அறிவு. 66

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே.

தறுகண் = அஞ்சாமை. சயிலம் = மலை; ஐராவதம். சரசவல்லி = தேவசேனை. 67

சாடுஞ் சமரத் தனிவேன் முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம் போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண் டாடப் பசுபதிநின்
ருடும் பொழுது பரமா யிருக்கு மதீதத்திலே.

சாடும் சமரம் = போரை அழிக்கும். பவுரி = கூத்து. 68

தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி யெனைத்தேற் றியபின்னர்க் காலன்வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செய்ய லாஞ்சத்தி வாளொன்றினுற்
சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்ரி சூலத்தையே.

வெம்பி = கோபித்து. த்ரிசூலம் = இயமன் கைச்சூலம். 69

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்மைகுன்ரு
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

செங்கோடன் = திருச்செங்கோட்டு முருகன். 70

துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொறுக்கிலென் ஞஞ்சிவ யோக மென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.

அருத்தி = பூரகஞ் செய்து. 71

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்விலையே.

சாந்துணை = இறக்கும் வரை. 72

போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணுதிந்த ஆநந்தமே.

போக்கும் வரவும் = இறப்பு பிறப்பு. இரவும் பகலும் = நினைப்பு மறப்பு. 73

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்த அன்பாற்
குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டுங் கொடிய ஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டு மென்ருல்
இராப்பக லற்ற இடத்தே யிருக்கை யெளிதல்லவே.

இராப்பக லற்ற இடம் = கேவல சகலங்கள் அற்ற அருள் நிலை.

படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மாநந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.

முசியாமல் = சோர்வடையாமல். மிடி = தரித்திரம். 75

கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

கோடாத வேதன் = அறத்தினின்றும் வழுவாத பிரமன். தாடாளன் = முயற்சியுடையோன். 76

சேல்வாங்கு கண்ணியர் வண்ணப்பயோதரஞ் சேரஎண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே
கால்வாங்கி நிற்குங் களிற்றான் கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கிடாதன் றுவேல்வாங்கிபூங்கழல்நோக்குநெஞ்சே

களிற்றான் = ஐராவதத்தையுடைய இந்திரன். கிழத்தி= இந்திராணி. 77

கூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங்கொண் டாடுவிர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகை யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரையோகெடுவீர்நும் மறிவின்மையே.

தார்=மாலை. சாளிகை=பணப்பை. 78

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேன்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்குமரா அம ராவதி காவலனே.

கொந்து=பூங்கொத்துகள். 79

மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றன்வந்தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந் தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே.

மாகம்=ஆகாயம். த்ரியம்பகன்=முக்கண்ணன்; அம்பகம்= கண். 80

தாரா கணமெனுந் தாய்மார் அறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பாலுண்ட பால னரையிற்கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காவந்த போதுயிர் வாங்குவனே.

தாராகணம்=நட்சத்திரக்கூட்டம். சீரா=உடைவாள். 81

தகட்டிற் சிவந்த கடம்பையு நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு ளாய்புண்ட ரீகனண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர லோகத்தை முட்டவெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே.

புண்டரீகன் = பிரமன். பகடு = யானை. 82

தேங்கிய அண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளந்தனிவேல்
வாங்கி யனுப்பிடக் குன்றங்க ளெட்டும் வழிவிட்டவே.

தேங்கிய = இனி உய்வில்லை என்று வருந்திய. 83

மைவருங் கண்டத்தர் மைந்தகந்தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறியேன் கற்ற கல்வியும் போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே.

கைவருந் தொண்டு = நன்கு பழகிய தொண்டு. பைவரும் கேள் = வருந்துகின்ற சுற்றத்தார். பதி = ஊரார். ஐவர் = ஐம் புலன்கள். 84

காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே.

புகட்டுதல் = செலுத்துதல். மூட்டி = மூலாக்கினியை எழுப்பி. 85

வேலா யுதன்சங்கு சக்ராயு தன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன் தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண்டேன்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே.

காலாயுதம் = சேவல். 86

குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே.

தமர் = சுற்றம். கடையேடு = இயமனோலை. 87

வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்றுவாய் கொடி யுங்கழுகும்
பிணங்கத்துணங்கையலகைகொண்டாடப்பிசிதர்தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே.

கொடி = காக்கை. பிணங்க = நெருங்க. துணங்கை = இருகையு முடக்கி பழுப்புடை யொத்தியாடுங் கூத்து. அலகை = பேய். பிசிதர் = அசுரர். 88

பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதலை
தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே 89

பங்கேருகன் = பிரமன். ஓதம் = கடல். சிலம்பு = கிரௌஞ்சம்.

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்
சேலார் வயற்பொழிற்செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

மன்றாடி = மன்று ஆடி; நடேசர். 90

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற் கைக் கோலனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேலனைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

மாகுலவன் = வேடன். கன்னிப்பூகம் = இளம் பாக்குமரம். 91

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக் குஞ்சுத்த
ஞானமென்னுந்
தண்டயம் புண்டரீ கந்தருவாய் சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு
மண்டிமிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட
காவலனே.

அண்டி = நெருங்கி. 92

மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதின லுலகமுங் கேட்டதுவே.

உந்தி = வயிறு. 93

தெள்ளிய ஏனலிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட் டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச்
சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார முரலை வேட்டநெஞ்சே.

வள்ளை = வள்ளைக்கொடிபோன்ற காது. தொண்டை = கொவ்வைக் கனிபோன்ற இதழ். நித்திலம் = முத்து. 94

யான்றனே னுஞ்சொல் லிரண்டுங் கெட்டாலன்றி
[யாவருக்குந்
தோன்றது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றன் மருகன் முருகன்க்ரு பாகரன் கேள்வியினுற்
சான்றரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.

சூகரம் = பன்றி. 95

தடக்கொற்ற வேள்மயி லேயிடர் தீரத் தனிவிடில்நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே.

சக்ரதிடர் = சக்ரவாளகிரி. 96

சேலிற் றிகழ்வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தநந்தன் பணுமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே.

ஆலித்தல் = மயில் கூவுதல். 97

கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம்பாற் பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே.

நதி = ஆற்றுப்பெருக்கு (நிலையற்றது.) 98

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

தூவி = தோகை. 99

இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட் டியவா! கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே.

இடுதல் = அறஞ்செய்தல். 100

நூற்பயன்

சலங்காணும் வேந்தர்தமக்கு மஞ்சார் யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருகவி தான்கற் றறிந்தவரே.

சில பிரதிகளில் அதிகமாகக் காணப்பட்ட செய்யுட்கள்

திருவடி யுந்தண்டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.
இராப்பக லற்ற இடங்காட்டி யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே. (103)
செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே.
ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின் றிலேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே. (105)
கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே. (106)
சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

உ

ஓம குஹாய நம.

*(மங்களம்)

தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையுந்
தண்கழல்சி லம்புடன் கொஞ்சவேநின

தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தோடம ணைந்துநின் றன்புபோலக்

கண்டுறக டம்புடன் சந்தமகு டங்களும்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்

கண்களுமு கங்களுஞ் சந்திரநி றங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ

புண்டரிக ரண்டமுங் கொண்டபகி ரண்டமும்
பொங்கியெழ வெங்களங் கொண்டபோது

பொன்கிரியெ னஞ்சிறந் தெங்கினும் வளர்ந்துமுன்
புண்டரிகர் தந்தையுஞ் சிந்தைகூர

கொண்டநட னம்பதஞ் செந்திலிலு மென்றன்முன்
கொஞ்சிநட னங்கொளுங் கந்தவேளே

கொங்கைகுற மங்கையின் சந்தமண முண்டிடுங்
கும்பமுநி கும்பிடுந் தம்பிரானே.

---

*"தண்டையணி" முதல் "நிருதரார்க்கொரு" என்ற திருப்புகழ் வரை பாடுவது மரபு.

கந்தரநுபூதி

காப்பு.

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந் திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

நூல்

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே. 1

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீ யலையோ
எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. 2

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே. 3

வளைபட்டகைம் மாதொடு மக்க ளெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே. 4

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடந்தைய ரென் றயருஞ்
சகமாயையுள் நின்று தயங்குவதே. 5

திணியா னமனே சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்புமதோ
பணியா வென வள்ளி பதம் பணியுந்
தணியா வதிமோக தயாபரனே. 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனை தூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 7

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம்பொரு தானவ நாசகனே. 8

மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டு டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப் பயனே. 9

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. 10

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே. 11

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே. 12

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லு மவாவினையே. 14

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே. 15

பேராசை யெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந்தரனே. 16

யாமோதிய கல்வியு மெம்மறிவுந்
தாமேபெற வேலவர் தந்ததனாற்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே நடவீர் நடவீ ரினியே. 17

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூர பயங் கரனே. 18

வடிவுந் தனமும் மனமுங் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென்றொரு பாவி வெளிப் படினே. 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதாரண விக்ரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந்தரனே. 20

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூர விபாட ணனே. 21

காளைக் குமரேச னெனக்கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச் சுரபூபதி மேருவையே. 22

அடியைக் குறியா தறியா மையினல்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. 23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வே னருள் சேரவு மெண்ணுமதோ
சூர்வே ரொடுகுன்று தொளைத்தநெடும்
போர்வேல புரந்தர பூபதியே 24

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலேறிய சேவகனே, 25

ஆதார மிலே னருளைப் பெறவே
நீதா னொரு சற்று நினைந்திலையே
வேதாகம ஞான விநோதமனே
தீதா சுரலோக சிகாமணியே. 26

மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ
பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலேறிய வானவனே. 27

ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. 28

இல்லே யெனுமாயையி லிட்டனைநீ
பொல்லே னறியாமை பொறுத்திலையே
மல்லே புரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே. 29

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வா ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. 30

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே. 31

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே மலைகூ றிடு வாகையனே. 32

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென் றுவிடப் பெறுவேன்
மந்தா கினிதந்த வரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே. 33

சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காம லெனக்கு வரந் தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே
கங்கா நதி பால க்ருபாகரனே. 34

விதிகாணு முடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழ லென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின் 35
துதியா விரதா சுரபூ பதியே.

நாதா குமரா நமவேன் றரனுர்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. 36

கிரிவாய் விடுவிக் ரம *வேளிமையோர்
பரிவா ரமெனும் பதமே வலேயே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோடு மகந்தையையே. 37

ஆதாளியை யொன் றறியே னயறத்
தீதாளியை யாண் டதுசெப் புமதோ
கூதாள கிராத குலிக் கிறைவா
வேதாள கணம் புகழ்வே லவனே. 38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவேடனே யென் று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங்கர தேசிகனே. 39

வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோ டருவித் துறையோடு பசுந்
தினையோ டிதனோடு திரிந்தவனே. 40

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனுர் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னெபதேசிகனே. 41

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலே நிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியாமையு மற்றதுவே. 42

தூசா மணியுந் துகிலும் புனேவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே 43

* 'வேலிறையோன்' என்றும் பாடம்,

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமுங் கமழுங் கழலே. 44

கரவா கியகல்வி யுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப் பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயாபரனே. 45

எந்தாயுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த் தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே. 46

ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. 47

அறிவோன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவோன் றறநின் றபிரா னலையோ
செறிவோன் றறவந் திருளே சிதைய
வெறிவென் றவரோ டுறும் வேலவனே. 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ
மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே. 49

மதிகெட் டறவா டிமயங் கியறக்
கதிகெட் டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திர ஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே. 50

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே

உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருட் பெறுவேனே

இபமாமு கன்தனக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா

ஜெபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே.

கந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே

கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனே

தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா

செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

நிருத ரார்க்கொரு காலா ஜேஜெய
சுரர்க ளேத்திடு வேலா ஜேஜெய
நிமல னூர்க்கொரு பாலா ஜேஜெய விறலான

நெடிய வேற்படை யானேஜேஜெய
எனஇ ராப்பகல் தானே நான்மிக
நினது தாட்டொழு மாறே தானினி யுடனேதான்

தரையி னாழ்த்திரை யேழே போலெழு
16 பிறவி மாக்கட லூடே நானுறு
சவலை தீர்த்துன தாளே சூடியு னடியார்வாழ்

சபையி னேற்றியின் ஞான போதமு
மருளி யாட்கொளு மாறே தானது
தமிய னேற்குமு னேநீ மேவுவ தொருநாளே

தருவி னுட்டர சாள்வான் வேணுவி
னுருவ மாய்ப்பல நாளே தானுறு
தவசி னுற்சிவ னீபோய் வானவர் சிறைதீரச்

சகல லோக்கிய மேதா னுளூறு
மசுர பார்த்திப னோடே சேயவர்
தமரை வேற்கொடு நீறு யேபட விழமோதேன்

றருள ஏற்றம ரோடே போயவ
ருறையு மாக்கிரி யோடே தானையு
மழிய வீழ்த்தெதிர் சூரோ டேயம ரடலாகி

அமரில் வீட்டியும் வானோர் தானுறு
சிறையை மீட்டர னார்பால் மேவிய
அதிப ராக்ரம வீரா வானவர் பெருமாளே.

உ

வெற்றிவேலுற்ற துணை

வேல் விருத்தம்

மகரமள றிடைபுரள உரககண பணமவுலி
மதியுமிர வியுமலையவே
வளரெழிலி குடருழல இமையவர்கள் துயரகல
மகிழ்வுபெறு மறுசிறையவாஞ்
சிகரவரை மணிமறுகு தொறுநுளைய மகளிர்செழு
சேநெல்களோடு தரளமிடவே
சேகசிரப கிரதிமுத னதிகள்கதி பெறவுததி
திடரடைய நுகரும் வடிவேல்
தகரமிரு கமதமென மணமருவு கடகலுழி
தருகவுளு முறுவளெயிறுந்
தழைசெவியு நுதல்விழியு முடையவொரு கடவுள்மகிழ்
தருதுணைவ னமரர்குயிலுங்
குகரமலை யெயினர்குல மடமயிலு மெனவிருவர்
குயமொடமர் புரியுமுருகன்
குமரனறு முகனெதிரும் விருதுநிசி சரரணிகள்
குலையவிடு கொடியவேலே. 1

வெங்காள கண்டர்கைச் சூலமுந் திருமாயன்
வெற்றிபெறு சுடராழியும்
விபுதர்பதி குலிசமுஞ் சூரன் குலங்கல்லி
வெல்லா வெனக்கருதியே
சங்க்ராம நீசயித் தருளெனத் தேவருஞ்
சதுர்முகனு நின்றிரப்பச்
சயிலமொடு சூரனுட லொருநொடியி லுருவியே
தனியாண்மை கொண்ட நெடுவேல்
கங்காளி சாமுண்டி வாராகி யிந்த்ராணி
கௌமாரி கமலாசனக்
கன்னிநா ரணிகுமரி த்ரிபுரைபயி ரவியமலை
கௌரிகா மாட்சிசைவ
சிங்காரி யாமளை பவானிகார்த் திகைகொற்றி
த்ரியம்பகி யளித்தசெல்வச்
சிறுவனறு முகன்முருக னிருதர்கள்கு லாந்தகன்
செம்பொற் றிருக்கைவேலே. 2

வேதாள பூதமொடு காளிகா ளாத்ரிகளும்
வெகுளுறு பசாசகணமும்
வெங்கழு குடன்கொடி பருந்துசெம் புவனத்தில்
வெம்பசி யொழிக்கவந்தே
ஆதார கமடமுங் கணபண வியாளமும்
அடக்கிய தடக்கிரியெலாம்
அலையாட மிடுநெடுந் தானவர் நிணத்தசை
யருந்திப் புரந்த வைவேல்
தாதார் மலர்ச்சுனைப் பழநிமலை சோலைமலை
தனிப்பரங் குன்றேரகந்
தணிகைசெந் தூரிடைக் கழியாவி னன்குடி
தடங்கட லிலங்கையதனிற்
போதார் பொழிற்கதிர் காமத் தலத்தினைப்
புகழுமவ ரவர்நாவினிற்
புந்தியி மலர்ந்தவன் கந்தன் முரு கன்குகன்
புங்கவன் செங்கைவேலே. 3

அண்டருல குஞ்சுழல வெண்டிசைக ளுஞ்சுழல
அங்கியு முடன்சுழலவே
அலைகடல்க ளுஞ்சுழல அவுணருயி ருஞ்சுழல
அகிலதல முஞ்சுழலவே
மண்டல நிறைந்தரவி சதகோடி மதியுதிர
மாணப் பிறங்கியணியு
மணியொலியி னிற்சகல தலமுமரு ளச்சிரம
வகைவகையி னிற்சுழலும்வேல்
தண்ட முட னுங்கொடிய பாசமுட னுங்கரிய
சந்தமுட னும்பிறைகள்போற்
றந்தமுட னுந்தழலும் வெங்கணுட னும்பகடு
தன்புறம் வருஞ்சமனையான்
கண்டுகுலை யும்பொழுதி லஞ்சலென மென்சரண
கஞ்சமுத வுங்கருணைவேள்
கந்தன்முரு கன்குமரன் வண்குறவர் தம்புதல்வி
கணவனடல் கொண்ட வேலே. 4

ஆலமா யவுணருக் கமரருக் கமுதமா
யாதவனின் வெம்மையொளிமீ

தரியதவ முநிவருக் கிந்துவிற் றண்ணென்
றமைந்தன் பருக்கு முற்ரு
மூலமாம் விணையறுத் தவர்கள்வெம் பகையினை
முடித்திந்தி ரர்க்குமெட்டா
முடிவிலா நந்தனல் கும்பத மளித்தேந்த
மூதண்ட மும்புகழும்வேல்
ஏலமாம் யானையின் கோடதிற் சொரிமுத்து
மின்பணைக ளுமிழுமுத்து
மினிவாடை மான்மத மகிலோடு சந்தன
மிலவங்க நறவ மாருந்
தாலமா மரமுதற் பொருள்படைத் திடுமெயினர்
தருவநிதை *மகிழுந னையன்
தனிநடம் புரிசமர முருகனறு முகன்குகன்
சரவணக் குமரன் வேலே. 5

பந்தாட லிற்கழங் காடலிற் சுடரூசல்
பாடலினொ டாடலி னெலாம்
பழந்தெவ்வர் கட்கந் துணித்திந்தி ரற்கரசு
பாலித்த திறல் புகழ்ந்தே
சந்தாரு நாண்மலர்க் குழலரம் பையர்களுஞ்
சசிமங்கை யனையர் தாமுந்
தன்னையன் பொடுபாடி யாடும்ப்ர தாபமுந்
தலைமையும் பெற்ற வைவேல்
மந்தா கிநித்தரங் கச்சடில ருக்கரிய
மந்த்ரவுப தேச நல்கும்
வரதேசி கன்கிஞ்சு கச்சிகா லங்கார
வாரணக் கோடியு யர்த்தோன்
கொந்தார் மலர்க்கடம் புஞ்செச்சை மாலையுங்
குவளையுஞ் செங்காந்தளுங்
கூதாள மலருந் தொடுத்தணியு மார்பினன்
கோலத் திருக்கை வேலே. 6

அண்டங்க ளொருகோடி யாயினுங் குலகிரி
அநந்தமா யினுமேவினு
லடையவுரு விப்புறம் போவதல் லதுதங்க
லறியாது சூரனுடலைக்

*''குரவனையன்'' என்றும் பாடம்

கண்டம் படப்பொருது காலனுங் குலைவுறுங்
கடியகோலை புரியு மதுசெங்
கனகா சலத்தைக் கடந்துமுனை யிட்டுக்
கடக்கின்ற துங்கநெடுவேல்
தண்டந் தனுத்திகிரி சங்குகட் கங்கொண்ட
தானவாந் தகன் மாயவன்
தழல்விழிக் கொடுவரிப் பருவுடற் பஃறலைத்
தமனியச் சுடிகையின் மேல்
வண்டொன்று கமலத்து மங்கையுங் கடலாடை
மங்கையும் பதம்வருடவே
மதுமலர்க் கண்டுயில் முகுந்தனமரு கன்குகன்
வாகைத் திருக்கை வேலே. 7

மாமுதல் தடிந்துதண் மல்குகிரி யூடுபோய்
வலியதா னவர்மார் பிடம்
வழிகண்டு கமலபவ னத்தனைச் சிறையிட்டு
மகவான் றனைச் சிறைவிடுத்
தோமஇரு டித்தலைவ ராசிபெற் றுயர்வானி
லும்பர்சோற் றுதிபெற்றுநா
வுடையகீ ரன்றனது பாடல்பெற் றுலகுதனி
லோப்பில்புகழ் பெற்றவைவேல்
சோமகல சபரபா லங்கார தரஜடா
சூடிகா லாந்தகாலர்
துங்கரக்ஷ கத்ரோண கட்ககுலி சஞ்சூல
துரககே சரமாம்பரச்
சேமவட வாம்புயப் பரணசங் காபரண
திகம்பர த்ரியம்பகமகா
தேவநந் தனகஜா நநசகோ தரகுகன்
செம்பொற் றிருக்கை வேலே. 8

தேடுதற் கரிதான நவமணி யழுத்தியிடு
செங்கரனை யமுதம் வாய்கொள்
செயமளித் தருளெனக் கெனவுவப் பொடுவந்து
சேவடி பிடித்த தெனவும்
நீடுமைக் கடல்சுட்ட தற்கடைந் தெழுகடலு
நீயெமைக் காக்க வெனவும்

நிபுட முடி நெடியகிரி யெந்தமைக் காவெனவு
நிகழ்கின்ற துங்க நெடுவேல்
ஆடுமைக் கணபணக் கதிர்முடிப் புடையெயிற்
றடலெரிக் கோடியவுக்ர
அழல்விழிப் படுகோலைக் கடையகட் செவியினுக்
கரசினைத் தனியெடுத்தே
சாடுமைப் புயலெனப் பசுநிறச் சிகரியிற்
ருய்மித்த் துடனடிக்குஞ்
சமரமயில் வாகன னமரர்தொழு நாயகன்
சண்முகன் றன்கை வேலே. 9

வலாரியல லாகுலமி லாதகல வேகரிய
மா ரறியு நாலு மறைநூல்
வலானலை விலானசி விலான்மலை விலாணிவர்
மனோலய வுலாசமுறவே
யுலாவரு கலோலமக ராலய சலங்களு
முலோகநிலை நீர்நிலையிலா
வொலாவொலி நிசாசர ருலோகம தெலாமழ
லுலாவிய நிலாவு கோலைவேல்
சிலாவட கலாவிநோத வாசிலிமு காவிலோச
ஞசின சிலாத ணிவிலா
சிலாமல ரேலாமதிய மோதிமதி சேலொழிய
சேவக சராப முகிலாம்
விலாசகலி யாணகலை சேரபசு மேலைமுலை
மேவிய விலாச வகலன்
விலாழியி னிலாழியகல் வானிலன லாரவிடு
வேழமினை ஞன்கை வேலே. 10

உ
மயிலுமயிலுந் துணை

மயில் விருத்தம்

— ✻ —

காப்பு

சந்தன பாளித குங்கும புளகித
சண்பக கடகபுயச்
சமர சிகாவல குமர சடானன
சரவண குரவணியுங்
கோந்தள பாரகி ராதபு ராதநி
கோண்க வெனப்பரவுங்
கூதள சீதள பாத மெனக்கருள்
குஞ்சரி மஞ்சரிதோய்
கந்தக்ரு பாகர கோமள கும்பக
ராதிப மோகரத
கரமுக சாமர கர்ண விசால
கபோல விதானமதத்
தெந்த மகோதர மூஷிக வாகன
சிந்துர பத்மமுகச்
சிவசுத கணபதி விக்ந விநாயக
தெய்வ சகோதரனே.

நூல்

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீமுகச்
சரணயுக ளமிர்தப்ரபா
சந்த்ரசே கரமூஷி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங்கனச்
சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன்முதற்
சிவனைவலம் வருமளவி லுலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாப மயிலாம்
மந்தா கிநிப்பிரப வதரங்க விதரங்க
வனசரோ தயகிர்த்திகா

வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
வராசலன் குலிசாயுதத்
திந்த்ராணி மங்கல்ய தந்துரட் சாபரண
இகல்வேல் விநோத னருள்கூ
ரிமையகிரி குமரிமக னேறுநீ லக்ரீவ
ரத்நக் கலாப மயிலே. 1

சக்ரப் ரசண்ட கிரி முட்டக் கிழிந்துவெளி
பட்டு க்ரவுஞ்ச சயிலந்
தகரப் பெருங்கனக சிகரச் சிலம்புமெழு
தனிவெற்பு மம்புவியுமெண்
டிக்குத் தடங்குவடு மொக்கக் குலுங்கவரு
சித்ரப் பதம் பெயரவே
சேடன்முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சூரர்
திடுக்கிட நடிக்கு மயிலாம்
பக்கத்தி லொன்றுபடு பச்சைப் பசுங்கவுரி
பத்மப் பதங் கமழ்தரும்
பாகீ ரதிச்சடில யோகீ சுரர்க்குரிய
பரம வுபதேச மறிவிக்
கைக்குச் செழுஞ்சரவ ணத்திற் பிறந்தவொரு
கந்தச் சுவாமி தணிகைக்
கல்லார கிரியுருக வருகிரண மரகத
கலாபத்தி லிலகு மயிலே. 2

ஆதார பாதளம் பெயரவடி பெயரமூ
தண்டமுக டதுபெயரவே
யாடரவ முடிபெயர எண்டிசைகள் பெயரவெறி
கவுட்கிரி சரம் பெயரவே
வேதாள தாளங்க ளுக்கிசைய ஆடுவார்
மிக்குப் ரியப்படவிடா
விழிபவுரி கவுரிகண் டுளமகிழ விளையாடும்
விஸ்தார நிர்த்த மயிலாம்
மாதாநு பங்கியெனு மாலது சகோதரி
மகீதரி கிராத குலிமா
மறைமுநி குமாரிசா ரங்கனந் தனிவந்த
வள்ளிமணி நூபுர மலர்ப்

பாதார விந்தசே கரனேய மலருமுற்
பலகிரி யமர்ந்த பெருமாள்
படைநிருதர் கடகமுடை படநடவு பச்சைப்
பசுந்தோகை வாகை மயிலே. 3

உககோடி முடிவின்மண் டியசண்ட மாருத
முதித்ததென் றயனஞ்சவே
ஒருகோடி யண்டரண் டங்களும் பாதாள
லோகமும் பொற்குவடுறும்
வெகுகோடி மலைகளு மடியினிற் றகர்ந்திரு
விசும்பிற் பறக்க விரிநீர்
வேலைசுவ றச்சுரர் நடுக்கங் கொளச்சிறகை
வீசிப் பறக்கு மயிலாம்
நககோடி கொண்டவுணர் நெஞ்சம் பிளந்துதர
கேசரி முராரி திருமால்
நாரணன் கேசவன் சீதரன் தேவகீ
நந்தனன் முகுந்தன் மருகன்
முககோடி நதிகரன் குருகோடி யநவரத
முகிலுலவு நீல கிரிவாழ்
முருகனுமை குமரனறு முகனடவு விகடதட
மூரிக் கலாப மயிலே. 4

சோதியிம வேதண்ட கன்னிகையர் தந்தவபி
நயதுல்ய சோம வதன
துங்கத்ரி சூலத்ரி கங்காளி சிவகாம
சுந்தரி பயந்த நிரைசே
ராதிநெடு மூதண்ட அண்டபகி ரண்டங்க
ளியாவுங் கொடுஞ்சிறகினு
லணையுந்த னதுபேடை யண்டங்க ளென்னவே
யணைக்குங் கலாப மயிலாம்
நீதிமறை யோதண்ட முப்பத்து முக்கோடி
நித்தரும் பரவு கிரியாம்
நீலகிரி வேலவ னிராலம்ப நிர்ப்பய
னிர்வியா குலன் சங்குவாள்
மாதிகிரி கோதண்ட தண்டந் தரித்தபுயன்
மாதவன் முராரி திருமால்

மதுகைட வாரிதிரு மருகன்முரு கன்குமரன்
வரமுதவு வாகை மயிலே. 5

சங்கார காலமென அரிபிரமர் வெருவுறச்
சகல லோகமு நடுங்கச்
சந்த்ரசூ ரியரோளித் திந்த்ராதி யமரருஞ்
சஞ்சலப் படவுமையுடன்
கங்காளர் தனிநாட கஞ்செய்த போதந்த
காரம் பிறந்திடநெடுங்
ககனகூ டமுமேலை முகடுமு டியபசுங்
கற்றைக் கலாப மயிலாஞ்
சிங்கார குங்கும படீரம்ருக மதயுகள
சித்ரப் பயோதரகிரித்
தெய்வவா ரணவநிதை புனிதன் குமாரன்
திருத்தணி மகீதரனிருங்
கெங்கா தரன்கீத மாகிய சுராலய
க்ருபாகரன் கார்த்தி கேயன்
கீர்த்திமா வசுரர்கள் மடியக்ர வுஞ்சகிரி
கிழிபட நடாவு மயிலே. 6

தீரப் பயோததி திக்குமா காயமும்
சேகதலமு நின்று சுழலத்
திகழ்கின்ற முடிமவுலி சிதறிவிழ வெஞ்சிகைத்
தீக்கோப் புளிக்க வெருளும்
பாரப் பணமுடி யநந்தன்முத லரவெலாம்
பதைபதைத் தேநடுங்கப்
படர்சக்ர வாளகிரி துகள்படவை யாளிவரு
பச்சைப்ர வாள மயிலாம்
ஆரப்ர தாபபுள கிதமதன பாடீர
அமிர்தகலசக் கொங்கையாள்
ஆடுமயில் நிகர்வல்லி அபிராம வல்லிபர
மாநந்த வல்லி சிறுவன்
கோரத்ரி சூலத்ரி யம்பக ஜடாதார
குருதரு திருத்தணிகைவேள்
கோடியநிசி சரருதர மெரிபுகுத விபுதர்ப்பதி
குடிபுகுத நடவு மயிலே. 7

சேக்கரள கேசசிக ரத்நபுரி ராசிநிரை
சிந்தப் புராரி யமிர்தந்
திரும்பப் பிறந்ததென ஆயிரம் பகுவாய்கள்
தீவிஷங் கோப்புளிப்பச்
சக்ரகிரி சூழவரு மண்டலங் கள்சகல
சங்கார கோர நயனத்
தறுகண்வா சுகிபணு முடியெடுத் துதறுமோரு
சண்டப்ர சண்டமயிலாம்
விக்ரம கிராதகுலி புனமீ துலாவிய
விருத்தன் திருத்தணிகைவாழ்
வேலாயு தன்பழ வினைத்துய ரறுத்தெனை
வெளிப்பட வுணர்த்தி யருளித்
துக்கசுக பேதமற வாழ்வித்த கந்தச்
சுவாமிவா கனமானதோர்
துரககஜ ரதகடக விகடதட நிருதர்குல
துஷ்டர் நிஷ்டூர மயிலே. 8

சிகரதம னியமேரு கிரிரசத கிரிநீல
கிரியெனவு மாயிரமுகத்
தெய்வநதி காளிந்தி யெனநீழ லிட்டுவெண்
திங்கள்சங் கெனவும்ப்ரபா
நிகரெனவு மெழுதரிய நேமியென வுலகடைய
நின்றமா முகிலென்னவே
நெடியமுது ககனமுக டுறவீசி நிமிருமோரு
நீலக்கலாப மயிலாம்
அகருமரு மணம்வீசு தணிகையபி ராமவே
ளடியவர்கள் மிடியகலவே
யடல்வேல் கரத்தசைய ஆறிரு புயங்களி
லலங்கற் குழாமசையவே
மகரகன கோமளக் குண்டலம் பலவசைய
வல்லவுணர் மனமசையமால்
வரையசைய உரகபில மசையவெண் டிசையசைய
வையாளி யேறு மயிலே. 9

நிராசத விராசத வரோதய பராபர
னிராகுல னிராமய பிரா

னிலாதெழு தலாலற மிலானெறி யிலானெறி
நிலாவிய வுலாசவி தயன்
குராமலி விராவுமிழ் பராரை யமராநிழல்
குராநிழல் பராவு தணிகைக்
குலாசல சராசர மெலாமினி துலாவிய
குலாவிய கலாப மயிலாம்
புராரிகும ராகுரு பராவெனும் வரோதய
புராதன முராரி மருகன்
புலோமசை சலாமிடு பலாசன வலாரிபுக
லாகுமயி லாயுதனெடுந்
தராதல கிராதர்கள் குலாதவபி ராமவல
சாதனன் வினோத சமரன்
தடாரி விகடாசுரன் குடாரித படாதிகழ்
சடாநந னடாவு மயிலே. 10

எந்நாளு மொருசுனையி லிந்த்ரநீ லப்போ
திலங்கிய திருத்தணிகைவாழ்
எம்பிரா னிமையவர்கள் தம்பிரா னேறுமொரு
நம்பிரா ஞான மயிலைப்
பன்னாளு மடிபரவு மருணகிரி நாதன்
பகர்ந்தவதி மதுர சித்ரப்
பாடல்தரு மாசறு விருத்தமொரு பத்தும்
படிப்பவர்க ளாதி மறைநூல்
மன்னான் முகம்பெறுவ ரன்னமே றப்பெறுவர்
வாணிதழு வப்பெறுவரால்
மகரால யம்பெறுவ ருவணமே றப்பெறுவர்
வாரிச மங்கையுடன் வாழ்
அந்நாய கம்பெறுவ ரயிராவ தம்பெறுவ
ரமுதா சனம்பெறுவர்மே
லாயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர்பெறுவர்
அழியா வரம்பெறுவரே. 11

— O —

உ

பகழிக்கூத்தர் அருளிச்செய்த

திருச்செந்தூர்ப்

பிள்ளைத்தமிழ்

பாம்பா லுததி தனைக்கடைந்து
படருங் கொடுங்கார் சொரிமழைக்குப்
பரிய வரையைக் குடைகவித்துப்
பசுக்கள் வெருவிப் பதருமற்

காம்பா லிசையின் றெனியழைத்துக்
கதறுந் தமரக் காளிந்திக்
கரையி னிரைப்பின் னேநடந்த
கண்ணன் மருகா முகையுடைக்கும்

பூம்பா சடைப்பங் கயத்தடத்திற்
புனிற்றுக் கவரி முலைநெறித்துப்
பொழியு மமுதந் தனைக்கண்டு
புனலைப் பிரித்துப் பேட்டெகினந்

தீம்பால் பருகுந் திருச்செந்தூர்ச்
செல்வா தாலோ தாலேலோ
தெய்வக் களிற்றை மணம்புணர்ந்த
சிறுவா தாலோ தாலேலோ. 1

மங்கல மங்கலநூ லெங்குமொ ழிந்தனர்காண்
வானோ ரேனோர்போய்
வந்துவ ணங்கினர்மே லந்தர துந்துபிகேள்
வாரூ டாடாதே

கொங்கைசு மந்திடைநூ லஞ்சும ணங்கனையார்
கூடா தூடாரோ
கொண்டவ ரந்தருவா யண்டர்பெருந்தவமே
கோமா ரமாநீ

செங்கம லந்தனிலே பைங்குமு தங்களிலே
சேல்பாய் வாஞடா
தென்றலு டன்தமிழ்தேர் தென்பொதி யம்பயில்வாழ்
தேஞர் தார்மார்பா

சங்குவ லம்புரிசூழ் செந்தில்வ ளம்பதியாய்
தாலோ தாலேலோ
சங்கரி தன்குமரா மங்கையர் தங்கணவா
தாலோ தாலேலோ. 2

அரவுசிறு பிறையிதழி திரிபதகை பொதிசடிலர்
பாலா வேலாதே
ரருணவெயி லிரவிசுழ லிமகிரியி லரிவைபெறு
வாழ்வாய் வாழ்வோனே

குரவருள மகிழவுயர் குருவடிவு தருபெருமை
கோடாய் தாடாளா
குமரகுரு பரமுருக குதலைமொழி தெரியவுரை
கூருய் மாருதே

யிரவலரு முனிவர்களு மிமையவரு முனதடிமை
யாமே யாமேநீ
யெமைமுனியி லொருதுணையு மிலையடிமை யடிமையென
வீழ்வார் சூழ்வார்பார்

பரசமய குலகலக சிவசமய குலதிலக
தாலோ தாலேலோ
பணிலமுமிழ் மணியையலை யெறியுநகர் வருகடவுள்
தாலோ தாலேலோ. 3

உ

முருகா

திருமுருகாற்றுப்படை

[நக்கீரதேவர் அருளியது]

1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் போதுளிய பராரை மராஅத்து
உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்
பல்காசு நிறைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலோடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்
சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியோடு வலம்புரி வயின்வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்

கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்
சூரர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்
சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதிற் பிணர்மோட்டு
உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்இசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்

நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர்அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்து உறைதலும் உரியன்; அதா அன்று,

2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கிற் கடுநடைக்
கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந்து அன்ன வேழமேல் கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்உறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகைஅமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே
மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே, ஒருமுகம்

சேறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே,ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியோடு நகை அமர்ந்தன்றே ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை
உக்கம் சேர்த்தியது ஒருகை
நலம்பெறுகலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை
அங்குசம் கடாவ ஒருகை இருகை
ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப, ஒருகை
மார்போடு விளங்க ஒருகை
தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை
நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட, ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வால்வளை ஞரல
உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பாறாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே; அதா அன்று,

3. திருவாவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந்து இயங்கும் யாக்கையர் நன்பகல்
பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்

கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை
யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந்து அன்ன மாசில் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோய்இன்று இயன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர் இன்நகைப்
பருமம் தாங்கிய பணிந்தேந்து அல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளக்கக்
கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்
புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய
உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்
பகலில் தோன்றும் இகலில் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்

மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீஎழுந் தன்ன திறலினர் தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கின்தம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கோட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன்; அதா அன்று,

4. திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்; அதா அன்று,

5. குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி

இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வாலிணர் இடைஇடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலம்
கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி
மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்றுதோறாடலும் நின்றதன் பண்பே; அதாஅன்று,

6. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி

சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழி
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண்டு ஆயினும் ஆகக் காண்தக
முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்ம
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ
குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும்பெறல் மரபிற் பெரும்பெயர் முருக

நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராளர
அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின் அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின் அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய்எனக்
குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி
அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி
அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி அளைஇ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளைஇய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறல்அரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர்இறல் சிதைய நன்பல
ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று

நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்ஏறு சிலைப்பச் சேண்நின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழவோனே.

—●—

குன்ற மெறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் னுள்ளத் துறை. 1

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல். 2

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்தவே லுண்டே துணை. 3

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும். 4

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன் [கைக்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—பன்னிரு
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்திவாழ் வே. 5

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன். 6

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 7

காக்கக் கடவியநீ காவா திருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்குங்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்கா யினி. 8

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும். 10

— ○ —

உ

திருப்புகழ் அஷ்டோத்தர சத திவ்வியநாமங்கள்

ஓம் போத நிர்க்குண போதா நமோ நம
,, நாத நிஷ்கள நாதா நமோ நம
,, பூரணக் கலை சாரா நமோ நம
,, பஞ்சபாண பூபன் மைத்துன பூபா நமோ நம
,, நீப புஷ்பக தாளா நமோ நம
,, போக சொர்க்கபு பாலா நமோ நம
,, சங்கமேறும் மாதமிழ்த்ரய சேயே நமோ நம
,, வேத னத்ரய வேளே நமோ நம

ஓம் வாழ் சகத்ரய வாழ்வே நமோ நம
,, வேத வித்தகா சாமீ நமோ நம 10
,, வேல் மிகுத்த மாசூரா நமோ நம
,, வீம சக்ரயூ காளா நமோ நம
,, விந்துநாத வீரபத்ம சீர்பாதா நமோ நம
,, நீலமிக்க கூதாளா நமோ நம
,, மேக மொத்த மாயூரா நமோ நம
,, விண்டிடாத போத மோத்தபேர் போதா நமோ நம
,, பூத மற்றுமே யானாய் நமோ நம
,, பூரணத்துளே வாழ்வாய் நமோ நம
,, துங்கமேவும் பூதரத்தேலாம் வாழ்வாய் நமோ நம
,, ஆறிரட்டி நீள் தோளா நமோ நம 20
,, பூஷணத்துமா மார்பா நமோ நம
,, ஆர்யை பெற்ற சீராளா நமோ நம
,, சூரையட்டு நீள் பேரா நமோ நம
,, ஆரணத்தினர் வாழ்வே நமோ நமோ நம
,, சீதள வாரிஜ பாதா நமோ நம
,, நாரத கீத விநோதா நமோ நம
,, சேவல மாமயில் ப்ரீதா நமோ நம
,, மறை தேடுஞ் சேகரமான ப்ரதாபா நமோ நம
,, ஆகம சார சொரூபா நமோ நம
,, தேவர்கள் சேனை மகீபா நமோ நம 30
,, கதி தோயப் பாதக நீவு குடாரா நமோ நம
,, மாவசுரேச கடோரா நமோ நம
,, பாரினிலே ஜய வீரா நமோ நம
,, மலைமாது பார்வதியாள்தரு பாலா நமோ நம
,, நாவல ஞான மனோலா நமோ நம
,, பால குமார சுவாமீ நமோ நம
,, நாத விந்து கலாதீ நமோ நம
,, வேத மந்த்ர சொரூபா நமோ நம
,, ஞான பண்டித சாமீ நமோ நம
,, வெகு கோடி நாமசம்பு குமாரா நமோ நம 40
,, போக அந்தரி பாலா நமோ நம
,, நாகபந்த மயூரா நமோ நம
,, பரசூரர் சேததண்ட விநோதா நமோ நம
,, கீத கிண்கிணி பாதா நமோ நம

ஓம் தீர சம்ப்ரம வீரா நமோ நம
,, கிரிராஜ தீபமங்கள ஜோதீ நமோ நம
,, தூய அம்பல லீலா நமோ நம
,, தேவ குஞ்சரி பாகா நமோ நம
,, போதகந் தரு கோவே நமோ நம
,, நீதி தங்கிய தேவா நமோ நம 50
,, பூதலந் தனை யாள்வாய் நமோ நம
,, பணியாவும் பூணுகின்ற பிரானே நமோ நம
,, வேடர் தங்கோடி மாலா நமோ நம
,, போதவன் புகழ் சாமீ நமோ நம
,, அரிதான வேத மந்திர ரூபா நமோ நம
,, ஞான பண்டித நாதா நமோ நம
,, வீர கண்டை கோள் தாளா நமோ நம
,, அழகான மேனி தங்கிய வேளே நமோ நம
,, வான பைந்தொடி வாழ்வே நமோ நம
,, வீறு கொண்ட விசாகா நமோ நம 60
,, சிவசிவ ஹரஹர தேவா நமோ நம
,, தெரிசன பரகதி யானாய் நமோ நம
,, திசையினு மிசையினும் வாழ்வே நமோ நம
,, செஞ்சொல் சேரும் திருதருகலவி மணாளா நமோ நம
,, திரிபுர மெரிசெய்த கோவே நமோ நம
,, ஜெயஜெய ஹரஹர தேவா நமோ நம
,, உம்பர்கள் ஸ்வாமீ நமோ நம
,, எம்பெருமானே நமோ நம
,, ஒண்டொடி மோகா நமோ நம
,, சரவண ஜாதா நமோ நம 70
,, கருணைய தீதா நமோ நம
,, சததள பாதா நமோ நம
,, அபிராம தருணக தீரா நமோ நம
,, நிருபமர் வீரா நமோ நம
,, சமதள வூரா நமோ நம
,, ஜகதீச பரம சொரூபா நமோ நம
,, சுரர்பதி பூபா நமோ நம
,, பரிமள நீபா நமோ நம
,, உமைகாளி பகவதி பாலா நமோ நம 80
,, இகபர மூலா நமோ நம

ஓம் பவுருஷ சீலா நமோ நம
,, சத்தி பாணீ நமோ நம
,, முத்தி ஞானீ நமோ நம
,, தத்வ ஆதீ நமோ நம
,, விந்துநாத சத்துருபா நமோ நம
,, ரத்ன தீபா நமோ நம
,, தற்பர தாபா நமே நம
,, சிங்கார ரூப மயில்வாகன நமோ நம
,, கந்தா குமாரசிவ தேசிக நமோ நம
,, சிந்தூர பார்வதி சுதாகர நமோ நம 90
,, விருதோகை சிந்தான சோதி கதிர்வேலவ நமோ நம
,, கங்காள வேணிகுரு வானவ நமோ நம
,, அரிமருகோனே நமே நம
,, அறுதி யிலானே நமோ நம
,, அறுமுக வேளே நமோ நம
,, அரகர சேயே நமோ நம
,, இமையவர் வாழ்வே நமோ நம
,, அருண சோருபா நமோ நம
,, தென்பரங் குன்றுறை தேவா நமோ நம
,, செந்திலம் பதிவளர் சேயே நமோ நம 100
,, தென்பழநிமலை மேவு தீரா நமோ நம
,, திருவே ரகத்திலுறை தேனே நமோ நம
,, குன்றுதோ ருடல்புரி குமாா நமோ நம
,, பழமுதிர் சோலை வளர் பதியே நமோ நம
,, மயில்மிசை வருமோரு வாதா நமோ நம
,, சேகர வாரண வேல்வீரா நமோ நம
,, மைவருங் கண்டத்தர் மைந்தா நமோ நம
,, குருவாய் வருவாய் குகனே நமோ நம 108

நாநாவித மந்த்ர பரிமள பத்திர புஷ்பாணிம் சமர்ப்பயாமி.

— ○ —

அரும்பதவுரை

— ○ —

திருப்புகழ்

காப்பு 1. மத்தம்=ஊமத்தம், மட்டு=தேன். 2. தேனு=காமதேனு. மணி=சிந்தாமணி. 3. பக்கரை=அங்கவடி. கல்லணை=சேணம். நீபம்=கடம்பு. செய்ப்பதி=வயலூர். 4. கடி=வாசனை. அடையலர்=பகைவர். நூல்: 1. அத்தி=தெய்வ யானை. இருவர்=மால் பிரமர். கழுது=பேய். 2. தொண்டை=கொவ்வை. 3. எண்குு=கரடி. 5. சயிலம்=மலை. 6. நறை=வாசனை. மிடறு=குரல். கஞ்சுகி=பாம்பு, ஆதிசேடன். 11. கடும்பு=சுற்றம். நவிர்=மயிர். நகில்=முலை. பயல்=பால். 15. அந்தி பகல்=நினைப்பு மறப்பு. கொந்து=மலர்க் கொத்து. 16. நம்பில்=விரும்பில். காசு=குற்றம். 17. சங்கை=கணக்கு. ஆகண்டலன்=இந்திரன். 19. குமுதபதி=சந்திரன். குடிலம்=வளைவு. 21. கணி=வேங்கைமரம். 22. பாடீரம்=சந்தனம். 24. அலரி=சூரியன். முளரி=அக்கினி. வனமாலி=திருமால். மதலை=கப்பல். 25. கமலமாது=சரச்சுவதி. இந்திரை=இலக்குமி. ஓதி=பெண்மயிர். 36. தகரம்=வாசனை. தவனம்=ஆசை. 39. மாழை=பொன். 41. இரும்பை=இலுப்பை. வகுளம்=மகிழ். 42. அசுழம்=நாய். உற்பனம்=தோற்றம். 43. இதழி=கொன்றை. தாகி=தாதகி; ஆத்தி. (இடைக்குறை) 52. நடு=உடலில் மையஇடம். தூண்வழி=சுழுமுனை மார்க்கம். பாலங்கிளராறு=நெருப்பாறு; மயிர்ப்பாலம் போல்வன. துடி=உடுக்கை. 62. சே=இடபம். தேரார்கள்=பகைவர்கள். 69. கறை=குற்றம். கருமவசனம்=ஞானமார்க்கத்திற்குப் பொருந்தாத மந்திரங்கள். 76. வாகை=வெற்றி. வேலை=கடல். 80. புகலி=சீர்காழி. ரசதம்=வெள்ளி. 82. உணக்கை=உண்ணக்கை என விரிக்க. ஒருத்தி=மங்கையர்க்கரசியார். 83. ஓதம்=நீர். எட்டிகை=எண்திகை 87. திலம்=எள். செமித்தது=சேமித்தது. 93. அம்போருகன்=பிரமன். நௌவி=மான். 94. மாகம்=ஆகாயம். ஏனல்=தினைப்புனம். நாகம்=மலை. 98. அபிஷேகம்=முடி. சீமூதம்=மேகம். வலாரி=இந்திரன். அபிராமம்=அழகு. 99. அசபை=அஜபாநலம். 101. தழலாடிவீதி=நெற்றி. வட்டம்=புருவமையம். 107. ஆகாரம்=உடம்பு. இரணியம்=பொன். வசு=நெருப்பு. 109. குவாகுவாகனர்=குவா ஆகுவாகனர். ஆகு=பெருச்சாளி. ,பாணிற=பானுநிறம். சோரி=உதிரம். 110 [illegible] = மூலாதாரகமலம். மன் முதற்சலசம்=சுவாதிஷ்டான முதல் ஆக்கினை ஈருக உள்ள ஆதார கமலங்கள். மூனுபதி=சந்திர சூரியாக்கினி மும்மண்டலங்கள். நூறுபத்தினுடெட்டு இதழ்=சகஸ்திராரகமலம். மூலவாசல்=பிரமரந்திரம்.

மத்திகை=குதிரைச் சம்மட்டி. 115. கொக்கு=மாமரம் (சூரன்). 122. தமர=ஒலி. குரம்=குளம்பு. தாடி=தாவடி; பிரயாணம். (இடைக்குறை). 126. கமர்=வெடிப்பு. அளறு=சேறு. 129. சுரர் தெரியல்=தெய்வ மலர்மாலை. பூரை=குறைவின்மை. 134. கட்டி=பிராணவாயுவைக் கட்டி. 136. மச்சம்=மஞ்சம், கட்டில். பொய்ச்சினம்=பொய்ச்சின்னம். பொக்கணம்=ஒருவகைத் திருநீற்றுப்பை. 137. நாரணபுரம்=மணிபூரகம். சந்தி ஆறில்= ஆருதாரத்தில். ஆலம்=நீர். கலி=கல்லி; தோண்டி; வேரறுத்து. 145. வாசி=வட்டிக்கு மேலும் வாங்கும் பணம். 154. உடு= நட்சத்திரம். கொடிகள்=காக்கைகள். 165. விரகு=வஞ்சனை. சிலோச்சய=மலை. சம்பராரி=மன்மதன். 165. அலகு=கணக்கு. வனசரி=வள்ளியம்மை. 176. நடுதூண்=முதுகெலும்பு. வண்கயிறு=சுழுமுனை. 178. மாசாத்திரம்=மகாசாத்திரம். காத்தமைந்தனை=காத்து அமைந்த அன்னை. 189. நிரை=பசுக்கள். 193. அளி=வண்டு. மாத்ருகா=மாத்ருகா அட்சரங்களான ஐம்பத்தோரெழுத்துக்கள். 196. ஆறுத=கெடாத. புற்புதம்=நீர்க் குமிழி. 204. நிமிடம்=நெருக்கம். ககனபுனிதை=கங்காதேவி. 211. மாண்டார்=மாட்சிமை.

திருவகுப்பு

1. உததி=கடல். மலினம்=மாசு. தருணவுடுபதி=இளம் பிறைமதி. அபிஷேகம்=முடி. ஒடியல்=பனங்கிழங்குப் பிளவு. எறுழி=பன்றி. மதுபம்=தேன்; வண்டு. முகரிதம்=பேரறிவு. நீலகிரி=திருத்தணி. 2.மறச்சிறுமி=வள்ளியம்மை. கசக்கடவுள்= இந்திரன். நிகளம்=விலங்கு. 4. மதாணி=மார் பதக்கம். தத்தை=கிளி; (தேவயானை). சிகாவலம்=மயில். நிகளம்=விலங்கு. 8. மிடலிறை=சிவபிரான். அருள்சுதன்=ஐயனார். எழிலி=மேகம். உரும்=இடி.

மங்களம்

பவுரி=கூத்து. புண்டரிகர்=பிரமதேவர்.

அநுபூதி

8. பிமரம்=மயக்கம். 10. வலாரி=இந்திரன். 11 நாகாசலம்=திருச்செங்கோடு. 21. கருதா மறவா நெறி=நினைப்பு மறப்பற்றநிலை. விபாடணன்=பிளந்தவன். 39. மூவேடணை= தனேடணை, புத்ரேடணை, தாரேடணை. 40. இதண்=பரண். 43. ஆசாநிகளம்=ஆசையாகிய விலங்கு. 47. ஆருறு=முப்பத்தாறு தத்துவங்கள். 49. கின்னம்=துயரம்.

—●—